www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 8/50
டிச.06-12,1994

RISHANA PICTURE PALACE
MAIN STREET
PASSARA

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 37



மனிதாபிமான பிரச்சனைகளை எதிர்நோக்கும் படையினர்
அரசியல் அலசல்

காமினியின் இணைப்பும் ஜனாதிபதியின் நினைப்பும்!
எக்ஸ்ரே ரிப்போர்ட்

நங்கையரின் நக அழகு
லேடீஸ் ஸ்பெசல்

கடலுக்குள் காதல்
சுவாரசியமான தகவல்

சினிவிசிட்

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## மேற்கொண்டு வெற்றியடைதல்

"சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கரங்களின் கீழே நசுக்கிப் போடுவார்."
ரோமர் 16:29

நேற்று ஆராய்ந்த வாக்குறுதியை இது சிறப்பாகத் தொடர்கிறது. குதிக்காலில் காயம் அடைவதில் மட்டும் அல்லாமல் தீயவனை மேற்கொள்வதிலும் நாம் நம் உடன்படிக்கையின் தலைவரை ஒத்திருக்க வேண்டும் என்பது தெளிவாய்த் தெரிகிறது. பழைய வலுசர்ப்பம் நம் கால்களின் கீழேயும் நசுக்கிப் போடப்படும். ரோமா புரியில் இருந்த விசுவாசிகள் அவர்கள் சபையில் ஏற்பட்டிருந்த சச்சரவுகளினால் துயரம் அடைந்திருந்தார்கள். ஆனால் "சமாதானத்தின் கடவுளான" அவர்கள் கடவுள் அவர்கள் ஆன்மாவுக்கு இளைப்பாறுதல் அளித்தார். தந்திரமான எதிரி விழிப்பாய் இராதவர்களின் கால்கள் தடுமாறவும் ஆவியில் எளியவர்களின் இதயம் ஏமாற்றம் அடையவும் செய்வான். ஆனால் அவனோ தோல்வியடைவான். அவன் துன்பம் கொடுத்தவர்களின் கால்களால் மிதிக்கப்படுவான்.

கடவுளின் மக்களுக்கு ஏற்படும் இந்த வெற்றி அவர்கள் சொந்த திறமையினால் அல்லது ஆற்றலினால் ஏற்படாது. கடவுளே சாத்தானை நசுக்கிப்போடுவார். அவன் அவர்கள் கால்களின் கீழே நசுக்கப்பட்டாலும் அது கடவுளாலேயே நிறைவேறும்.

நாம் தைரியமாகச் சோதனைக் காரனை மிதித்துப் போடுவோமாக.

# ஆன்மீகம்

இழிவான ஆவிகள் மட்டுமல்லாமல் இருளின் அதிபதியும் நம்மால் தோல்வியடைவான். நாம் சந்தேகப்படாமல் கடவுளின் மேல் உறுதியான நம்பிக்கை வைத்து சீக்கிரம் கிடைக்கப் போகும் வெற்றியை எதிர்பார்த்து இருப்போமாக! "சீக்கிரம்" என்பது மகிழ்ச்சி அளிக்கும் சொல் ஆகும். சீக்கிரத்தில் நாம் பழைய பாம்பை மிதித்துப் போடுவோம். தீமையை நசுக்கிப் போடுவது எவ்வளவு மகிழ்ச்சி அளிப்பதாகும்! சாத்தானுக்கு அவன் தலை மனிதரின் கால்களால் நசுக்கப்படுவது எவ்வளவு மானக் கேடாகும். இயேசுவின் மேலுள்ள நம்பிக்கையினால் சோதனைக் காரனை மிதித்துப்போடுவோமாக!

**குணத்தி பிரபா**
**கனடா.**



## நேர்மை

ஒருநாள் உவைஸ்கர்னீ (றழ்) இலைகளைப் பொறுக்குவதற்காக வெளியே சென்றிருந்தார். தொடர்ந்து மூன்று நாட்கள் எதையுமே உண்ணாததால் அவருக்கு இலைகளைப் பொறுக்கி உண்ணவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அப்போது வீதியில் தங்க நாணயங்கள் சிதறிக் கிடந்தன. "யாராவது தவறிப் போட்டு விட்டுச் சென்ற நாணயங்களாக இருக்கலாம்" என்று எண்ணியவராக தொடர்ந்தும் நடந்து கொண்டிருந்தார். சிறிது தூரம் சென்றபின்பு ஓர் ஆடு உரொட்டித்துண்டொன்றை வாயில் கௌவிக் கொண்டு வந்து அவர்முன் போட்டது. "யாராவது வைத்திருந்த உரொட்டித்துண்டை இந்த ஆடு திருடிக்கொண்டு வந்திருக்கும்." என்று எண்ணிக்கொண்டு மீண்டும் நடக்க முற்பட்டார். அப்போது அவ்வாடு பேசத்தொடங்கியது. "உவைஸே. நீர் எந்த இறைவனடிமையோ நானும் அந்த இறைவனது அடிமையே. இது உமது இறைவனால் உமக்கு வழங்கப்பட்டது. இதை "நீர் உண்ணலாம்" என்று அது கூறலாயிற்று. அப்போது உவைஸ் கர்னீ மகிழ்ச்சியடைந்து இறைவனுக்கு நன்றி கூறி அந்த உரொட்டியை உண்ண ஆரம்பித்தார்கள்.

எவ்வளவு பசியாக இருந்த சமயத்திலும் தனது நேர்மையான வாழ்க்கையை அவர்கள் கைவிடவேயில்லை.

**முஹமட் ஜஹானி-காத்தான்குடி.**

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்,
துப்பாக்கிகளை தொழுதுகொண்டிருப்போருக்கும்
எழுதும் பணிகளில் ஈடுபட்டிருப்போருக்கும்
இடையே முரண்பாடுகள் இருக்கின்றன.

எதற்கு வம்பு?
பிரச்சனை இல்லாத விடயங்களை மட்டுமே
பேசிக்கொண்டும், எழுதிக்கொண்டும்
இருந்துவிடலாம்;
இங்கு உயிர்வாழ அது உதவும்
என்று
நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் சிலர்.

பத்திரிகைச் சுதந்திரத்தை பயன்படுத்துவதாகப்
பறைசாற்றிக்கொண்டு-தங்களுக்கு
பங்கம் நேராத பக்கங்களை மட்டுமே
விமர்சித்துக்கொண்டுமிருக்கிறார்கள்.

எழுதுகிறவனுக்கு
வயிறு இல்லை என்று அர்த்தமல்ல.
அதற்காக
வயிற்றுக்காக மட்டுமே எழுதுவது
வாடிக்கையாகிவிடக்கூடாது.
அவ்வாறு வாடிக்கையாக இருக்குமானால்
இடம் கண்ட இடத்தில் மடம் கட்டும்
பாணியில் விமர்சனம் எழுதி-தம்மை
அரசியல் விமர்சகர்களாக அவர்கள்
அறிவித்துக்கொண்டிருக்கக் கூடாது.

இதை-ஏன்-சொல்கிறேன் எனில்,
ஆயுதம் வைத்திருப்பவர்கள்-
அப்படி வைத்திருப்பவர்களிலும்
எடுத்ததற்கு எல்லாம் சுடக்கூடியவர்கள்
எதைச் செய்தாலும்
ஏறெடுத்துப் பார்க்கக்கூடாது என்ற
முடிந்த முடிவோடு-சில
"நடுநிலை வாதிகள்"
எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

அதனால்தான்-
ஆயுதம் வைத்திருப்பவர்கள்
அயுதங்கள் மூலம் பேசுவது மட்டுமே
மரியாதைக்குரிய வழிமுறை என்று
நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அரசு தவறு செய்யும்போது
அதனைச் சுட்டிக்காட்டலாம்-
ஆயுதம் வைத்திருப்போம்
ஆயிரம் தவறு செய்யினும்
அதைக் கண்டுகொள்ளக்கூடாது
என்பது நடு நிலையல்ல.
நழுவல் நிலை.

உயிருக்கான உத்தரவாதத்தோடு
எழுதமட்டுமே விரும்புகிறவர்கள்
தங்களை-தாங்களே
உண்மை' விளம்பிகளாக
ஊருக்கு காட்ட முயல்தல் வேடிக்கை.

அதே சமயத்தில்
தங்களை உயர்த்தி மட்டுமே எழுத வேண்டும்-
தாங்கள் தவறு செய்யும்போது
உண்மைகளை சொல்லக்கூடாது
என்று-எந்தவொரு அமைப்பு
கருதினாலும் அது
மக்களுக்கு பொய் சொல்லச் சொல்கிறது
என்றே அர்த்தமாகும்.

சமீபத்தில் 'பாரிஸ் ஈழநாடு'
பத்திரிகை மீது-
பெற்றோல் குண்டு வீசியிருக்கிறார்கள்.
புலிகளுக்குள் உள்ள முரண்பாடே
குண்டுவீச்சுக்கு காரணம் என்று
ஒரு தகவல் வெளியாகியுள்ளது.

வெளிநாடுகளிலும்-
நம்மவர்கள் தமது "நாகரிகத்தை"
பத்திரிகைகள் மீது காட்ட முற்படுவது
வீரத்தை வெளிப்படுத்தாது.
அங்குள்ள நம் மக்கள்
வெட்கப்படும் நிலையை மட்டுமே
ஏற்படுத்தும்.

செய்திகள் துரிதமாக மக்கள்
செவிகளுக்கு எட்டுவதற்கு
தொழில்நுட்ப ஆற்றலை விரிவாக்கும் உலகில்
செய்திகள் வெளிவராமல் தடுக்க
என்ன செய்யலாம் என்று
எவர் நினைப்பினும்
அவர்கள் மக்கள் முன்பாக
இரும்புத்திரைகளை தொங்கவிட
நினைக்கிறார்கள் என்றே அர்த்தம். ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
ஆசிரியர்.

## தினமுரசு போன்: 820265

## கவிதைப்போட்டி இல-34

### பரிசுக்குரிய கவிதை

மலிவு
எல்லாம் இங்கே
விலை உயர்வு
மனிதம் மட்டும்
மலிவு விற்பனை.

**ஹபீலா நிஹ்ரீர்**
**புத்தளம்.**

### வியக்கப்பட்ட கவிதைகள்

**பயிற்சி**
பங்கருக்குள் வாழ(ப்)
பயிற்சி நடக்கிறதோ?
மகாலிங்கம்
வெளிமடை.

**தொட்டில்!**
தேசமே,
எனக்கு
நீ,
கொடுத்த
தொட்டிலைப்பார்!...
ஏ.எம்.அப்துல் றகுமான்
சிறாஜ் நகர்.

**சுமந்தது ஏன்?**
பால்வடியும்
பூ முகத்தை
தள்ளுவண்டி
சுமந்ததென்ன?
ஷெல் விழுந்து
சிதறியதால்
அங்கவீனம்
ஆனதுவோ?
ஏ.அஹ்மது ஜுனைது
ஏறாவூர்-06.

எங்கள்
பொருளாதாரத்தின் மீது
போர்
பயணம் செய்வதால்,
தள்ளுவண்டியே
தஞ்சம்
எங்களுக்கு.
பூ.இதயரெத்தினம்
ஆரையம்பதி-03.

**மனிதப் பயிர்கள்**
போர் மேகம்
சூழ்ந்ததினால்
வறுமையின்
மழையில்
நனையும்
மனிதப் பயிர்கள்.
என்.கே.சலீம்
வகமல்கொல்லாவ.

இதுதான்
இருபதாம்
நூற்றாண்டின்
குழந்தைகளுக்குள்ள
விளையாட்டு
வண்டியோ!
கே.எம்.ஏ.வாஹிட்
பாலமுனை-03.

**துள்ளி எழு!**
தள்ளுவண்டியில்
தலைகாட்டும்
இளம் குருத்தே!
உள்ளத்தைமட்டுமல்ல
உலகத்தையே
அன்பு வெள்ளத்தால்
ஆட்சி செய்ய
துள்ளி எழு!
செ.குணரத்தினம்
மட்டக்களப்பு.



**சதி**
சமாதானக் குழந்தையை
சாக்கடையில் தள்ளும்
சதி முயற்சியோ இது?
சு. [illegible]
வே[illegible].

**பயண வாகனம்**
கண்ணி வெடியும்
பொறி வெடியும்
புதைந்துள்ள
நம் தேசத்தில்
பாதுகாப்பான
பயண வாகனம்
இதுவன்றோ! இதுவன்றோ!
என்று
கூத்தாடுவோமே!
இனபக்
கூத்தாடுவோமே!
அக்குரணை ஹரீரா அனஸ்.

இந்த பயணிகள் வாகனம்
எப்போது அறிமுகப்படுத்தப்பட்டது?
ஓ! மனிதம் கெட்ட நேரத்திலோ!
எம்.எம்.எம்.ஸாமித்-கிண்ணியா-03.

**சமாதானக் கயிறு!**
சமாதானக் கயிற்றை
அராஜகம் அறுத்ததாலோ?
குப்பைத் தொட்டியும்
பிள்ளைத் தொட்டிலானது!
ந.ரதீஸ்வரன்-தம்பிலுவில்-2.

**நம் தொழில்**
போரினால் ஏற்படும்
ஊனங்கள்
பாரினில் அதிகரிக்க
நாங்களிங்கு
தொடங்கினோம்
இத்தொழிலை......
சு.அருள்ஜோதி
வேலணை-06.

**சீவனோபாயம்**
சீர்கெட்ட யுத்தத்தால்
சீர் குழைந்த குடும்பங்களில்
சிக்குண்ட சிறுவர்களின்
சீவனோபாயமோ? இது!!
செ.சுகுமார்-மாங்கேணி.

## கவிதைப் போட்டி இல-37



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=. அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 12.2.1994.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 37
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

# வாசகசாலை

வெளிநாடுகளிலும் [illegible]லங்கையிலும் நடக்கும் செய்திக[illegible] தெட்டத் தெளிவாக உடனுக்குட[illegible]வழங்குகிறது தினமுரசு. மற்[illegible] இராஜதந்திரியின் அரசியல் [illegible]லசல், ரசிகனின் இலக்கியநய[illegible]க்ஸ்ரே ரிப்போட் , சினிவிசி[illegible]ன்பன மேலும் சுவையூட்டுகின்[illegible]
ஏ.எல்.அமீர் [illegible]சென்-
க[illegible]னை-3.

•

வாராவாரம் நீ வழ[illegible]வரும் அம்சங்கள் அனைத்தும் [illegible] ஜோர். அதிரடி அய்யாத்துரை, [illegible]க்ஸ்ரே ரிப்போர்ட், நாரதர் ஆகியோருக்கும் என் பாராட்டுக்கள்.
**எஸ்.ஜஹாங்கிர் மௌலானா-**
**சாய்ந்தமருது-03.**

•

அன்பின் முரசே,
எம்மால் தேடித் தெரிந்து கொள்ளமுடியாத பல அற்புதங்களை அபாரமாக படைத்துவருகின்றாய். "மகாபாரதக்கதை" மனங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது. நீ தரும் அனைத்து அம்சங்களும் வெகு ஜோர். கவிதைப்போட்டி இலைமறை காய்களை வெளியுலகுக்கு கொண்டு வருகிறது. உன் சேவை மென்மேலும் வளர மங்கை இவளின் பாராட்டுக்கள்.
**செல்வி.ஜெயா, தெரணியகலை.**

•

நினைவில் நிறைந்திட்ட தினமுரசே!
நினைத்துப் பார்க்கிறேன். நினை கரத்தால் தொட்ட நாளிலிருந்து நீங்கா நினைவுகளை நிந்தன் தனித்துவத்தை நினைப்பினும் எழுத்தில் வடிக்கவியலாது. இன்பம் இன்பம் அனைத்துமே உளத்துக்கின்பம். அதினிலும் இன்பம் ரசிகன் தரும் இலக்கிய நயம். காணாமல் போன ஒற்றன் தருகிறார் சிறு துன்பம்.
என்றென்றும் நீ வளர வாழ்த்துகிறேன்.
**ஜே.புளோரன்ஸ்-கொங்கல்ல.**

•

தினமுரசே,
தித்திக்கும் உன் இதழ்களை கரங்களில் புரட்டுகையில் கற்கண்டும் சுவைதராது. ஆனாலும் எழுத்தாளர் ரசிகனின் முகவரியை மட்டும் ஏனோ மறைக்கின்றாய். உன் புகழ் வளர என் பாராட்டுப் பாக்கள் ஏராளம்!
**ஞா.அருணா-கிண்ணியா.**

•

வாழ்த்துச் சொல்லுங்கள்-என் அபிமான தினமுரசை வாழச் சொல்லுங்கள். எங்கள் இதயங்களை மகிழ்விக்க மென்மேலும் நல்ல நல்ல அம்சங்களை சுமந்துவரச் சொல்லுங்கள்.
**செல்வி. நியாஸா ஏ.அஸீஸா-**
**நிந்தவூர்-06.**

•

பெண் முரசே!
இராஜதந்திரியின் அலசலும் நாரதரின் எக்ஸ்ரே ரிப்போர்ட்டும், ரசிகனின் ரசமான படைப்பும் உன் மேனிக்கு மேலும் மெருகூட்டுகின்றதே. என்றும் ஜொலிக்கட்டுமே!
**எம்.நிஸா முஸம்மில்-தொடம்வத்தை.**

•

கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தால் காதல் என்று அர்த்தம். கடலை வானம் கொள்ளையடித்தால் மேகம் என்று அர்த்தம். பூவை வண்டு கொள்ளையடித்தால் புதையல் என்று அர்த்தம். முரசு எம்மை கொள்ளையடித்தால் அது இனிமை என்று அர்த்தம்.
**ஏ.எம்.தாரிக் அலாவுதீன்-நுரைச்சோலை.**



தித்திக்கும் தினமுரசே, பக்கத்திற்கு பால் முரசே, தென்றலாய் வீசிவிடும் தேன்கிண்ணம் உன் இதழில் இம்முறை பால்மணம் அல்லவா வீசுகின்றன மகாபாரதத்தால்.

இன்னும் மழைமாரி பொழிந்துவர எனது நல்வாழ்த்துக்கள்.
**க.சுந்தர்ராஜ்-வெல்லம்பிட்டிய**

•

இரகசியங்களை அரங்கேற்றும் ரசிகனின் இலக்கிய நயம், "கண்ணே மதுமிதா" ஆகியன தூள் கிளப்புகின்றன. அட...எதிலும் வித்தியாசம் படைக்கும் சரேஷின் கதைகள் சொல்லிவேலையில்லை. பெண்டாஸ்டிக். அடுத்து...ஆ...முதன்முதலில் 'சினிவிசிட்'டில் முரசு தந்த 'மகாநதி' கமலின் புகைப்படம் ஆஹா...ஓஹோ...வொண்டஃபுல். மொத்தத்தில் எமது முரசு சியர்ஃபுல். ஆசிரியருக்கும், முரசுக்கும் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.
**செல்விகள்.கமல்நேசி, இளையமகள், இளைய தென்றல்- களுத்துறை (தெற்கு)**

•

தித்திக்கும் தேன் சொட்டு!
தினமுரசு கேட்கிறது இப்போ
திக்கு எட்டும்!
**அப்புத்தளையூர்-எப்.லெனாட்குமார்.**

•

அன்பின் வாமலருக்கு,
உன்னைப் பாராட்ட எத்தனையோ வாசகர்கள் உள்ள போதும் என்னால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. இதுவரை இப்படியொரு இரசிகர் கூட்டம் வேறு எந்த பத்திரிகைக்கும் இருந்ததில்லை. சிரமம் பாராது திருஷ்டி சுத்திப் போடவும்.
**ராஜி-வந்தாறுமூலை.**

•

சின்னக்கவிதைகள், அரசியல் தந்திரங்கள், உலக அதிசயங்கள் ரசிக்க வைக்கும் சிறப்பு. வாரமலர் தினமுரசே உன் புகழுக்கு எல்லையில்லை. உன்னைப்போல் யாரும் இல்லை. உன்னைப் பார்க்காமல் நானில்லை என்றும் நீ வருக, வளர்க, வாழ்க என்று வாழ்த்தும் உன் வருகையை எதிர்பார்க்கும் வாலிபன்.
**டெல்கீத் சபா.**

## 'மாத்தையா செய்தது மாபெரும் குற்றம்'

### புலிகளின் பாரிஸ் பிரதிநிதி கூறுகிறார்

புலிகள் அமைப்பின் முன்னாள் பிரதித்தலைவரும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவராக இருந்தவருமான கோபாலசாமி மகேந்திரராஜா என்னும் மாத்தையா மாபெரும் குற்றம் செய்துவிட்டதாக பாரிசிலுள்ள புலிகள் அமைப்பு பிரதிநிதி திரு.லோறன்ஸ் திலகர் தெரிவித்துள்ளார்.

"இந்திய சதிக்கு துணைபோனது மூலம் மாத்தையா தமிழ் இனத்திற்கும், அதன் விடுதலைப் போராட்டத்திற்கும் துரோகம் செய்துவிட்டார். அந்த துரோகத்திற்கான தண்டனை அவருக்கு வழங்கப்படும்' எனவும் திலகர் கூறியுள்ளார்.

புலிகள் அமைப்புக்குள் மாத்தையாவை தலைவராக்குவது மூலம் தமது நோக்கங்களை நிறைவேற்றவே இந்தியா விரும்பியது என்று இலண்டனில் உள்ள புலிகள் அமைப்பின் சர்வதேச தலைமைச் செயலகம் கூறியுள்ளது.

எனினும் இதுவரை யாழ்ப்பாணத்தில் உள்ள புலிகள் அமைப்பு முக்கியஸ்தர்கள் எவரும் மாத்தையா விவகாரம் குறித்து வெளிப்படையான கருத்து எதனையும் மக்களுக்கு தெரிவிக்கவில்லை.

# கிழக்குத் தமிழர்களின் பிரச்சனையைத் தனியாக ஆராயவேண்டும்!

# வறுமைக்கோட்டிற்கு கீழே 70 வீதமான தமிழர்கள்!!

## மட்டு-திருமலை ஆயர் யாழில் பேச்சு

கடந்தவாரம் யாழ் சென்ற கிறிஸ்தவத் தூதுக்குழுவினர் புலிகள் அமைப்பினரோடு பேச்சு நடத்தினார்கள்.

சுமார் 2 மணிநேரம் பேச்சுக்கள் நடைபெற்றன. புலிகள் அமைப்பின் சார்பில் அந்த அமைப்பின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம், திரு. பேபி சுப்பிரமணியம் (இளம்குமரன்) திரு.வே. பாலகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு-திருக்கோணமலை ஆயர் வண.கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, கொழும்பு ஆயர் வண.நிக்கலஸ் மாக்கஸ் பெர்ணாண்டோ, வண. அல்பிரட் அலெக்சாண்டர், வண. இம்மானுவேல், வண. ஜெபனேசன் ஆகியோர் கிறிஸ்த தூதுக்குழு சார்பில் கலந்து கொண்டனர்.

கடந்த 27ம் திகதி மாலை 5 மணிமுதல் 7 மணிவரை நடைபெற்ற பேச்சுக்களின் போது இன்றைய அரசியல் சூழ்நிலை, மக்களின் நிலை குறித்து இரு தரப்பு பிரதிநிதிகளும் ஆராய்ந்தனர்.

யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவதூதுக் குழுவினர் தங்கியிருந்தபோது புலிகள் அமைப்பிடம் கைதிகளாகவுள்ள பொலிசாரையும், பூநகரி முகாம் தாக்குதலில் புலிகளால் கொண்டு செல்லப்பட்ட இராணுவத்தினரையும் சந்தித்து பேசினார்கள். யாழ் பொது மருத்துவமனையில் சிகிச்சை பெறும் பூநகரி முகாமில் இருந்த இராணுவ வீரர்களையும் அவர்கள் பார்வையிட்டனர்.

யாழ் மாநகரசபைக்குச் சென்ற தூதுக் குழுவினர் சுகாதாரப் பிரச்சனைகள் தொடர்பான கருத்தரங்கிலும் பங்கு கொண்டனர்.

மட்டக்களப்பு- திருக்கோணமலை ஆயர் வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணத்தில் அளித்த பேட்டியொன்றில் கிழக்கு தமிழர்களின் கஷ்ட நிலைகள் குறித்து எடுத்துக்கூறினார்.

"கிழக்கு தமிழர்களின் பிரச்சனைகளை தனியாக- மிக ஆழமாக ஆராயவேண்டும். கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழர்களில் 70 வீதமானோர் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழுகின்றனர்.

"இவ்வாறான வறுமை நிலைக்கு அரசின் நடவடிக்கைகளும் காரணமாகவுள்ளன. உழைப்பாளர்கள் கொல்லப்பட்டமை, பொருளாதார வாய்ப்புக்கள் வழங்கப்படாமை, இராணுவ நெருக்கடிகள் போன்றவை மக்களின் வாழ்க்கைத் தரத்தை வீழ்ச்சியடைய வைத்துள்ளன.

"மீன்பிடி, வேளாண்மை, கால்நடை வளர்ப்பு பெருமளவில் கைவிடப்பட்ட நிலையில் தொழில் வாய்ப்புக்கள் பறிபோய் உள்ளன.

"கிழக்கில் நிவாரணங்களும் ஒழுங்காக கிடைப்பதில்லை. அகதி முகாமில் இருந்தால் மட்டுமே நிவாரணம் வழங்கப்படுகிறது.

பெரும்பாலான குடும்பங்கள் ஒரு நேர உணவுடன் நாளைக் கழிக்கின்றன.

இரவு நேரங்களில் மீன் பிடிக்க அனுமதி இல்லை. வேளான்மை செய்வதற்கும் பலவித கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

அகதிமுகாம்களில் உள்ளவர்கள் பாதுகாப்பு வசதிகள் இல்லாத இடங்களில் பலவந்தமாக குடியேற்றப்படுகின்றனர்." இவ்வாறு மட்டு-திருமலை ஆயர் தனது பேட்டியில் தெரிவித்துள்ளார்.

நான்கு நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த கிறிஸ்தவ தூதுக்குழுவினர் புலிகள் அமைப்பின் தலைவர் திரு.வே. பிரபாகரனை சந்திக்கமுடியவில்லை.

மீண்டும் தாம் வடபகுதிக்கு இவ்வாறான விஜயங்களை தொடருவோம் என்று தூதுக்குழுவினர் யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டபோது தெரிவித்தனர்.

வடக்கு-கிழக்கு தமிழர்களது துன்ப துயரங்கள் எனக்கு பெரும் கவலை தருகின்றன. என்று கொழும்பு ஆயர் வண.நிக்கலஸ் மார்க்கஸ் பெர்ணாண்டோ யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

"தென்னிலங்கை மக்களும் சமாதானத்தையே விரும்புகின்றனர். நான் யாழ்ப்பாணம் வருவதை அறிந்து, பொதுமக்களும், அரசியல்வாதிகள் சிலரும் சமாதான முயற்சிகளில் ஈடுபடுமாறு என்னிடம் கேட்டனர்." என்றும் கொழும்பு ஆயர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் சென் ஜேம்ஸ் தேவாலயம் தாக்கப்பட்டமை குறித்து இலங்கை அரசுக்கும், அமைச்சரவையில் உள்ள கிறிஸ்தவ அமைச்சர்களுக்கும், பாப்பரசருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் கிறிஸ்தவ தூதுக்குழுவினர் தெரிவித்தனர்.


சென் ஜேம்ஸ் தேவாலய புனரமைப்புக் குழு உறுப்பினர்களையும் அவர்கள் சந்தித்து உரையாடினார்கள்.

யாழ்ப்பாணத்தில் படையினரால் தாக்கப்பட்ட பகுதிகளையும் அவர்கள் பார்வையிட்டனர். யாழ் ஆயர் இல்லத்தில் சமாதானம் வேண்டி நடத்தப்பட்ட கூட்டுப் பிரார்த்தனையிலும் அவர்கள் கலந்துகொண்டனர்.

## இதயத்தில் அன்பு-செயல்களில் தூய்மை

## பரிபூரண அமைதி நிலைக்கு அதுவே வழி!

### ஓய்வுபெற்ற நீதியரசர் பாலகிட்ணர் பேச்சு



மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் கிருஷ்ணபிள்ளை பாலகிட்னர் கடந்த மாதம் 20ந் திகதியன்று நீதிச்சேவையிலிருந்தும் ஓய்வுபெற்றார்.

1966ம் ஆண்டு மாஜிஸ்திரேட் நீதிபதியாக நீதிச்சேவையில் சேர்ந்த திரு.பாலகிட்ணர், யாழ்ப்பாணம், அநுராதபுரம், புத்தளம், இரத்தினபுரி ஆகிய பகுதிகளில் மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றியிருந்தார். மேல் நீதிமன்ற நீதிபதியாகப் பதவியேற்ற பின்னர் சிலாபம், நீர்கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலும் கடமையாற்றினார்.

1986ம் ஆண்டு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக பாலகிட்ணர் பதவியேற்றார். தொடர்ந்து 1992ம் ஆண்டு மேன் முறையீட்டு நீதிமன்ற தலைவராக அவர் நியமனம் பெற்றார்.

யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. பாலகிட்ணர் கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, கொழும்பு சென்ஜோசப் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவர்.

நீதியரசர் பாலகிட்ணர் தமது பதவி ஓய்வுக்கு முன்பதாக கொழும்பு 'ராஜயோக' நிறுவனத்தில் நிகழ்த்திய விரிவுரையொன்றில், "அமைதி, சமாதானம் ஆகியவற்றினை ஏற்படுத்துவதற்கான காரணிகள் மனிதருள்ளேயே இருக்கக் காணப்படுகின்றன. அவற்றை மனிதர்கள் இனங்கண்டு கொள்ளவேண்டும்.

"சிந்தையில் அறிவாற்றலும், இதயத்திலே அன்பும், செயல்களில் தூய்மையும் இருப்பதன் மூலமே நாம் ஒரு பரிபூரண அமைதி நிலையை நோக்கிச் செல்லமுடியும்." என்று குறிப்பிட்டிருந்தார்.

### தீவிரமாகும் மலேரியா!

யாழ் குடாநாட்டில் மலேரியா நோயினால் நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

வடமராட்சிப் பகுதியில் மட்டும் ஜனவரி மாதத்தில் முதலாம் திகதியில் இருந்து 15ம் திகதிவரை மலேரியாவால் பாதிக்கப்பட்டோர் 571பேர் என்று தகவல் ஒன்று தெரிவிக்கிறது. அதில் மூளை மலேரியாவால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனராம்.

இதேவேளை யா[illegible]டாநாட்டில் பரவிவரும் புதுவித நோயான ஹெப்டி சீமியாவால் க[illegible]ஆண்டு 234பேர் மரணமானதாகவும் அத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது[illegible]

### புலிகளின் ந[illegible]மாடும் மருத்துவப் பிரிவு!

புலிகளின் நடம[illegible] மருத்துவப் பிரிவினர் யாழ் குடாநாட்டில் நோயாளர்களுக்கு சிகி[illegible]யளித்து வருகின்றனர்.

அகதி முகாம்கள்[illegible]குடியிருப்பு திட்டங்கள் போன்றவற்றில் தமது மருத்துவப் பிரிவு இதுவ[illegible] ஆயிரக்கணக்கானோருக்கு சிகிச்சையளித்துள்ளதாக புலிகள் யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளனர்.

சமீபகால மழையாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் புலிகளது நடமாடும் மருத்துவப் பிரிவு சேவையில் ஈடுபட்டது என்றும் தெரிவித்துள்ளனர்.

## மீண்டும் தொடரும் தமிழ் பணி!

## தமிழை நேசிப்போர் கண்டியில் கூட்டம்!!

(கண்டி நிருபர்)

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் அறிஞர்களுடன் கண்டியில் மீண்டும் தமிழ்ப்பணிகளை முன்னெடுத்துச் செல்ல "கைலாசபதி விமர்சன வட்டம்" என்ற பெயரில் அமைப்பொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கண்டி சிட்டிமிஷன் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஆலோசனைக் கூட்டம் ஒன்றில் மேற்கண்ட அமைப்பு உருவாக்கப்பட்டமை குறித்து திருப்தியும் மகிழ்ச்சியும் தெரிவிக்கப்படுகின்றது. பேராசிரியர் சு.வித்தியானந்தன் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த காலம் தொட்டு மறைந்த யாழ் பல்கலைக்கழகப் புவியியல் பேராசிரியர் சோ. செல்வநாயகம் கண்டியில் இருந்த காலப்பகுதியில் தமிழியர் கழகம் என்றதோர் அமைப்பை உருவாக்கி சிறந்த தமிழ்ப்பணியாற்றிய 1975ம் ஆண்டுக்குப் பின்னர், தமிழ் பணிக்காக கண்டியில் எந்த ஒரு அமைப்பும் பல்கலைக்கழக அறிஞர்களுடன் இணைந்து இயங்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கவில்லை என சுட்டிக்காட்டப்படுகின்றது.

பல்கலைக்கழகத்தை அண்மையில் வைத்துக் கொண்டு தமிழ்ப் பணிக்காக எத்தனையோ வேலைத்திட்டங்கள் இன்று வரை உள்ள இடைவெளிகளில் ஏதாவது செய்திருக்கலாமே என்ற அங்கலாய்ப்பும் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இப்பிரதேசத்தில் ஏற்பட்டிருந்தது. இதன் பொருட்டு இலக்கிய விமர்சனத்தை மாத்திரம் அல்லாமல் மற்றும் அபிவிருத்தித் துறை தொடர்பான சகல விமர்சனங்களை மேற்கொள்ளவும் "கைலாசபதி விமர்சன வட்டம்" என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் தமிழ்ப்பணியை தொடர்ந்து இட்டுக் செல்லலாம் என பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்களான கலாநிதி அம்பலவாணர் சிவராஜா, கலாநிதி துரை மனோகரன் ஆகியோர் இங்கு கருத்து வெளியிட்டுள்ளனர்.

"கைலாசபதி விமர்சன வட்டத்தின் தலைவராக கலாநிதி அ.சிவராஜாவும் அமைப்பின் செயலாளராக திரு.பெ. முத்துலிங்கமும் இந்தக் கலந்துரையாடலின் போது தெரிவாகினார். நூல்களை வெளியிடவும் அவற்றை விமர்சனக் கண்ணோட்டத்தில் எடுத்துச் செல்லவும் இந்த அமைப்பு உதவும்.

## மாத்தையாவுக்கு ஆதரவாக புதிய இயக்கம்!

## பத்திரிகை காரியாலய தாக்குதலுக்கு உரிமை கோரல்!!

1994 ஜனவரி 13ம் திகதி பாரிசிலுள்ள ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம் குண்டுவீசித் தீக்கிரையாக்கப்பட்டதற்கு ரி.ஆர்.பி. என்னும் அமைப்பு உரிமை கோரியுள்ளது.

பாரிசிலிருந்து அந்த அமைப்பினால் துண்டுப் பிரசுரமொன்று வெளியிடப்பட்டுள்ளது. அந்தத் துண்டுப் பிரசுரத்தில் பின்வரும் வாசகங்கள் காணப்படுகின்றன:

அண்ணல் காந்தி விரட்டிய வெள்ளையனை, ஐரோப்பிய வல்லூறுகளின் கையாள், துரோகி பாலசிங்கத்துடன் இணைந்து மீண்டும் ஆசியக் கண்டத்திற்கு அழைத்து வரத்துணைபோகும் பணியின் ஓர் அங்கம்தான் மாத்தையா கொலையாகும்.

இக்கொலையையும் இலங்கை மற்றும் அரசுகளுடன் இணைந்து செய்த கொலைகளையும் ஆதரிக்கும் அனைவருக்கும் எச்சரிக்கையாகவே ஈழநாடு அலுவலகம் தீவைக்கப்பட்டது, என்று அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. துண்டுப்பிரசுரத்தின் அடியில் குறிக்கப்பட்டுள்ள ரி.ஆர்.பி. என்பதற்கான முழுப்பெயர் என்னவென்று தெரியவில்லை.

இதேவேளையில் பாரிஸ் ஈழநாடு தீக்கரையாக்கப்பட்ட சம்பவத்தின் பின்னால் வலிய கரமொன்று நின்று இயங்குவது தெரிகிறது. தமிழ் மக்களின் அபிலாசைகளின் வெளிப்பாடுகள் மீது இலங்கை-இந்திய அரசுகள் கட்டவிழ்த்து விட்டுள்ள பயங்கரவாதத்தின் தொடர்ச்சியே பாரிஸ் ஈழநாடு மீதான தாக்குதல் என்று புலிகள் இயக்க பாரிஸ் பிரதிநிதி லோரன்ஸ் திலகர் தெரிவித்துள்ளார்.

புலம்பெயர்ந்த நாடுகளில் நடுநிலமையுடன் எழுத முற்படும் செய்திப்பத்திரிகைகளுக்கு விடுக்கப்பட்ட சவாலே இது என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்திய அமைதிப்படை வடக்கு-கிழக்கில் நிலைகொண்டிருந்த காலத்தில்- 1988ம் ஆண்டு யாழ்ப்பாணத்திலுள்ள ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம் புலிகள் இயக்கத்தினால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்திய உளவுத்துறை தீட்டியுள்ள சதித்திட்டத்திற்கு உடந்தையான சக்திகள் "மாத்தையா அணி" என்ற பெயரில் வெளிநாடுகளில் தமது இயக்கத்துக்கு எதிரான பிரச்சாரங்களில் ஈடுபடுவதாக புலிகள் அமைப்பினர் குற்றம்சாட்டியுள்ளனர்.

புலிகளையும், அதன் தலைவரையும் பலவீனப்படுத்த குறிப்பிட்ட அணியினர் வெளிநாடுகளில் முனைப்புக்காட்டுவதாகவும் புலிகள் அமைப்பினர் கூறியுள்ளனர்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்


விளம்பரப் பகுதி



## மலையாள மாந்திரீகம்

உலகளாவிய ரீதியில் 27 வருடங்களாகத் தொடர்ந்து உண்மைச் சேவையாற்றி வரும் உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி P.K.சாமி, எஸ்ஸோஸியேட் பிரைவேட் லிமிட்டெட் டாரின் சேவையில் கைரேகைகள், ஜாதகங்கள், மாந்திரீக ரீதியில் உங்கள் பிரச்சனைகளுக்கு நிவாரணம் பெற இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். தொழில் பிணக்குகளா? காதல் கிலேசங்களா? வசியங்களா? கணவர், மனைவி, குடும்பப் பிரச்சனைகளா? ஆஸ்த்துமா போன்ற தீராத நோய்களா? இரகசிய ஆண், பெண் நோய்களா? வெளியூர் வாய்ப்புப்பெற வேண்டுமா? என்ன குறை?

P.K. SAAMY
ASSOCIATE PVT. LTD.,
33, Daily fair Complex,
NUWARA ELIYA.

Dial: 052-2508 & 3093
AND
072-26088, 078-61933

FAX: 0094-523093

ஆரம்ப மனுச் செய்பவர்களுக்கு, தற்கால பலாபலனைத் தங்கள் பிறந்த திகதி, மாதம் மாத்திரம் எழுதியனுப்பினால் தற்போதைய அல்லது கடந்த ஆண்டுகளின் பலனை இலவசமாக அனுப்புவோம். விஷேடமாக வெளிநாட்டு ஆடர்கள் உடன் கவனிக்கப்படும். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும்; துர்க்கையின் அக்கினிக் குண்டல பூஜையில் கலந்து உண்மை அறியலாமே.

*Phone: 052-2508, 052-3093, 072-26088, 078-61933, 078-71243.*

**எமது புதிய முகவரி**

| | |
|---|---|
| வினோத் இன் | Vinnoth Inn |
| இல.33, மூன்றாவது மாடி | No.33, 3rd Floor |
| குணானந்த மாவத்தை | Gunanantha Mawatha |
| கொட்டாஞ்சேனை. | Kotahena |
| கொழும்பு–13. | Colombo-13. |

போன்: 431845

மேலுள்ள விலாசத்திற்கு இடம் மாறியுள்ளோம்.

**இப்புதிய இடம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு அருகாமையிலும், குணானந்த மாவத்தை தபால் கந்தோருக்கு மிக அருகாமையிலும் அமைந்துள்ளது.**

தலைநகர பஸ் மார்க்கம்
இல. 112, 102, 168, 115, 176, 145.

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்



## ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

**ஞான சுந்தர வைத்தியசாலை**
*187, செட்டியார் தெரு,*
*கொழும்பு 11,*
*போன்: 421398*


# தமிழ் நாட்டில் புலிகள் ஊடுருவலாம் புலனாய்வுத்துறை எச்சரித்துள்ளது

**தமிழகச் செய்திகள்-தருவது-ஏழுமலை**

ராஜீவ்காந்தி கொலை வழக்கு விசாரணை ஆரம்ப மானதை அடுத்து தமிழ்நாட்டில் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் புலிகள் ஊடுருவி நாசவேலைகளில் ஈடுபடலாம் என்று புலனாய்வுத்துறைக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து தமிழகப் பொலிசார் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

சென்னை கடலோரப்பகுதிகளிலும் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கை அகதிகள் தங்கியுள்ள முகாம்களிலும் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டுள்ளதோடு, இலங்கைத் தமிழர் தங்கியுள்ள வீடுகளிலும் பலத்த சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொலிசில் பதிவு செய்து தங்கியுள்ள இலங்கைத் தமிழ் குடும்பங்கள் வெளியூர்களுக்குச் சென்றால் அவ்வாறு சென்றதற்கான காரணங்களும் கேட்கப் படுகின்றன. புதிய நபர்களது நடமாட்டங்கள் குறித்தும் கண்காணிக்கப்படுகிறது.

■

தமிழ்நாட்டில் ஆளும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஜெயலலிதாவுக்கு நெருக்கமாக இருந்தவர் அமைச்சர் அழகு திருநாவுக்கரசு.

சமீபத்தில் அழகு திருநாவுக்கரசு கட்சியில் இருந்து ஜெயலலிதாவால் நீக்கப்பட்டுள்ளார். அவரோடு முன்னாள் அமைச்சர் விசுவநாதனும் வெளியேற்றப் பட்டார்.

எம்.ஜி.ஆர். மன்றங்களை கூட்டமைப்பாக உருவாக்கி கட்சிக்கட்டுப்பாட்டை மீறிச் செயல்பட்டதாக இருவர்மீதும் செல்வி ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார்.

ஆளுநர் சென்னா ரெட்டிக்கும் தமிழக முதல்வருக்கும் இடையே உள்ள பிரச்சனைகள் சூடுபிடித்து வருகின்றன.

"தன்னிச்சையாக செயல்படுவது நல்லதல்ல. தலைக் கனமாகத் திரிந்தால் 3 மாதத்தில் அழிவு" என்று ஆளுநர் சென்னா ரெட்டி கூட்டம் ஒன்றில் பேசும்போது மறைமுகமாக எச்சரித்தார்.

ஆனால் ஜெயலலிதா அதை அலட்சியம் செய்தார். ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மாவை சந்தித்து தன்மீது ஆளுநர் கூறிய புகார்களுக்கு விளக்கம் சொல்லிவிட்டு திரும்பியிருக்கிறார்.

தனது அமைச்சர்கள் மூலம் ஆளுநருக்கு எதிராக அறிக்கைகள் விடவைத்து மக்களது வெறுப்பை ஆளுநருக்கு எதிராக திருப்புகிறார்.

■

வை.கோபால்சாமி பேசும் கூட்டங்களுக்கு அதிகமான மக்கள் திரள்வது தி.மு.க. தலைமைக்கு பெரிய அச்சுறுத்தல்.

சென்னை போன்ற பகுதிகளில் அவருக்கு ஆதரவில்லை என்று கூறப்பட்டது. ஆனால் சென்னையில் நடந்த வை.கோ. அணி கூட்டத்திற்கு பெரும்திரளான மக்கள் வந்திருந்து விடிய-விடிய காத்திருந்தனர்.

வை.கோ. பேசுவதை கேட்க மக்கள் ஆர்வமாகக் காத்திருப்பது கலைஞருக்காக முன்பு மக்கள் காத்திருப் பதைப்போல் இருப்பதாக கூறுகிறார்கள்.

## அரிதிலும் அரிது



ஜகத்குரு என்றும், பரமாச்சாரியார் என்றும் காஞ்சிப் பெரியவர் என்றும் அன்போடு அழைக்கப்பட்ட சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் 8.1.94 அன்று அமரத்துவமடைந்தார். சிறுவயதில் ஆங்கில நாடகமொன்றில் அவர் நடித்தபோது எடுக்கப்பட்ட அரிய புகைப்படமே இதுவாகும்.


SARIKA TEX
Ladies Tailoring
24 மணிநேரத்தில்
சாறி பிளவுஸ்
சல்வார் கமீஸ்
உங்கள் உடலமைப்புக்கேற்றபடி
நவீன முறையில் தைத்துக்கொள்ள
*Hewa Shopping Complex*
*No. 69/5-1/1, 1st Floor,*
*Galle Road,*
*Dehiwela South.*


## புகார் பெட்டி

### இலங்கை கடற்தொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் இன்றைய நிலை

கல்முனைப் பகுதி மீனவர்களின் வசதி கருதிக் கட்டப்பட்டதுதான் "இலங்கை கடற்தொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்."

இப்பகுதி வாழ் தமிழ்-முஸ்லீம் ஊழியர்கள் பலருக்கு தொழில் வாய்ப்புக்களைக் கொடுத்ததுடன் இப்பகுதி வாழ் மீனவர்களின் ஐஸ் தேவைகளையும் நிவர்த்தி செய்து வந்ததையும் யாவரும் அறிவர்.

ஆனால் கடந்த பல வருடங்களாக இக்கூட்டுத் தாபனம் முழுக்க முழுக்க செயற்பாடற்ற நிலையில் கவனிப்பாரற்று இருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.



எவ்வித பாதுகாப்புமற்ற நிலையில் காட்சி தரும் இக்கட்டடம் இன்று பல துர் நடத்தையுள்ளவர்களின் அனாச் சாரக் களியாட்டங்களின் மத்திய நிலையமாகவும் செயற்படுவது இப்பகுதியில் ஒழுக்கத்துடனும் கண்ணியத்துடனும் வாழும் பொது மக்களின் மனதைப் புண்படுத்தும் செயற்பாடாகவே விளங்குகின்றது.

இக்கூட்டுத்தாபன ஊழியர்கள் தங்குவதற்காகக் கட்டப்பட்ட கட்டடங்கள் இன்று முழுவதுமாக சேதமாக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் இக்கூட்டுத் தாபனம் இவ்வாறு கவனிப் பாரற்ற நிலையில் இருந்தால் தற்போது பாவனைக்கு உதவக் கூடிய நிலையில் உள்ள உபகரணங்கள் கூட முற்றாகப் பழுதடையக்கூடிய நிலையே ஏற்படும்.

இக்கூட்டுத்தாபனத்தின் இன்றைய கவனிப்பாரற்ற நிலையை விளக்கும் புகைப் படங்களே இவையாகும். எனவே இனிமேலாவது இக்கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அக்கறையுடன் செயற்பட்டு இப்பகுதி வாழ் தமிழ் முஸ்லிம் ஊழியர்களுக்கு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் இப்பகுதி வாழ் மீனவர்களின் ஐஸ் தேவைகளையும் பூர்த்தி செய்து கொடுக்க முன்வரவேண்டும்.

இங்கு ஐஸ் உற்பத்தி செய்யப்படாமையினால் சில தனியார் வர்த்தகர்கள் வெளியிடங்களிலிருந்து ஐஸ் கட்டிகளைக் கொண்டு வந்து கொள்ளை இலாபத்தில் விற்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பகுதி வாழ் மீனவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்த இக்கூட்டுத்தாபனம் மீண்டும் அவர்களுக்குச் சேவையை வழங்கும் நாள் எதுவோ?

எஸ்.ரி.எம்.பஸ்வாக்
கல்முனை-05.

### பரீட்சை இன்றித் தேர்வு!

1994/95ம் ஆண்டுக்கான விவசாய டிப்ளோமா பயிற்சிக்கு, பரீட்சைகள் நடைபெறாமல் மாணவர்கள் உள்ளார்ந்த ரீதியாக வவுனியா விவசாயக் கல்லூரியில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் யாழ்மாவட்டத்தில் இருந்து வந்த ஏனைய விண்ணப் பங்களும் நிராகரிக்கப்பட்டும் உள்ளன. மேலதிக விண்ணப்பம் கிடைக்கும் இடத்து பரீட்சை ஒன்றை நடாத்தி மாணவர்களை தெரிவு செய்து இருக்க வேண்டும். இப்பயிற்சி பெப்ரவரி மாதத்தில் ஆரம்பமாகவுள்ளது. இதற்கு முன்னர் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு உரிய அலுவலகத்தைக் கேட்டுக்கொள்கின்றோம்.

தயாசெல்வி, தாண்டிக்குளம்.

### மாணவர்களின் கவலை

பசறை நகரிலிருந்து ஏறத்தாழ 30 கிலோமீற்றர்களுக்கு அப்பாலுள்ள பிட்டமாறுவ என்னும் இடத்தில் அமைந்துள்ள தமிழ் பாடசாலையில் ஆண்டு 7 வரை உள்ளது. இதில் 230 மாணவ மாணவியர் கல்வி கற்கின்றனர். இப்பாடசாலைக்கு வேண்டிய ஆசிரியர் தொகை 15 ஆகும். ஆனால் உள்ள ஆசிரியர்கள்-அதிபர் உட்பட 2 பேர்தான். இதனால் இம்மாணவர்கள், தங்களுக்கு முழுமையான கல்வி கிடைக்காமல் துன்பமடைகின்றார்கள். எனவே சம்பந்தப்பட்ட அரசியல் தலைவர்கள் இதில் கவனமெடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்!

கே.எம்.தில்லைராஜா-பசறை.

### சுகாதார நிலையத்தில் சுகாதார சீர்கேடு

மூதூர் அரசாங்க வைத்தியசாலை, மூதூர் மக்களின் இன்றியமையாத சொத்து. இதை மூதூரை அண்மித்த சகல கிராமங்களும் பயன்படுத்தி வருகின்றன. இப்படிப்பட்ட இந்த வைத்தியசாலையில் ஆங்காங்கு சிறு அழுக்குப் பெட்டிகள் கவனிப்பாரற்றுக்கிடப்பதால் நுளம்புகள் வளர்ச்சி பெற்று சிகிச்சை பெற வரும் நோயாளிகளுக்கே நோயை உண்டுபண்ணுகின்றது. மற்றும் ஏழைகளைக் கொண்ட மூதூர் மக்கள் மருந்துகள் அனைத்தும் கடையில் வாங்க வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இக்குறைபாடுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தயவுசெய்து கவனத்துக்கு எடுத்து மூதூர் மக்களின் நலன்களை பேண உதவி புரியுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஏயெஸ்ஸெம் பாயிஸ், மூதூர்-02.

### பரிதாபமான பாதை!

புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள கொத்தாந்தீவுக்கு அருகாமையில் உள்ள கட்டைக்காடு என்னும் கிராமத்திற்கு கொத்தாந்தீவு பிரதான பாதையில் இருந்து செல்லும் இப்பாதையே பரிதாபமாக காட்சி அளிக்கிறது. அவ்வளவு மோசமாக காணப்படுகிறது.

இப்பாதையால் வாகனங்களோ, துவிச்சக்கரவண்டிகளோ போகமுடியாது. இப்பாதை பள்ளமும் குழியுமாகவும் காணப்படுகிறது.

இப்பாதை மழைகாலங்களில் குளம் போல் காட்சி அளிக்கும். இப்பாதை திருத்தம் செய்து சுமார் 10 வருடங்கள் இருக்கும். ஆகவே பொதுமக்களின் சார்பில், சம்பந்தப்பட்டவர்கள் இப்பாதையை திருத்தம் செய்யும்படி வேண்டுகிறேன்.

எம்.ஏ.ஏ.ஜுனூத்-கொத்தாந்தீவு.

### அக்கறைப்படவேண்டிய வீதி

வடமத்திய மாகாணமான அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள மரக்கல கட்டுகெலியாவை பிரதான வீதியினூடாக வாகனங்கள் செல்லமுடியாமல் வீதி உடைந்து, பள்ளம் விழுந்து கரடுமுரடாகக் காணப்படுகின்றது.

இதனால் ஒரு நோயாளியை மருத்துவ மனைக்குக் கொண்டு செல்வதாக இருந்தால் அவ்வீதியால் அவசரமாக எவ்வாறு கொண்டு செல்வது? சில வேளை நோயாளி மரணிக்கும் சூழ்நிலையும் ஏற்படலாம். ஆகவே இவ்வீதியை திருத்தி யமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய விரைவில் கவனம் எடுக்குமாறு மக்களின் சார்பில் வேண்டுகிறேன்.

எஸ்.ஐ.நிலாம்தீன்
மரக்கலகட்டுகெலியாவை.



மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா, அத்துலத்முதலி ஆகியோரோடு காமினி

# காமினியின் இணைப்பும் ஜனாதிபதியின் நினைப்பும்!

## எக்ஸ்ரே ரிப்போர்ட் – நாரதர்

நடக்கக்கூடாதது எதுவும் நடந்து விடவில்லை. நடக்கலாம் என்று பரவலாகப் பேசப்பட்டு, பின்னர் நடக்காது என்று கருதப்பட்டு, மீண்டும் நடக்கும் என்று பேசப்பட்ட அரசியல் சம்பவம்தான் நடந்திருக்கிறது.

திரு.காமினி திசாநாயக்கா ஜனாதிபதி அமைத்த இணைப்பு என்ற பாலத்தில் நடந்து மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் கலந்துவிட்டார்.

புத்திசாலித்தனமான, உடனுக்குடன் முடிவுகளை எடுக்கக்கூடிய இளம் தலைவரை தன்னோடு வைத்திருப்பது அவசியம் என்பதை ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க உணர்ந்திருக்கிறார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கவர்ச்சிகரமான இளம் தலைவர்தான்.

இன்று அரசில் உள்ள அமைச்சர்களில் ரணில் மட்டுமே கட்சிக்குள்ளும், அரச அதிகார அமைப்புக்களுக்குள்ளும் பெரிதும் மதிக்கப்படுபவராக இருக்கிறார்.

ஜனாதிபதியாக மறைந்த பிரேமதாசா அவர்கள் இருந்த போது பிரதமர் பதவி மரியாதைக்குரிய ஒன்றாக இருந்ததே தவிர, பிரதமருக்கு ஆளுமையான ஒரு பாத்திரம் இருக்கவில்லை.

அப்போது பிரதமராக இருந்த இன்றைய ஜனாதிபதி பல அமைச்சுப் பொறுப்புக்களை கவனித்துவந்த போதும், கட்சிக்குள்ளும் சரி, அரச நிர்வாக அமைப்புக்கள் மற்றும் பாதுகாப்பு பிரிவுகளுக்குள்ளும் சரி அவரது முடிவுகள் ஆதிக்கம் செலுத்தியதாக வெளியே தெரியவில்லை.

ஆனால், இப்போது பிரதமர் ரணில் ஜனாதிபதிக்கு அடுத்த நிலையில் வைத்து நோக்கப்படுபவராகவும், அரசில் முக்கிய பாத்திரம் வகிப்பவராகவும் மாறியுள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் ரணில் போட்டியிடுவார் என்றே முதலில் கருதப்பட்டது.

எனினும் அவரைவிட மூத்த தலைவர்கள் கட்சிக்குள் இருந்ததால் உடனடியாக அவரைப் போட்டியிட வைத்து பிரச்சனைகளை உருவாக்க கட்சி விரும்பவில்லை.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவுக்குப் பின்னர் எதிர்க்கட்சிகளுக்கு சுவாரசியமாகப் பதில்சொல்லிக்கொண்டு, ஜனரஞ்சகமாக அரசியல் நடத்தக்கூடிய தலைவர் ஒருவர் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் காணப்படவில்லை.

பிரதமர் ரணில் எதிர்க்கட்சிகளுக்கு பதில் சொன்னாலும் கூட பொதுமக்களை சுண்டியிழுத்துக் கவரும் பேச்சாற்றல் அவரிடம் சற்றுக் குறைவாகவே இருக்கிறது.

பகிரங்க அரசியல் மேடைகளுக்கு வசீகரமான பேச்சாற்றல் உள்ள தலைவர்கள் முக்கியம். தொண்டர்கள் மட்டும் கைதட்டினால் போதாது. கூடியுள்ள வாக்காளப் பெருமக்களும் கவரப்பட்டு கைதட்ட வேண்டும். அதற்கேற்ப சூடான கேள்விகளை, சுவையான சாடல்களைத் தூக்கிப் போடவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் கனல்வீசும் பேச்சாளர்கள் இல்லாமல் இல்லை. ஆனால் அதிகாரமுள்ளவர்கள் அல்லது தலைமையில் உள்ளவர்கள் பேசும் பேச்சுகளுக்கே மதிப்பு இருக்கிறது. தலைமையில் உள்ளவர்கள் தான் மேடையில் பிரதான மேளம். மற்றவர்கள் பக்கவாத்தியங்களே. பிரதான மேளம் வரும்வரை பக்க வாத்தியங்கள் முழங்கலாம். நொறுக்குத் தீனிபோல கூட்டத்தினருக்கு ஏதாவது சுவையான விசயங்களை கொடுத்துக் கொண்டிருக்கலாம். அவ்வளவுதான்.

இப்போது திரு.காமினி ஐ.தே.கட்சியில் இணைந்திருப்பதன் மூலம் வசீகரமான பேச்சாற்றல் உள்ள தலைவர் ஒருவர் அக்கட்சிக்கு மீண்டும் கிடைத்திருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியோடு அவர் இணையவேண்டுமானால் தனது கட்சியை கலைத்துவிட்டே வரவேண்டும் என்று பிரதமர் ரணில் மற்றும் ஐ.தே.க. பொதுச் செயலாளர் அமைச்சர் சிறிசேன குரே ஆகியோர் கூறியிருந்தனர்.

ஆனால் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா மௌனமாக இருந்தார்.

கட்சியைக் கலைக்காமல் திரு.காமினி ஐ.தே.கட்சியில் தான் சேருவதற்கான விண்ணப்பப் படிவத்தை வழங்க, அதை ஜனாதிபதி மாளிகையில் வைத்து ஒரு புன்னகையோடு ஜனாதிபதி பெற்றுக் கொண்டபோது அவரது மௌனம் சம்மதத்தின் அறிகுறியல்ல, பிரதமரதும், அமைச்சர் குரேயினதும் கருத்தோடு சம்மந்தப்படாததன் அறிகுறி என்பது தெளிவாகியது.

திரு.காமினி இணைந்துகொண்ட போது அவரது கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் அவரோடு இருந்தனர்.

ஆனால் ஐ.தே.கட்சி முக்கிய தலைவர்கள் அங்கு காணப்படவில்லை.

குறிப்பாக ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு.சிறிசேனகுரே அங்கு காணப்படாமை உள்ளே ஒரு புகைச்சல் இருப்பதையே காட்டுவதாகக் கருதலாம்.

திரு.அநுரா பண்டாரநாயக்காவை கட்சியில் இணைத்தபோது திரு சிறிசேனகுரே காட்டிய ஆர்வம் திரு.காமினி இணைப்பு விடயத்தில் காணப்படவில்லை.

எனினும், திரு.காமினி திசாநாயக்கா புத்திசாலி.

ஐக்கிய தேசியக்கட்சியில் தான் மீண்டும் இணைந்த காரணத்தை விளக்கி வெளியிட்ட அறிக்கையில் ஜனாதிபதியை மட்டுமல்லாமல் பிரதமரையும் குறிப்பிட்டு அவர்களுக்கு துணை நிற்பேன் என்று கூறியிருக்கிறார்.

காமினி ஐ.தே.கட்சியில் இணைந்துள்ளமை மூலமாக பிரதமர் ரணில் ஒரு பலமான போட்டியை உள்ளே எதிர்நோக்க வேண்டியவராகிறார்.

ஜனாதிபதி தானே முன்னின்று காமினியை உள்வாங்கியிருப்பதால் ஜனாதிபதியின் ஆதரவும் காமினிக்கே இருக்கும்.

காமினி ஒரு குதிரையைப் போன்றவர். ஓடத்தொடங்கிவிட்டால் அந்த புத்திசாலிக் குதிரை ஏனைய குதிரைகளை எல்லாம் ஓரம்கட்டிவிட்டு முன்னால் பாய்ந்து செல்லத் தொடங்கிவிடும். தேவையானதெல்லாம் தட்டிக் கொடுத்து உற்சாகமாக ஓட ஆரம்பித்து வைப்பதுதான். அந்த வேலையை ஜனாதிபதியே செய்வாரேயானால், ஐ.தே.கட்சிக்குள் அடுத்தது யார் இனி? என்ற வினாவுக்கு விடையாக காமினி வெளிப்படுவார்.

காமினியை இணைத்துக்கொண்டதன் மூலமாக எதிர்க்கட்சிகளின் கோட்டையில் யானை பலம் கொண்டு மோதியிருக்கிறது. கோட்டைக்கு பலத்த சேதம். உள்ளே சேனையும் பிளந்துவிட்டது.

திரு.அநுரா பண்டாரநாயக்காவை இணைத்துக் கொண்டதால் பெற்ற அரசியல் இலாபத்தைவிட காமினியை இணைத்துக் கொண்டதால் பெற்றுள்ள அரசியல் இலாபம் ஐ.தே.கட்சிக்கு அடுத்து வரும் தேர்தல்களில் கைகொடுக்கும்.

கைவிட்டுப்போன வாக்கு வங்கிகளில் கணிசமானவை மீண்டும் கைக்கு வந்து சேரும்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க நம்பிக்கையோடு எதிர்நோக்கலாம்.



ஜே.ஆர். ஜெயவர்தனா, பிரேமதாசாவுடன் மத்தியில் காமினி.

அதற்கு ஒரு முன்னோட்டமாக எதிர்வரப்போகும் தேர்தல்கள் அமையும்.

திரு.காமினி கட்சியை கலைக்காமல் தான் மட்டுமே முதலில் சேர்ந்து கொண்டாலும் கூட கட்சித்தலைவரே போன பின்னர் அக்கட்சிக்கு உயிர் இருக்காது. அக்கட்சியால் இனி எந்தப் பயனும் இல்லை என்று தலைவரே முடிவு செய்துவிட்டபின் கட்சி இருந்தென்ன? கலைந்தென்ன? இரண்டுமே ஒன்றுதான்.

திருமதி. லலித் அத்துலத்முதலி அதிருப்தியாளர்களுக்கு தலைமை ஏற்று வழி நடத்தக்கூடிய நிலை இன்றில்லை.

தனது கணவர் கோரமாகக் கொல்லப்பட்ட ஆவேசத்தின் வெளிப்பாடாக ஆரம்பத்தில் அரசியலில் குதித்தவர் அவர்.

இப்போது அந்த ஆவேசம் தணிந்து அவரும் ஒதுக்கிப் போன நிலையிலே[illegible] இருக்கிறார்.

மேலும் தனித்து நின்று தலைமைத்து[illegible] வழங்கக்கூடிய அரசியல் கம்பீரம் அவரி[illegible] இல்லை.

மறைந்த ஜனாதிபதி பிரேம[illegible] உயிரோடு இருந்திருந்தால் இப்போ[illegible] அவர்மீது லலித் கொலைக்கு குற்[illegible] சாட்டப்பட்டுக்கொண்டே இருந்திருக்கு[illegible]

அதனால் மீண்டும் மீண்டும் ல[illegible] அத்துலத் முதலியின் பெயர் எதிர[illegible] மேடைகளில் ஒலித்துக்கொண்டிருந்திருக்கும்.

அதனால் திருமதி.லலித் அத்துலத் முதலியின் விதவை நிலை அனுதாபம் தேட எதிரணிகளால் பயன்படுத்தப் பட்டிருக்கலாம்.

இப்போது அவ்வாறான சூழ்நிலை இல்லை என்பதால் திருமதி லலித் அத்துலத் முதலியின் முக்கியத்துவமும் குறைந்து விட்டது.

எனவே- ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி காமினியின் புதிய முடிவோடு ஏறக்குறைய கலைந்து போய்விட்ட நிலையிலேயே இருக்கிறது.

கடந்த வருடம் மாகாண சபைகளை கைப்பற்றி மார்தட்டிய எதிர்க்கட்சிகளை இந்த வருட தொடக்கத்தில் மார்பிலே அடித்துக்கொள்ள செய்துவிட்டார் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா.

பிரேமதாச கொல்லப்பட்டு டி.பி. விஜேதுங்கா ஜனாதிபதியானபோது "இவரைச் சமாளிப்பது சுலபம். அடுத்த தேர்தலில் ஊதித்தள்ளிவிடலாம்" என்ற மனநிலை சில எதிரணித் தலைவர்களுக்கு ஏற்பட்டது.

பிரேமதாசாப் பாணியில் அதிரடியான, அமர்க்களமான, அமோகமான அரசியல் காட்சிகளை அரங்கேற்றாமல் மெல்ல, மெல்ல காய்களை நகர்த்தி எதிர்க்கட்சிகளை திகைப்பில் ஆழ்த்திவிட்டார்.

இப்போது ஜனாதிபதியின் முறை. எதிரணிகள் தமது காய்கள் வெட்டப்படுவதை பார்த்துக்கொண்டிருப்பது தவிர வேறு வழியில்லை.

சிங்கள மக்கள் மத்தியில் உள்ள இன அபிமானம் பேசும் சக்திகள் கூட ஜனாதிபதியை எதிர்க்க விரும்பவில்லை.

இனப்பிரச்சனையே இல்லை என்று அவர் சொன்னதே போதும். தாம் அதைவிட மேலாக எதுவும் பேசிவிட முடியாது என்று அவை நினைக்கக்கூடும்.

ஆக, காமினியின் இணைப்பு மூலமாக ஜனாதிபதி தனது கரத்தை உரமேற்றியிருக்கிறார்.

அவரது கட்சிக்குள் ஏற்படும் புகைச்சல்களும் பெரிய விரிசல்களை ஏற்படுத்தாது.

அடுத்த தேர்தலில் வெற்றிவாய்ப்பை தேடிக்கொடுக்கக்கூடிய தலைவராக அவர் இருக்கும் போது கட்சி அவர் பின்னால்தான் நிற்கும்.

■

### யார் இந்த உமா பிரகாஷ்?

கொழும்பில் உமா பிரகாஷ் என்னும் வாலிபர் கொல்லப்பட்டிருக்கிறார்.

நாலுபேர் இருந்தால் போதும். இயக்கம் என்று அறிவிப்புச் செய்யலாம். செயற்குழு, பொதுக்குழு, மத்தியகுழு என்று எங்காவது கேள்விப்பட்ட குழுக்களின் பெயரைச் சொல்லி அவை எல்லாம் கூடி தீர்மானம் இயற்றியதாக அறிக்கை தயாரித்து பத்திரிகைகளுக்கு கொடுக்கலாம்.

தகுதி-தராதரம், அனுபவம் எதுவும் தேவையில்லை. அத்தகைய தத்துவப்படி தானும் ஒரு இயக்கம், தானும் ஒரு தலைவர் என்று சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் பத்திரிகைகள் சில வாயிலாக அறிமுகமாகியவர் உமா பிரகாஷ் என்பவர்.

முன்பு புளொட் இயக்கத்தில் இருந்தவர். பின்னர் விலகி தமிழ்நாட்டில் உள்ள புழல் அகதிமுகாமில் தங்கியிருந்தவர்.

புளொட் இயக்கத்தில் அவர் இருந்த போதும் முக்கிய உறுப்பினராக இருந்தவரல்ல.

என்றாலும் ஆசை விடவில்லை. கொழும்புக்கு வந்து இயக்கம் என்று அறிக்கை விட்டார்.

புளொட் அமைப்புக்கு தானே சொந்தக்காரன் என்று உரிமை கோரினார்.

புளொட் என்ற பெயரில் இரண்டு அமைப்புக்கள். ஒன்றுக்கு திரு.சித்தார்த்தன் தலைவர். மற்றயதற்கு அந்த உமா பிரகாஷ் தலைவர்.

மக்கள் இப்போதெல்லாம் இந்த வேடிக்கைகளை கண்டுகொள்வதில்லை.

உமா பிரகாஷ் என்ற பெயரில் அறிக்கை வந்தாலும் 'அந்த நபர் யார்' என்று அறிய யாரும் ஆர்வம் கொள்ளவில்லை.

சமீபத்தில் அவரை யாரோ சுட்டுக் கொன்றுவிட்டார்கள்.

எதற்காக சில தோட்டாக்களை அந்த உபயோகமற்ற நபருக்காக விரயமாக்கினார்களோ தெரியவில்லை.

ஆனால் சுடப்படுகிறவர்கள் எல்லாமே தியாகிகள் என்று அர்த்தமல்ல.

கொழும்பில் தமிழ் இளைஞர்கள் காணாமல்போன விவகாரத்தோடும் உமா பிரகாஷின் பெயர் சம்பந்தப்படுத்திப் பேசப்பட்டது.



மகளோடு ஸ்ரீமணி அத்துலத் முதலி

அதில் எந்தளவுக்கு உண்மை இருக்கிறதோ இல்லையோ, இவ்வாறான நபர்களுக்கு மக்களின் நலன்குறித்து துளியும் அக்கறையிருக்காது என்பது மட்டும் உண்மையாகும்.

இதன் மூலம் உமாபிரகாஷ் கொல்லப்பட்டதை நியாயப்படுத்துவது நோக்கமல்ல.

ஆனால், எல்லாவற்றையுமே கேலிக்கூத்தாக்கி உள்ளதையும் கெடுப்போர் குறித்து கவலைப்பட யாரும் இருக்கமாட்டார்கள்.

---



## அதிரடி அய்யாத்துரை

மரபியல் ஆராய்ச்சி என்று அமெரிக்க ஆங்கில சஞ்சிகை ஒன்று நீண்ட பெரிய கட்டுரை ஒன்று வெளியிட்டிருக்குது. அதைப் படிச்சுப் பார்த்த நண்பர் என்ன சொன்னவர் தெரியுமோ? "தமிழனின் மரபியல் பற்றி ஒரு ஆராய்ச்சி செய்யவேணும்." "ஏன் அப்பிடிச் சொல்லுறீர்?" என்று கேட்டனான். "அந்தக் காலத்திலை இருந்து இவன் ஒற்றுமையாய் இருந்ததாய் கேள்விப்படேல்லை. அது ஏன்? என்ன காரணம் எண்டு ஆராயவேணும்." நண்பர் சொன்னதிலை நியாயமும் இருக்கு. கவலையும் இருக்கு.

யாழ்ப்பாணத்திலை விருந்து விசயங்களிலை கத்தரிக்காய்க்கு ஒரு முக்கிய இடம் இருக்குதுபாருங்கோ. நாலு கறியிலை கத்தரிக்காய் கட்டாயம் ஒரு கறியாய் இருக்கும். எண்டாலும் விலையும் குறைவு. அதாலை பாமரர் முதல் பணம் படைத்தோர்வரை வாங்கலாம். ஆனால் பாருங்கோ இப்ப நடக்கிற சண்டையிலை எல்லாம் தலைகீழாய் மாறினது மாதிரி கத்தரிக்காய் விலையும் உயர்ந்துபோச்சு. கிலோ என்ன விலை எண்டு நினைக்கிறியள்? நூற்றிப்பத்துரூபா. பயித்தங்காய் அறுபது ரூபா. இதை எழுதிக்கொண்டிருக்கேக்கை இன்னும் விலை வீங்கியிருக்கும். ஒரு நன்மை தீமைக்குக்கூட கத்தரிக்காய்கூட வாங்கமுடியாத நிலை சனத்துக்கு. போர் தந்த பலன்.

முந்தி அவர் பேசாத கூட்டம் ஒரு கூட்டமல்ல. அந்தளவுக்கு ரெண்டு எழுத்து வட்டாரத்திலை தலைவர்களில் முக்கியமானவராய் இருந்தவர். இப்ப வெளியே போ எண்டு தலைவர் சொல்லிப்போட்டார். ஆயுதம் தூக்கின கை கிரிக்கெட் மட்டை பிடிச்சுக்கொண்டு இருக்குது. யோகியாரைத்தான் சொல்லுறன். வாழ்வே மாயம் எண்டு அவர் நினைச்சா அதிலை ஆச்சரியப்படுறதுக்கு ஒண்டும் இல்லை.

திருமலையிலை தேர்தல் பிரச்சாரத்திலை சாதி-ஊர், பிரதேசம் எல்லாம் இழுக்கப்படுகிறதாம். சொல்லுறதுக்கு நல்ல கொள்கையும் இல்லை. தங்கட தகுதியும் தலைகீழ். அதாலைதான் துணைக்கு சாதிவாதமும் பிரதேசவாதமும் இழுக்கப்படுகிறதாம். எதை இழுத்தாவது எலக்‌ஷனிலை வென்று உள்ளே போற ஆட்கள் பிறகு தங்கட கலெக்சனைத்தானே பார்ப்பினம். கவனமாய் இருக்க வேணும்.

உள்ளூராட்சித் தேர்தல் விவகாரத்திலை வவுனியாவிலே இரு தமிழ் அமைப்புக்களுக்கை மோதல் எண்டு கதை. சேர்ந்து கேட்கத்தான் முடியேல்லை. மோதிக்கொள்ளாமல் எண்டாலும் இருக்கலாம்தானே. பிறகு ரெண்டு எழுத்தாரை மட்டும் குறை சொல்லுறதிலை என்ன புண்ணியம்?

தெற்கிலை எலும்புக்கூடு விசயத்தை ஆராயச்சொல்லி தமிழ் கட்சி தலைவர்களில் ஒருவர் கடிதம் எழுதினவராம். தங்கமான குணம். அதிலை பாருங்கோ இயக்கச் சண்டைகளால் வடக்கு-கிழக்கிலை எலும்புக்கூடுகள் இருக்கிற விசயத்தைப் பற்றி மட்டும் ஏன் இவை வாயே திறக்கிறேல்லை. வீதியிலை சுடுபட்டு கொளுத்தப்படேக்கை இவை எங்கை இருந்து காற்று வாங்கிக்கொண்டிருந்தவை? என்ன கேட்கிறது நியாயம்தானே?


அன்பு என்கிறது சிலருக்கு வெறும் மூன்றெழுத்து விவகாரம். ஆனால் வெகு சிலருக்கு அதுதான் மூச்சான விசயம். அன்பு மனிதரிலும் வைக்கலாம். கடவுளிலும் வைக்கலாம். காரைக்கால் அம்மையார் இறக்காத அன்புக்கும், மறவாத நினைவுக்கும் வரம் கேட்கிறார்.

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும்: மீண்டும் பிறப்புண்டேல் உனை என்றும்
மறவாமை வேண்டும்: இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்கவேண்டும்."

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# அன்று அவர் சொன்னதும் இன்று அவருக்குச் சொல்லப்படுவதும்



மாத்தையா

சில பழைய செய்திகள்,பேட்டிகள் சில வருடங்கள் சென்றபின் மீண்டும் திரும்பிப் பார்க்கும்போது சுவாரசியமாக இருக்கும்.

இப்போது புலிகள் அமைப்புக்குள் இந்தியாவின் சதிவலையில் சிக்கியவர் என்று குற்றம்சாட்டப்படும் மாத்தையா அன்று ஏனைய தமிழ் அமைப்புக்களை இந்தியாவின் கைக்கூலிகள் என்று குற்றம்சாட்டினார்.

அவர்களை கவனிக்க வேண்டிவரும் என்று எச்சரித்தார்.

இப்போது மாத்தையாவை குற்றவாளிக்கூண்டில் நிறுத்தி, அவர் இந்தியாவின் கைக்கூலி என்று குற்றம் சாட்டும் புலிகள் அமைப்பினர் அவருக்கு அதிக பட்ச தண்டனை வழங்கப்படவேண்டும் என்று கூறுகின்றனர்.

1990 ஜனவரி21-பெப்ரவரி5க்கான 'இந்தியா டுடே' -சஞ்சிகையில், அப்போது மாத்தையா அளித்த பேட்டியும், அதை தொடர்ந்து நிருபரின் கருத்தும் கீழே அப்படியே தரப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் துணைத் தலைவரும், புதிதாகத் துவக்கப்பட்டுள்ள அதன் அரசியல் கட்சியான 'விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி'யின் தலைவருமான கோபாலசாமி 'மாத்தையா' வவுனியா மாவட்டத்தில் ஒரு சிறிய கிராமத்தில் நிருபர் களைச்சந்திக்க, இரண்டு வருடங்களில் முதல்முறையாகத் தமது மறைவிடமான வன்னிக்காட்டிலிருந்து வெளியே வந்தார். அரசுடனான பேச்சு வார்த்தையில் ஒப்பந்தம் உருவாகாமல் தமிழ் ஈழக் கோரிக்கையைத் தன் கட்சி கைவிடப் போவதில்லை என்கிறார்.

"கோரிக்கையைக் கைவிட இது சந்தர்ப்பம் அல்ல" என்கிறார். எதிரி குழுக்களுக்கு "இந்தியரின் கூலிகள்" என்று பெயர் சூட்டினார். "அவர்கள் ஆயுதங்களை எங்களிடம் ஒப்படைத்துவிட்டுத் தேர்தலில் பங்குகொள்ளட்டும் இல்லாவிட்டால் அமைதிப்படையைக் கவனித்த மாதிரி அவர்களையும் கவனிப்போம்" என்று எச்சரித்தார்.

புலிகள் ஈழம் கேட்பதைக் கைவிட மறுப்பதும், ஆயுதத்தைக் கீழே போட மறுப்பதும் பெரும் பான்மை சிங்களர்களுக்கு இவர்களின் உண்மையான குறிக்கோள் குறித்த சந்தேகத்தை அதிகரித்திருக்கிறது. அரசு, புலிகளை ஒரேயடியாக நம்பிவிட வேண்டாம் என்று இலங்கைப் பத்திரிகைகளும், இலங்கை இராணுவத்தில் சில பிரிவினரும் அறிவுறுத்தி வருகிறார்கள். கட்டு திட்டமுள்ள அந்தக் கெரில்லா அமைப்பு பலமுறை அமைதிக்கான திட்டங்களைக் கவிழ்த்திருப்பதை நினைத்துப் பார்க்கும்போது இந்தப் புத்திமதியின் அவசியம் புரிகிறது.

இலங்கைப் பாதுகாப்புப்படையினரிடம் புலிகள் 'திமிராக' நடந்துகொள்ளும் போக்கு இந்திய அமைதிப்படையிடமிருந்து புலிகள்தான் நாட்டை விடுவித்ததாகச் சொல்லிக்கொள்வது, தமிழ் தேசியப் படையிடமிருந்து கைப்பற்றிய ஏராளமான ஆயுதங்களைத் தர மறுப்பது இதெல்லாம் குறித்து சீனியர் இராணுவ அதிகாரிகள் எரிச்சல் படுவதிலும் ஆச்சரியமில்லை.



இந்திய அமைதிப்படை வெளியேறியபோது

புலிகளுடன் பிரேமதாசா அரசு சரசங்கள் நடத்தும் போது, ஒப்பந்தத்தை ஆதரித்து வந்துள்ள ஈ.பி.ஆர்.எல்.எஃப். போன்ற குழுக்களின் கதி என்ன ஆகுமோ என்ற கேள்வி பெரிதாகி வருகிறது. இந்தியா தங்களைக் கவனித்துக்கொள்ளும் என்ற நம்பிக்கையில் ஆயுதங்களைப் போட்டுவிட்டு ஜனநாயக முறைக்குத் திரும்பிய ஈ.பி.ஆர்.எல்.எஃப். முதலிய குழுக்கள் வெற்றி பெற முடியாது என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டன.

போர்ப்புகை மண்டலத்தில் சிக்கிய வடக்குப் பகுதி தமிழர்களுக்கு, வெளிச்சம் வர வழி பிறக்கும் என்ற நம்பிக்கை இன்றும் வரவில்லை. வவுனியா மாவட்டம் செட்டிக்குளத்தில் உள்ள டீக்கடைக்காரர் ராஜரத்தினம் சொல்கிறார்: "இன்னும் பயந்துதான் குடியிருக்கோம்." "சுட்டாங்க. குடிசை மேலே எல்லாம் தோட்டாக்களா சீறிப் பறந்தன. தோட்டா படாம என் குழந்தை மேல கவிழ்ந்து மணிக்கணக்கா கிடந்தேன்." என்கிறார் என். பொன்னையா (வயது 50). அவர் தமிழ்ப் பேராளிக் குழுக்களின் சண்டையைச் சொல்கிறார். "எங்கள விட்டுட்டா போதும்னு ஆயிடிச்சு" என்று அந்த ஊரில உள்ள அகதி சொன்னார்.

-கொழும்பிலிருந்து பி.ஜெயராம்-

# மத்திய கிழக்கில் பூரண அமைதிவரும்!

# அமெரிக்க, இஸ்ரேல், சிரியா தலைவர்கள் நம்பிக்கை!!



கிளின்ரன்- அசாத்

மத்திய கிழக்கில் 1994ல் பூரண அமைதி ஏற்பட்டுவிடும் என்று அமெரிக்க ஜனாதிபதி, இஸ்ரேல் பிரதமர் இற்ஸாக் ராபின் மற்றும் சிரியாவின் அதிபர் ஹாஃபெஸ் அசாத் ஆகியோர் எதிர்பார்க்கின்றனர்.

கடந்த மாத மையப்பகுதியில் ஜெனிவாவில் கிளின்ரன், சிரிய ஜனாதிபதி அசாத்தை சந்தித்து உரையாடிய பின்னர் அமைதிக்கான நம்பிக்கை வலுவடைந்திருப்பதாக அறியப்படுகிறது. "சகலருக்கும் உரிமை வழங்கத்தக்க உண்மையான சமாதானத்தையே நாங்கள் எதிர்பார்க்கிறோம். இதற்கான வழியினை வகுப்பதற்கேற்ற திராணி இஸ்ரேல் தலைவர்களிடம் இருக்குமானால் சகலருக்கும் நன்மை கிடைக்கும்" என்று அசாத் தெரிவித்தார்.

இத்தகைய ஒரு ஆணித்தரமான கருத்தினையே அசாத்திடம் எதிர்பார்த்ததாக ஜனாதிபதி கிளின்ரன் குறிப்பிட்டார். இதனைத் தொடர்ந்து சிரியாவும் அமெரிக்காவும் மேற்கொண்டு பேச்சு வார்த்தைகளை வாஷிங்டனில் தொடங்கியுள்ளன.

சோவியத் யூனியன் சீர்குலைந்ததைத் தொடர்ந்து சிரியாவின் பொருளாதார நிலையினை மேம்படுத்த மேற்கு நாடுகளின் உதவியினை நாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேலும் சிரியாவின் குரலுக்கு மதிப்பினைத்தர முன்வந்திருக்கிறது. இருப்பினும் கோலான் குன்றுகளில் ஏற்கனவே குடியமர்த்திய 13,000 இஸ்ரேலியர்களை அப்புறப்படுத்துவது என்பது இலகுவான காரியமல்ல என்பதும் உணரப்படுகிறது. இங்கு குடியேறியுள்ளவர்கள் மட்டுமல்லாமல் இஸ்ரேல் நாட்டிலுள்ள பெருவாரி மக்களும்கூட இக்குடியேற்றவாசிகளின் பெயர்வை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களை நடத்திய வண்ணமுள்ளனர்.

சிரிய-இஸ்ரேலிய எல்லையில் வட இஸ்ரேலினை ஒட்டி 900-மீட்டர் செங்குத்தாக அமைந்த குன்று கோலன். அமெரிக்க இராஜதந்திரி ஹென்றி கீஸிங்கர் 1974ல் தலையிட்டு நிறுத்தி வைக்கும் வரை 1960லிருந்து கோலன் குன்றுகளை சிரியா தொடர்ந்து பீரங்கியால் தாக்கிவந்திருக்கிறது.



போர் இனி வராது என்ற நம்பிக்கையில்

சிரியாவைத் தொடர்ந்து ,சமாதானப்பாதையில் ஜோர்தானும் காலடி வைக்கும் என்றே நம்பப்படுகிறது.

# நிலநடுக்கம் நீடித்தது 30 நொடிகள்

# ஏற்பட்ட சேதம் 30 இலட்சம் கோடி டொலர்கள்!!

## அமெரிக்காவின் பெரிய நகரம் குலுங்கியது

அமெரிக்காவின் இரண்டாவது பெரிய நகரம் லொஸ் ஏஞ்சல்ஸ். இந்நகரத்தின் சுற்றுப்புறத்தை ஜனவரி மாத மத்தியில் உலுக்கிய நிலநடுக்கம் சொல்லொணாச் சீரழிவுகளை ஏற்படுத்தி விட்டது.

30 நொடிகளே நில நடுக்கம் நீடித்தது. இந்த இயற்கையின் சீற்றத்தால் ஆக ...பேர் மட்டுமே உயிரிழந்துள்ளனர் என்ற போதிலும் ...டுகாயங்களாலும் அதிர்ச்சியினாலும் பல்லாயிரக் ...ணக்கானோர் பாதிப்படைந்துள்ளனர்.

மேம் பாலங்களால் அமைக்கப்பட்ட 9 நெடுஞ்சாலை ...ர் கம்பிச்சுருள்களைப் போல் திரிந்துவிட்டன. பெட்ரோல் ...ண்ணை கொண்டு செல்லும் 250 குழாய்கள் ...டைந்தமையினால் பெரும் தீ பரவியது. மின் ...ம்பங்கள் சாய்ந்தும் கடத்திகள் உடைந்தும் போனமை ...னால் 30 இலட்சம்பேர் மின் சக்தியை இழந்தனர். நீர் நிலைகளும் குழாய்களும் உடைந்தமையினால் 40,000 பேர் நீர்வசதியினை இழந்துள்ளனர். பல கட்டிடங்கள் சிதைந்துபோய் பல்லாயிரக்கணக்கானோர் தங்கள் இருப்பிட வசதிகளை இழந்தனர்.

இந்தப் பேரழிவினால் ஏறத்தாழ 30 இலட்சம் கோடி டொலர் சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்று கலிபோர்னிய கவர்னர் பேற் வில்சன் ஜனாதிபதி கிளின்ரனுக்கு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்.

நெடுஞ்சாலைகளைப் புனரமைக்க கிளின்ரன் நிர்வாகம் 4 கோடி 10 இலட்சம் டொலரை அனுமதித்திருக்கிறது. குறைந்த வட்டியில் தனியார் நிறுவனங்களைச் சீரமைக்க 64 கோடி டொலரும் வழங்கப்பட்டிருக்கிறது.



நிலநடுக்கத்தால் கார்கள் மீது இறங்கியுள்ள கட்டிடம்.



## கார் சுமக்கும் கழுதை வண்டி

பலஸ்தீனத்தில் ஓயாத சண்டையில் வாகனங்களும் எலும்புக்கூடுகளாய் வீதிகளில் கிடக்கின்றன. அதில் ஒரு கார்தான் கழுதை வண்டியில் செல்கிறது. கழுதை பொதி சமக்கும். கழுதை வண்டி கார் சுமக்குமோ? சுமக்கிறதே!

## இரண்டாவது முறையும் பிறந்தது இரட்டை!

முதல் பிரசவத்தில் இரண்டு ஆண் குழந்தைகளைப் பெற்ற அமெரிக்கப் பெண் 27 மாதத்திற்குப் பின் தனது இரண்டாவது பிரசவத்தில் இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்காவில் உள்ள புளோரிடிடா மாநிலத்தைச் சேர்ந்த ஜெனிபர் குக் (வயது 30) என்ற பெண்மணிக்கு முதல் பிரசவத்தில் இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தன.

இப்போது இரண்டு பெண் குழந்தைகள் பிறந்துள்ளன.

உலகில் 80 இலட்சம் பெண்களில் ஒருவருக்குத்தான் இவ்வாறு இரு தடவையும் இரட்டைக்குழந்தைகள் பிறக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜெனிபர் தம்பதியினருக்கு ஒரு சந்தேகம். அடுத்த பிரசவத்திலும் இரட்டைக் குழந்தைகளே பிறந்துவிடுமோ என்று.

அதனால் நாலு குழந்தைகளே போதும் என்று முடிவு செய்துவிட்டதாக தெரிவித்துள்ளனர்.

## "ஏன் கொன்றாய் பெண்ணை?" "ஒரு பொழுது போக்குக்குத்தான்!"

பாரிசிலே ஒரு விசித்திரமான வழக்கு. ஆனால் விபரீதமான கொலைகாரன் மீதான வழக்கு.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் முதல் கொலை. அதன்பிறகு தொடர்ந்து ஐந்து கொலைகள்.

கொல்லப்பட்டவர்கள் அனைவரும் பெண்கள். அனைவரும் 73 வயதிற்கு மேற்பட்டவர்கள்.

கொலைகாரன் கைது செய்யப்பட்டான். பாரிசின் மேற்கு புறநகர் பகுதியில் வைத்து கைது நடந்தது. பின்னர் வழக்கு தொடரப்பட்டது.

"ஏன் இப்படிச் செய்தாய்?" என்று கேட்டபோது கொலையாளியான அந்த 22 வயது இளைஞன் அலட்சியமாகச் சொன்ன பதில் இது,

"வேலை இல்லை. பொழுதும் போகவில்லை. மேலும் அவர்கள் அந்த வயதிற்கு மேல் வாழ்ந்து என்ன கிழிக்கப் போகிறார்கள். ஒரு சந்தோசத்திற்காக செய்தேன்"

நீதிபதி வாயடைத்துப் போனார்.

இனப்பூசல் காரணமாக பெரும் பாதிப்படைந்துள்ள பிரதேசமாக பொஸ்னியா விளங்குகின்றது.

இங்கு சேர்பிய இனத்தவர்களுக்கும், பொஸ்னிய முஸ்லிம்களுக்குமிடையிலான மோதல்கள் மிகவும் மோசமான நிலையை அடைந்திருக்கக் காணப்படுகின்றன.

பொஸ்னியாவில் இனரீதியிலான மோதல்கள் படுமோசமான கட்டத்தை எட்டியதையடுத்து ஐக்கிய நாடுகள் ஸ்தாபன அமைதிகாக்கும் படையினர் பொஸ்னியாப் பிரதேசத்தினுள் பிரவேசித்தனர். இராணுவ ரீதியாகப் பலம் பெற்றுள்ள பல முக்கிய நாடுகள் இந்த ஐக்கிய நாடுகள் ஸ்தாபன

மார்க்கமான தாக்குதல்களையும், ஷெல் குண்டுவீச்சுக்களையும் குடாநாடு நோக்கி இடைவிடாது மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த ஆகாய மார்க்கமான தாக்குதல்களினால் புலிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் மிகக் குறைவானவையாகவே காணப்படுகின்றன. புலிகளின் நிலைகளை நோக்கி வீசப்பட்டதாக்குதல்களினால் பொதுமக்களின் உயிர், உடமைகளுக்கே பாரியளவு சேதம் ஏற்பட்டுள்ள நிலை காணப்படுகின்றது.

யாழ்குடாநாட்டை புலிகளின் பிடியிலிருந்து விடுவிப்பதும், அங்கு மாமூல் வாழ்க்கையை ஏற்படுத்துவதுமே

ஆனால் ஆட்சியாளர்களால் பயங்கரவாதிகள் என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ள ஆயுத பாணிகளான தமிழீழ விடுதலைப்புலிகள், தாமே தமிழ்பேசும் மக்களின் பாதுகாவலர்கள் என்ற ரீதியில் தமது கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

அத்துடன் இலங்கை அரசு வடக்கு-கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்களின் கோரிக்கைகளை உதாசீனம் செய்து வருவதாகவும், தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் அத்துமீறிய குடியேற்றங்களை நடத்துவதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்து

## அலசுவது – இராஜதந்திரி

எனவே இலங்கை அரசின் இத்தகைய படைபல அதிகரிப்புகள் பாரியளவிலான இராணுவ விஸ்தரிப்பொன்றையே புலப்படுத்தி நிற்கின்றது. அத்துடன் இந்த விஸ்தரிப்பானது ஓர் அந்நிய நாட்டுப்படையொன்றுடனான யுத்தத்தை

படையினர் வெற்றியை ஒருபோதும் இலகுவில் பெற்றுவிடமுடியாதென்பது உறிதியாக இருக்கின்றது.

புதிய தளபதி ஜெரிடி சில்வா போர்த் தந்திரங்களை வடிவமைப்பதற்கு முன்னர், இராணுவத்தை நல்லமுறையில் சீரமைக்க

# பொஸ்னியா: சோர்வடைந்து போயிருக்கும் ஐ.நா. அமைதிப் படை



அமைதிப்படையில் இடம்பெற்றிருந்தன.

கனரக யுத்த டாங்கிகள், கவச வாகனங்கள், மற்றும் பல்வேறு ரகத்திலுமான போர்த்தளபாடங்களுடன் ஐ.நா. படையினர் இருபத்தியொரு மாதத்துக்கு முன்னர் பொஸ்னியாவினுள் வந்திறங்கியிருந்தனர்.

சேர்பியர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையிலான மோதலை தடுத்துநிறுத்தி ஓர் அமைதியான சூழலை உருவாக்குவதே ஐ.நா அமைதிப்படையினரின் பிரதான குறிக்கோளாக இருந்தது. அத்துடன் தாறுமாறான மோதலினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த பொஸ்னிய முஸ்லிம் அகதிகளைப் பாதுகாப்பதும், அவர்களுக்கான உதவிப்பண்டங்களை விநியோகிப்பதும் ஐ.நா.படையினரின் பிரதான பணியாக இருந்து வந்தது.

ஆனால் ஐ.நா படையயினர் தமது குறிக்கோளை எட்டுவதில் தோல்வியையே அடைந்துள்ள நிலை தற்போது காணப்படுகின்றது.

பொஸ்னியாவில் ஐ.நா. அமைதிப் படையினரின் தலைமையை ஏற்றிருந்த கனேடிய நாட்டுத் தளபதியான லெப் ஜெனரல் பிரான்ஸிஸ் பிறிக்குமொன்ட் என்பவர் தமது இயலாமையை ஏற்றுக் கொண்டு ஐ.நா.படைத் தளபதிப் பதவி யிலிருந்தும் இம்மாத முற்பகுதியில்

பாதுகாப்புப்படையினரின் இலக்காக இருக்கின்றது.

ஆனால் அந்த இலக்கை அடையும் வகையில், அவர்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் 'பலத்த அடியை' வாங்குவதாகவே விளங்குகின்றது.

வடக்கே தமது ஆதிக்கத்தைச் செலுத்திவரும் தமிழீழ விடுதலைப்புலிகள் தம்மை ஒரு முழு அளவிலான இராணுவ அமைப்பாக மாற்றிக்கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

அவர்கள் இலங்கை பாதுகாப்புப் படையினரை ஓர் இனரீதியிலான இராணுவம் என்றே வர்ணித்து வருகின்றனர். அத்துடன் இலங்கையின் பாதுகாப்புப்படையினர் இன அழிப்பு நடவடிக்கையிலேயே குதித்துள்ளனர் என்றும் தீவிர பிரசாரஞ் செய்து வருகின்றனர்.

அரசியல் தீர்வு முயற்சிகள் அசமந்தப்

வருகின்றனர்.

இதனையடுத்து 'தமிழ் ஈழம்' அதாவது தமிழ்பேசும் மக்களுக்கென்று தனியொரு நாட்டை உருவாக்குவதே தமது இலட்சியம் என்று புலிகள் கூறிவரு கின்றனர். மேலும் தமது நிலைப்பாடு குறித்து அரசாங்கம் வேண்டுமானால் பேச்சுவார்த்தைகளை நடத்தலாம் என்றும் அவ்வப்போது கூறிவருகின்றனர்.

அரச தரப்பினர் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் மேற்கொண்டுவரும் தமது இராணுவ முஸ்தீபுகளை ஒரு பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கை என்றே கூறி வருகின்றனர்.

ஆனால் புலிகளுடனான யுத்தம் ஒரு சராசரிப் பயங்கரவாத இயக்கத்துடனான அல்லது ஒரு தீவிரவாதக் குழுவுடனான யுத்தம் போன்று காணப்படவில்லை.

அந்நிய நாடொன்றுடன் நடத்தும் யுத்தம் ஒன்றைப் போலவே வடக்கு-கிழக்கில்

முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டதைப் போன்றே விளங்குகின்றது.

ஒரு நாட்டினுள்ளேயே பிரிவினைவாத அமைப்பொன்றுக்கு எதிராக முப்படை களையும் பாரியளவில் விஸ்தரித்து ஒரு நீண்ட யுத்தத்தை மேற்கொள்ளும் நாடொன்று உலகில் காணப்படுமானால், அந்நாடு இலங்கையாகவே இருக்கமுடியும்.

உலகில் பல நாடுகளில் தீவிரவாத இயக்கங்கள், பயங்கரவாதக்குழுக்கள், பிரிவினைவாத அமைப்புக்கள் இருக்கக் காணப்படுகின்றன.

ஆனால் இலங்கையில் இயங்கிவரும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் இன்று உலகில் உள்ள ஒரு பலம்மிக்க பிரிவினைவாத அமைப்பு என்று கூறுமளவுக்கு ஆயுத தளபாடங்கள்,

வேண்டும் என்பதில் ஆர்வமாக இருக்கின்றார்.

இராணுவத்தினரிடையேயும் பல்வேறு மனிதாபிமானப் பிரச்னைகள் நிலவுவதை புதிய தளபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தப் பிரதேசங்களில் நீண்டகாலம் கடமையாற்றுவதால் உள ரீதியிலான பாதிப்புக்கள், பாலியல் பிரச்னைகள், மற்றும் கடிதப் போக்குவ்ரத்து, தொலை தொடர்பு என்பவற்றில் காணப்படும் சிக்கல்கள் என்பன துருப்பினரை பெரும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளன என்று அவதானிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரில் பலர் உளரீதியிலான பாதிப்புக்கள் காரணமாக தம்மைத்தாமே சுட்டுத் தற்கொலை செய்யும் சம்பவங்களும் அண்மைக்காலங்களில் அதிகரித்திருப்பதாக தகவலறிந்த

# மனிதாபிமானப் பிரச்னைகளை எதிர்நோக்கும் இலங்கைப் படையினர்!

விலகியிருந்தார்.

"ஒரே பிரதேசத்தில் போரிடும் இரு தரப்பினரிடையே அமைதியைப் பேணுவது சிரமமான காரியம்" என்று அந்த கனேடிய தளபதியான பிறிக்குமொன்ட் தெரிவித் திருந்தார்.

இதனையடுத்து பொஸ்னியாவில் ஐ.நா.பண்டைக்கு தலைமைதாங்கும் பொறுப்பை பிரிட்டனைச் சேர்ந்த

போக்காக இருக்கக்காணப்படும் இத்தருணத்தில், கடல், தரை, ஆகாய மார்க்கமாக சுற்றி வளைக்கப்பட்டுள்ள புலிகளின் ஆதிக்க வலயமான வடக்குப் பிரதேசம், பல்வேறு வகையான நெருக்கடிகளையும் அனுபவித்ததாகவே காணப்படுகின்றது.

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வாழும் பெரும்பான்மையான

இடம்பெறும் யுத்த நடவடிக்கைகள் காணப்படுகின்றன.

இலங்கை இராணுவம் பல்வேறு பரிமாணங்களையும் பெற்றுள்ளது. இலங்கை சுதந்திரமடைந்தபோது பிரிட்டிஷ் இராணுவத்தினரால் விட்டுச் செல்லப்பட்ட கவச வாகனங்கள் மட்டுமே இலங்கை இராணுவத்தினரிடம் இருக்கக் காணப்பட்டன.

மிக அண்மைக்காலம் வரை இக்கவச வாகனங்களையே இலங்கை இராணுவம் தன்வசம் வைத்திருந்தது. ஆனால் தற்போது இராட்சத யுத்த டாங்கிகளை

ஆளணிகளுடன் பலம் பெற்றிருக்கக் காணப்படுகின்றனர்.

இளைப்பாறிய இலங்கை விமானப் படைத்தளபதியான ஏயர் மார்ஷல் ஹரி குணதிலக்கா அண்மையில் சஞ்சிகை யொன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றில் புலிகளின் பலம்பற்றி விரிவாக எடுத்துரைத்திருந்தார்.

ஏயர் மார்ஷல் ஹரி குணதிலக்கா கூறியது இதுதான்: "புலிகளிடம் சக்தி மிக்க ஆயுதங்கள் உண்டு. அவர்கள் ஓர் இராணுவ சக்தியாக தம்மைக்கட்டி யெழுப்பியுள்ளார்கள். அவர்களிடம்

வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனவே இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டதைப் போல பொஸ்னியாவில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் சார்பாக பந்நாட்டுப் படைகள் நிலைகொண்டுள்ள போதிலும் சேர்பிய இனத்தவர்களுக்கும், பொஸ்னிய முஸ்லிம்களுக்குமிடையிலான மோதல்களை தடுத்து நிறுத்துவது மிகவும் சிரமமான பணியாகவே இருந்து வருகின்றது.

இதன் காரணமாக பொஸ்னியாவில் ஐ.நா.படைத்தளபதிகளே அப்பாவி மக்கள் அனுபவிக்கும் மனிதாபிமானக் கஷ்டங் களைக் கண்டு எதுவும் செய்ய



## "புலிகளிடம் [illegible]ரைப்படை உண்டு. கடற்படை உண்டு. வி[illegible]னப்படை மட்டும் இல்லை."

**இளைப்பாறிய விமானப் படைத்தளபதி ஹரி குணதிலக்கா**

லெப்டினன்ட் ஜெனரல் சேர் மைக்கேல் ரோஸ் என்ற புதிய தளபதி ஏற்றுள்ளார்.

ஒரு நாடொன்றில் இருவேறு இனங்காளகவும், இரு வேறு மதங்களைச் சேர்ந்தவர்களாகவும், இருவேறுகலாசார, பிரதேச பாரம்பரியங்களைக் கொண்டவர் களாகவும் இருக்கும் மக்களிடையே இனக்குரோதம் ஒரு பூதாகாரவடிவம் பெறும்போது ஏற்படும் விளைவுகள் மிகப்பயங்கரமானவை என்பதனையே பொஸ்னிய நிலவரம் உணர்த்தி நிற்கின்றது.

இலங்கையிலும் இன்று வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் நிலவும் சூழ்நிலையானது ஓர் இனரீதியிலான யுத்தமாகவே வடிவ மெடுத்துள்ள நிலைகாணப்படுகின்றது.

வடக்கே பெரும்பலத்துடன் இருந்து வரும் தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கத்தினர் இராணுவத்தினரை மூர்க்கத்தனமாக எதிர்கொண்டவர்களாக இருக்கின்றனர்.

மறுபுறத்தே பாதுகாப்புப்படையினர் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தாக்குதல்களை தரைமார்க்கமாக முன்னெடுப்பதில் எச்சரிக்கையாக நடந்துகொள்கின்றபோதிலும், ஆகாய

தமிழ்பேசும் மக்கள் ஓர் அமைதியான அரசியல் தீர்வையே எதிர்பார்த்து நிற்கின்றனர்.

ஆனால் ஆயுதபாணிகளான தமிழீழ விடுதலைப்புலிகள் தாம் பேச்சுக்களுக்குத் தயாராக இருப்பதாகவும், சமாதானத்தில் தமக்கும் அக்கறையிருப்பதாகக் கூறிக் கொள்ளுகின்றபோதிலும், நாளுக்கு நாள் தமது ஆயுத பலத்தையும், மோதலுக்கான ஆட்பலத்தையும் அதிகரித்து வருபவர் களாகவே காணப்படுகின்றனர்.

இந்நிலையில் தமிழ்பேசுவோரையே முற்றுமுழுதாகக் கொண்ட தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினரும், தொண்ணூற்றியொன்பது சதவீதம் சிங்கள மொழி பேசுவோரை கொண்ட இலங்கை இராணுவமும், இரு வேறு இனங்களின் இராணுவ அமைப்புக்களாகவே விளங்கியிருக்கக் காணப்படுகின்றன.

"தமிழர்கள் எல்லோரும் பயங்கர வாதிகளல்லர். கணிசமானளவு தமிழ்பேசும் மக்கள் தென்னிலங்கையில் சிங்கள இன மக்களுடன் அன்னியோன்யமாக வாழ்ந்து வருகின்றார்கள்" என்று ஆட்சியாளர்கள் அடிக்கடி கூறிவருகின்றனர்.

இலங்கை அரசு தன்வசம் கொண்டுள்ள[illegible]. இதுதவிர வேறு நெடுந்தூர பீரங்கிக[illegible], மற்றும் ஏவுகணைகள் என்பவற்றை[illegible]ம் இலங்கை இராணுவம் தற்போது பெருமளவில் கொண்டிருக்கக் காணப்படுகின்றது.

விமானப்படையை எடுத்துக்கொள்ளும் பட்சத்தில் அமெரிக்கப்படைகள் வியட்நாமிய யுத்தத்தில் பயன்படுத்திய 'பெல்-212' ரக ஹெலிகப்டர்கள் முதற்கொண்டு, ரஷ்யர்கள் ஆப்கானிஸ்தானில் பயன்படுத்திய எம்.ஐ.17 ரக ஹெலிகப்டர் வரை இலங்கை விமானப்படை கொண்டிருக்கக் காணப்படுகின்றது.

இவை தவிர சூப்பர்சோனிக் குண்டு வீச்சு விமானங்கள், மற்றும் வேறு தரங்களிலான விமானங்கள் என்ப வற்றையும் விமானப்படையினர் வைத்துள்ளனர்.

கடற்படையினரும் அதிவேக ரோந்துப்படகுகள், பீரங்கிப்படகுகள், கரையிறங்க உதவும் இராட்சத படகுகள் எனப் பல்வேறு வகையான கடற்படைக் கலங்களையும் கொண்டுள்ளனர்.

படைக்கலங்கள், யுத்த வாகனங்கள் மட்டுமல்லாது ஆட்பலமும் என்று மில்லாதவாறு அதிகரித்திருக்கக் காணப்படுகின்றது.

கடற்படைப் பிரிவும் இருக்கக் காணப்படுகின்றது. அப்பிரிவில் பல உறுப்பினர்களுடன் படகுகள், மற்றும் இலங்கைக் கடற்படையினரிடமிருந்து கைப்பற்றிய அதிவேக படகுகளையும் புலிகள் தம் வசம் வைத்துள்ளார்கள். மேலும் அவ்வப்போது கடற்படைப் படகுகளையும் தாக்கியுள்ளார்கள்.

"புலிகளிடம் விமானப்படை மட்டுமே காணப்படவில்லை. அப்படையும் அவர்களிடம் இருக்குமானால் அவர்கள் பூரணமான முப்படைப் பலத்தை உடையவர்களாகவே இருப்பார்கள்" என்று ஏயர் மார்ஷல் ஹரி குணதிலக்கா குறிப்பிட்டிருந்தார்.

எனவே தமிழீழ விடுதலைப்புலிகள் ஆட்சியாளர்களினால் ஒரு பயங்கரவாதக் குழுவினராக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், உலகறிந்த பயங்கரவாதக் கும்பலான மாபியா (Mafia) அதனை யொத்த ஏனைய பயங்கரவாதக் குழுக்களைவிட முற்றிலும் வித்தியாச மானவர்களாக, ஒரு நாட்டின் தேசியப்படை போன்றே புலிகள் வடபகுதியில் இயங்கிவருவதை அறியக்கூடியதாக இருக்கின்றது.

இந்நிலையில் புலிகளுடன் மேற்கொள்ளப்படும் மோதல்களில் அரச

முடியாதவர்களாக இருக்கும் நிலைகாணப்படுகின்றது.

இலங்கையிலும் வடக்கு-கிழக்கில் அப்பாவிப் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயுதமேந்திய படையினரும் மனிதாபிமான ரீதியிலான பிரச்னைகளுக்குள்ளாகி பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.


இந்நிலையில் வடக்கு-கிழக்கு யுத்தம் இலங்கையர்கள் அனைவரினதும், சக்திக்கு அப்பாற்பட்ட விதத்தில் 'கர்ணகடூரமாக' விஸ்தாரமடைந்திருக்கக் காணப்படுகின்றது.

இராணுவத்தளபதி ஜெரி டி சில்வா கூட இருவாரங்களுக்கு முன்னர் 'கொழும்பு ஒப்ஸேவர்' (The observer) பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில், வடக்கு-கிழக்கு பிரச்னையை தீர்க்க வெறுமனே இராணுவ நடவடிக்கைகளை மட்டும் முன்னெடுக்க முடியாது. அரசியல்ரீதியிலான அணுகு முறைகளும் வலுவடைய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.


ஆனால் தேர்தல், தேர்தல் என்று கூறி கட்சித்தாவல்கள், அரசியல் திருகு தளங்களில் ஈடுபட்டுள்ள தென்னிலங்கை அரசியலாளர்களுக்கு, வடக்கு-கிழக்குப் பிரச்னையின் தாக்கத்தை நேரடியாக உணர்ந்தவர்கள் கூறுபவை "செவிடன் காதில் ஊதிய சங்கொலியாகவே" இருக்கக் காணப்படுகின்றது.

# முக அலங்காரம் மட்டும் போதுமா? நக அலங்காரமும் அழகு தரும்!









பெரும்பாலான பெண்கள் தங்கள் முகத்தையும் தலையையும் ஒப்பனை செய்வதோடு தங்கள் அலங்காரப்பணி முடிந்துவிட்டது என்று கருதுகிறார்கள். அத்துடன் அழகான புடவையினை உடுத்திக்கொள்வதுடன் திருப்தியடைவோரும் உண்டு. ஆனால், அலங்காரம் என்பது உச்சி முதல் உள்ளங்கால்வரையும் செய்துகொள்ளப்பட வேண்டிய செயலாகும்.

முக-சிகை அலங்காரத்துக்கு எத்தகைய கவனம் தேவையோ அதே அளவு கவனம் கை, கால் மற்றும் விரல் நகங்களுக்கும் செலுத்தப்படவேண்டும். கை விரல்களும் நகங்களும் அழகுடன் மட்டுமல்லாமல் போதுமான சுகாதாரத்துடனும் பேணப்படவேண்டும். நாம் உண்ணும் உணவினைத் தயாரிக்க உதவும் கை விரல்கள் சுத்தமாக இல்லாவிட்டால் உண்ணும் உணவு சுகக்கேடுகளுக்கே வழி வகுத்துவிடும்.

நகத்தை வளர்ப்பவர்கள் நக-சதை இடைகளுக்குள் அழுக்குகள் சேராவண்ணம் பார்த்துக் கொள்ளுவது மிக மிக அவசியம். வெறுமனே விரல்களை மட்டும் கழுவிச் சுத்தமாக வைத்திருந்தால் போதாது. நகச் சுத்தமும் மிகவும் பிரதானமானது.

வாரத்தில் ஒரு அரைமணி நேரமாவது நக அலங்காரத்துக்கென பெண்கள் ஒதுக்கி வைத்தல் நலம். நகத்தை அழகாக-அளவாக வெட்டுவது, சிலும்பலில்லாமல் தேய்ப்பது, நகப்பூச்சுப் பூசுவது போன்ற மற்றும் அழுத்தம் (மசாஜ்) கொடுப்பது போன்றவற்றை இந்த அரைமணி நேரத்துள் செய்துவிடலாம்.

நகங்களைப் பேணிப் பாதுகாக்க சில வழிகளைத் தருகிறோம். இவற்றை அனுசரித்து வந்தால் நக அழகுடன் சுகாதாரத்தையும் பேணலாம்.

- நகத்துக்கு பூச்சு அல்லது சாயம் தடவுவோர், ஏற்கனவே பூசப்பட்டிருந்த பூச்சினை முதலில் அகற்ற வேண்டும். இதற்கெனப் பயன்படுத்தப் படும் பூச்சு நீக்கியினை பஞ்சில் நனைத்து ஒற்றியெடுக்க வேண்டும். நகப்பூச்சானாலும் பூச்சு நீக்கியானாலும் போலிக் கலவைகளை வாங்காதிருப்பது நல்லது. தீமை தரத்தக்க படிக நீர்மம் கலந்த பொருட்களை விலக்கிவிடவேண்டும்.
- நகங்களை உரிய வடிவங்களில் வெட்டுவதிலும் உராசுவதிலும் கவனம் செலுத்தவேண்டும். உராசுவதற்கு உலோகத்தாலான சாதனத்தை விட குருந்தக் கல்லாலான கருவி கிடைத்தால் நல்லது. தேய்க்கும் போது அதிக அழுத்தம் கூடாது. மென்மையாக-ஒரே பக்கமாக உராச வேண்டும். நகம் வெட்டும்போது பக்கவாட்டிலிருந்து வெட்டத் தொடங்க வேண்டும். மத்திய பகுதியிலிருந்து வெட்டக்கூடாது.
- நகம் வெட்டும் போது புறத்தோலினைச் சேதப்படுத்தலாகாது. புறத்தோல் வெட்டப்பட்டால் அது மீண்டும் வளரும்போது நகத்தின் தோற்றத்தை விகாரப்படுத்திவிடும். வெட்டிய பின்னர் புறத்தோலுக்கு எண்ணை தடவி அழுத்தம் கொடுப்பதால் விரல்களும் அழகு பெறும். வெடிப்புகளும் நீங்கும்.
- நகம் சதையுடன் சேரும் இடைவெளிக்குள் சுலபமாக அழுக்குப் படியும். இதனால் பஞ்சினை ஒரு குச்சியில் சுற்றி அப்பகுதியினைச் சுத்தம் செய்யலாம். சிறிதளவு 'ஹைதரசன் பெரொக்சைட்' அமிலத்தில் சிறிதளவு பஞ்சில் நனைத்து அழுக்கினை நீக்கலாம்.
- விரல்களுக்கும் கைக்கும் அழுத்தம் (மசாஜ்) கொடுப்பது அவசியமானது. இதனால் குறிப்பிட்ட பகுதியில் இரத்த ஓட்டம் சீரடையும். நேரடியான அழுத்தமாக அல்லாமல் சுழற்சியான அழுத்தம் கொடுக்கலாம். கையிலோ நகத்திலோ வெடிப்புகள் காணப்படுமானால் 'வஸ்லின்' அல்லது 'பெட்ரோலியம் ஜெலி' போன்ற களிம்புகளைத் தடவி 'மசாஜ்' செய்தல் வேண்டும்.
- நகங்களுக்கிடையில் களிம்புகளின் எச்சம் தங்கிவிடாமலிருக்க, வெதுவெதுப்பான நீரில் கையினை நன்றாகக் கழுவிக் கொள்ள வேண்டும்.
- இத்தனைக்கும் பின்னர்தான் உரிய நகப்பூச்சினை நீங்கள் பூசவேண்டும்.

கழுவிய கையை நன்றாக உலர்ந்த துணியால், ஈரம்போகத் துடைத்துக்கொள்ள வேண்டும். இதன் பின்னரே உரிய பூச்சினை தடவுதல் வேண்டும். இதனை மூன்று வீச்சிலே தடவவும். முதல் வீச்சு நடுப்பகுதியையும் அடுத்த இரு வீச்சுக்கள் நகத்தின் இருபுறமும் பூசப்படுதல் வேண்டும். முதல் வீச்சுக்கள் முடிந்ததும் நன்றாகக் காய்ந்தபின் இரண்டாவது முறை தடவலாம்.

பூச்சினைத் தடவும்போது நக நுனியிலிருந்து தடவலாகாது. நகத்தின் அடிப்பாகத்திலிருந்து மேல் நோக்கிப்பூசுதல் வேண்டும்.

நகப்பூச்சினைப் பூசுபவர்கள் உணவு தயாரிக்க நேர்ந்தால் அல்லது துணிகளைச் சலவை செய்ய நேரிட்டால் கையுறைகளைப் பயன்படுத்துதல் நல்லது. சில சந்தர்ப்பங்களில் நகப்பூச்சின் சிதைவுகள் உணவுப் பொருட்களில் கலந்துவிடலாம். சலவை செய்யும்போது சில சவர்க்காரங்களில் உள்ள சேர்மானங்கள் நகப்பூச்சினைச் சிதைக்கக்கூடும். அமோனியா போன்ற இரசாயனக் கலவைகளை கையினால் தொட்டுப்பழக வேண்டிய நிலையிருந்தாலும் பூச்சுக்கள் பாதிப்பினை விளைவிக்கக்கூடும்.

சில குறிப்புகள்:

- கைகளில் அல்லது நகங்களில் வெடிப்புகள் இருக்குமானால் கைகளை அலம்பியபின் நீரினைத் துடைத்துவிடாமல் சிறிது நேரம் நீர்ப்பிடிப்புடன் வைத்திருந்து உலர்ந்த பின்னர் வெடிப்பினைப் போக்கடிக்கவல்ல களிம்பினைத் தடவி, கையுறையினைப் போட்டு, ஓரிரு மணி நேரம் அப்படியே விட்டுவிடுங்கள்.
- அதிக சூரிய ஒளிபடுவதனால் விரல்கள் கருமையடையவும் சுருங்கவும் வாய்ப்புண்டு. ஆகவே கடுமையான ஒளிபடாமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.
- நொறுங்கும் தன்மையோ நொய்யும் தன்மையோ கொண்ட நகங்களாயின் அடிக்கடி எண்ணை தடவி அழுத்தம் கொடுப்பது நல்லது. சில காலம் நகப்பூச்சினை நாடாதிருப்பதும் பலனளிக்கும்.
- நகங்களில் வழமைக்கு மாறான மாற்றங்கள் ஏற்பட்டால் உரிய மருத்துவரை நாடத்தயங்க வேண்டாம். ■

## வீட்டுக் குறிப்புகள்



மழை நாட்களில் கதவுகள் சரியாக மூடவும், திறக்கவும் முடியாமல் இருக்கும். அச்சமயத்தில் கதவு ஓரங்களில் மெழுகை தடவி விடுங்கள். பிறகு சுலபமாக திறந்து மூடலாம்.



நாள் தோறும், காலையில் உலர்பழங்கள் எனப்படும் பேரிச்சம் பழம், முந்திரி, உலர் திராட்சை ஆகியவற்றை சாப்பிட்டு வாருங்கள். எந்த நோயும் உங்களை அணுகாது.




உருளைக்கிழக்கு, சேப்பங் கிழக்கு, முள்ளங்கி போன்றவற்றை வாங்கும்போது, 'ப்ளிச்' சென்று தண்ணீரில் நனைக்கப்பட்ட காய் கறிகளை வாங்க வேண்டாம். ஈரமண் ஒட்டியுள்ள கிழங்கு வகைகளையே வாங்குங்கள். அதுவே புதிய காய்கறியாகும்.



முட்டை ஓம்லெட் செய்யும் போது, முட்டையை முதலில் ஒரு அகலமான பாத்திதில் உடைத்து ஊற்றிக் கொள்ளவும். பிறகு 'எக்-பீட்டர்' அல்லது கரண்டி கொண்டு நன்றாக நுரைவரும்வரை அடிக்கவும். பிறகு ஓம்லெட் செய்து பாருங்கள். 'புசுபுசு'வென்று, மெத்தென்ற ஓம்லெட் கிடைக்கும்.

•••



சோயா பீன்ஸ், டபுள் பீன்ஸ் என்று அழைக்கப்படும் பீன்ஸ் வகையை அடிக்கடி உணவில் சேர்த்துக்கொள்ளவும். நிறைய விட்டமின் சத்துள்ள இந்த பீன்சை, சுண்டலாகவும் செய்து சாப்பிடலாம்.

## கர்ப்பிணிகளின் கவனத்திற்கு!

கொழுப்புச்சத்து மற்ற எல்லா உணவுப் பொருட்களையும்விட அதிக அளவு கலோரிகளைத் தருவதால் கர்ப்ப காலத்தில் இது அவசியம்.

இறைச்சி, கடலை எண்ணெய், நல்லெண்ணெய், நெய், வெண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியவற்றில் கொழுப்புச்சத்து அதிகமான அளவு உண்டு.

பொதுவாக, பச்சைக் காய்கறிகள், கீரைகள், மீன், பால், நெல்லி, பழங்கள் ஆகியவற்றைக் கர்ப்பிணிகள் அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

கருவுற்ற பெண்களிடத்தில் பின்வரும் நோய்க்குறிகளைக் கண்டால் உடனே மருத்துவரை அணுகவும்.

1. பிறப்புறுப்புக்களிலிருந்து (Genitalia) இரத்தம் வந்தால்,
2. தொடர்ந்து தலைவலியும், கண்பார்வை மங்கலும் இருந்தால்,
3. திடீர் என்று எடை அதிகமானால்,
4. கை,கால், முகம் திடீரென வீங்கினால்,
5. அதிக சோர்வாக இருந்தால்,
6. அதிக வாந்தி எடுத்தால்,
7. அதிக காய்ச்சல் இருந்தால்

உடனே மகப்பேறு மருத்துவரை அணுக வேண்டும்.

## பட்டுச்சேலைப் பரிசுத்திட்டம்

பட்டுச்சேலைப் பரிசுத்திட்டத்தில் சரியான விடை எழுதியோரில் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரங்கள் அடுத்த முரசில் வெளிவரும்.

பட்டுச்சேலை பரிசு பெறும் அதிஷ்டசாலியை அருள் ஜுவலர்ஸ் உரிமையாளர் திரு. ஆர்.எம். கணேசன் அவர்கள் தேர்ந்தெடுத்து பட்டுச்சேலையும் வழங்குகிறார்.

ஆறுதல் பரிசு பெறும் ஆறு அதிஷ்டசாலிகளை பிரபல மலையாள மாந்திரீகர் பி.கே. சாமி அவர்கள் தேர்ந்தெடுக்கிறார். அவரே இல்ல உபயோகப் பொருட்களையும் வழங்குகிறார்.

அதிஷ்டசாலிகளின் பெயர்கள் வெளியானவுடன் அவர்கள் விரும்பினால் அவர்களது புகைப்படங்கள் பிரசுரமாகும். பாஸ்போட் புகைப்பட அளவிலான படங்களை எமக்கு அனுப்பிவைக்கலாம்.

இன்னொரு இனிப்பான செய்தி! மகளிர் மட்டும் பங்குகொள்ளும் பட்டுச்சேலைப் பரிசுத்திட்டம் முடிவடைந்துள்ளதால் தங்க நகை பரிசுத் திட்டம் ஆரம்பமாகப் போகிறது.

**தினமுரசு-அருள் ஜுவலர்ஸ்**

**இணைந்து வழங்கும்**

**தங்க நகை பரிசுத் திட்டம்**

**விபரங்கள் விரைவில்**



## நீங்களும் தைக்கலாம்


### இழையோட்டல் (Darning)

*சென்றவாரத் தொடர்ச்சி..*

குறுக்கு வெட்டு இழையோட்டல் (Cross cut darning) துணியை வெட்டிக்கொண்டிருக்கும் பொழுது அசந்தர்ப்பமாக, வேலை செய்பவர் தம்முடைய துணியை வெட்டிக்கொள்ளுவர். அப்பொழுது குறுக்கு வெட்டு இழை இடுதல் (Cross cut darning) அத்தியாவசியம். இவ்வித இழையோட்டல் செய்வதற்கு முதலில் மீன் முள் தையல் போடாவிட்டால், துணி பிரிந்துவிடும். ஆகையால், மீன் முள் தையலிட்டபிறகு பின் இழையோட்டலுக்கு 'ட' வடிவில் செய்த முறையை அனுசரிக்க வேண்டும்.


குத்தெதிரில் (Opposite) முக்கோணம் இட்டுத் தைக்க வேண்டும்.

பொத்தலுக்கு இழையோட்டல்: உடையில் கிழிச்சல் உண்டாகுமுன் செய்ய வேண்டுவதும், உடையில் சிறு பொத்தல் அல்லது இழைவிட்டு இருந்தால், அந்தப் பாகத்தை உறுதியாகும்படி செய்வதும் இழையோட்டல் எனப்படும். குறுக்கிலும் நெடுக்கிலும் எப்படி நூல் சேர்த்துத் துணியாக நெய்யப் படுகிறதோ, அப்படியே பழுதுபட்ட பாகம் நிரப்பப்படுவதால், இதைக் கையால் நெசவு நெய்தல், அல்லது இழையோட்டல் என்று சொல்லலாம். நெடுக்கேயும் குறுக்கேயும் இழையை ஓட்டித் தைத்தால், அந்தப் பாகம் மூடப்படும். இழையோட்டுவதில் துணியின் நிறத்தையுடைய நூலையும் துணிக்கேற்ற நூலையும் (Texture) உபயோகிக்க வேண்டும். ஒவ்வொரு வரிசையின் கடைசியிலும், கொக்கியைப் போல (Loop) நூலை விட்டுத் தைக்கவேண்டும். இப்படிச் செய்வதால், நெடுக்கிலும் குறுக்கிலும் போகும் இழைகள், சலவை செய்யும் பொழுது சுருங்கி மறுபடியும் கிழிச்சல் ஏற்படாது. தையல் எப்பொழுதும் அடிப்பாகத்தில் தைக்கப்படுவதுதான் நல்லது. பருத்தி உடைக்குப் பருத்தி நூலும், பட்டு உடைக்குப் பட்டு நூலும் கம்பளத்திற்குக் கம்பளி நூலும், மெல்லிய உடைக்கு மெல்லிய நூலும், கனத்த உடைக்குக் கனத்த நூலும் உபயோகிக்கவேண்டும்.



கைத்தையலால் இழையோட்டல்

கிழிச்சலுக்குத் துண்டு போடுதல் (Patching): துணியில் ஒரு பாகம் கிழிந்தோ அல்லது நைந்தோபோனால் அப்பாகத்தை ஒட்டுப்போட்டுச் சரிப்படுத்த வேண்டும்.



கைத்தையலால் இழையோட்டல்

(1) வெள்ளைத் துணிகளுக்கு வெள்ளைத் துணிகளையே உபயோகித்து, அவற்றின் நெடுக்கு நூல் குறுக்கு நூல்களைக் கவனித்துத் தைக்கவேண்டும். சீத்தைத் துணிகளில் பூக்கள் அல்லது கோடுகளையும் உட்புறம் அல்லது வெளிப்புறங்களையும் சரிவரக் கவனித்துச் சரியாகவும் ஒழுங்காகவும் பொருந்தி இருக்கும்படி வைத்துத் தைக்கவேண்டும். அதாவது கோடுகளும் பூக்களும் கோடுகளுடனும் பூக்களுடனும் கலந்தாற் போலச் சரியாக அமைத்துத் தைக்கவேண்டும்.

(2) கிழிச்சலுக்கு ஒட்டுப்போடும் பொழுது ஒட்டுத் துணியை சதுரமாகவோ (Square), நீண்ட சதுரமாகவோ (Oblong) அமைக்கவேண்டும். ஒட்டுப் போடும் இடம், துணி பழுதான இடத்தைச் சுற்றிலும் நன்றாக இருக்கும் பாகம்வரையில் பரவி இருக்கவேண்டும். அப்படிச்செய்யாமல் கிழிந்த இடம்வரையில் சிறியதாக ஒட்டுப்போட்டால், பலம் குன்றியிருக்கும் அந்தத் தையல் ஓரத்தில் மறுபடியும் கிழிச்சல் உண்டாகும்.

(3) பழையதுணியுடன் பழைய துணியையும், புதிய துணியுடன் புதிய துணியையும், சாயம் போன துணியுடன் சாயம்போன துணியையும் இணைக்க, அதே ரகத் துணியை ஒட்டுப்போட வேண்டும்.

*மிகுதி அடுத்த வாரம்*

## சமைப்போம் சுவைப்போம்

*-தொகுத்துத் தருவது சுகந்தினி*

### மசாலா கோன்ஸ்

மைதா மாவு- 250 கிராம்
ரவை- 1 தே.கரண்டி
நெய்- 1 தே.கரண்டி
உப்பு- 1 தேக்கரண்டி
தேவையான அளவு எண்ணெய்

மைதாமா, ரவை, நெய், உப்பு ஆகியவற்றை ஒன்றாக, பற்றீசுக்கு குழைப்பது போல் குழைத்து ஒரு மணி நேரம் வரை மூடி வைக்கவும். சிறு சிறு உருண்டையாக்கி ஒரு நீள் சதுர பலகையில் மாவை வைத்து உருட்டவும். அதனை ஒரு அங்குல அகலத்திற்கு ஏற்றவாறு வெட்டி கோணில் மாவை சுற்றி அதனை கொதிக்கும் எண்ணெயில் பொரித்து எடுக்கவும்.

கோணின் மேல் சுற்றியிருக்கும் மா, எண்ணெயில் போட்டவுடன் தனியாக கழன்று வந்துவிடும். கோணின் மேல் மாசுற்றும் பொழுது அழுத்தி சுற்றக்கூடாது.

### பாண் பகோடா


பாண் துண்டுகள்--8
பெரிய வெங்காயம்- 4
பச்சை மிளகாய்- 8
இஞ்சி சிறு துண்டு-
கடலை மாவு- 2.தே.க
சோடா உப்பு- 2 சிட்டிக்கை
வெண்ணை அல்லது மாஜரீன்- 2 தே.கரண்டி
உப்பு, எண்ணெய்-அளவாக

பாண் துண்டுகளை பொடிப் பொடியாக்கிகொள்ளவும். வெங்காயம்., இஞ்சி, பச்சை மிளகாயையும் பொடியாக்கவும். மேலே நறுக்கிய கலவையுடன் கடலைமா, வெண்ணை, உப்பும் சேர்த்து பிசையவும். சூடான எண்ணெயில் பகோடா செய்வது போல் சிறு சிறு உருண்டையாக்கி பொரித்து எடுக்கவும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# தகவல் பெட்டி

# உடல் மெலிந்தோர் ஒன்றுகூடுகிறார்கள்! பரிசு எங்கே? பதக்கம் எங்கே?



உடல் பருத்தவர்களை மட்டுமே தகவல்பெட்டி தாங்கிவருமோ?

உடல் குச்சியாக இருப்பவர்களை முரசின் தகவல்பெட்டி தாங்கிவராதோ என்று வினா தொடுத்தவர்கள் விழிகளுக்கு இதோ ஒரு விருந்து.

எங்கே, எப்போது முறிந்து விடுவார்களோ என்று நினைக்கும் அளவுக்கு உடல்கொண்டவர்களுக்கு ஒரு போட்டி நடக்கப்போகிறது.

அமெரிக்காவில் உள்ள மெலிந்த மேனி அழகர்களுக்கு லண்டானா கிளப் அழைப்பு விடுத்துள்ளது.

திகதி இன்னமும் அறிவிக்கப்படவில்லை. பரீட்சார்த்தமாக எடுக்கப்பட்ட புகைப்படத்திற்கு புன்னகையோடு போஸ் கொடுக்கிறார்கள் மெல்லிடையாளர்கள் அல்லது மெல் உடலாளர்கள்.

அமெரிக்காவில் உள்ளவர்கள் மட்டுமே போட்டியில் கலந்துகொள்ளலாம் என்று ஒரு விதி இருப்பதை நம்நாட்டு மெல் உடலாளர்களுக்கு வெகு கவலையோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

# தேடிக்கொண்டிருந்த போது வெடித்த குண்டு! தேடியவர்களும் பலி!




வன்முறைக்கலாசாரம் பரவிவரும் காலத்தில் எங்குமே மரண அபாயம் காலடியில் காத்திருக்கிறது. கொலம்பியா போதை மருந்து வியாபாரிகள் அதிகம் வாழும் நாடு. அவர்கள் பயங்கர ஆயுதங்களோடு பொலிசாருடன் மோதுவதுண்டு. பொது வீதியில் போதை மருந்துக் கடத்தல்காரார்கள் வெடிகுண்டு புதைத்ததாக ஒரு தகவல்.

உடனே செயலில் இறங்கிய விசேஷ நிபுணர்கள் தேடலில் இறங்கினார்கள். அவர்கள் தேடிக்கொண்டிருந்த போதே புதைத்து வைக்கப்பட்ட குண்டு வெடித்துவிட்டது. குண்டு தேடியவர்களே, தேடிப்பார்த்தபோது சிதைந்து கிடந்தார்கள்.

குண்டு நிபுணர்கள் தேடலில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படமும், குண்டு வெடிப்பின் பின் எடுக்கப்பட்ட படமும் இங்கே உள்ளன.

# வளர்த்த சிங்கம் மார்பில் பாய்ந்தது!



எப்படித்தான் பழகினாலும்-பழக்கினாலும் சில மிருகங்கள் தம் குணத்தை ஒரு தடவை காட்டவே செய்யும்.

ஆமெடியோ ஜெரார்டி என்பவர் சேர்க்கஸ் காட்சிகளுக்காக சிங்கங்களைப் பழக்குபவர். பௌலிட்டோ என்ற சிங்கத்தினை பல ஆண்டுகளாகப் பழக்கி பல காட்சிகளை நடாத்திக்காட்டி பாராட்டுப் பெற்றவர். ஃபிரான்ஸ் நாட்டில் வேர்செய்ல்ஸ் நகரில் நடைபெற்ற சேர்க்கஸ் காட்சியின் போது மூன்று சிங்கங்களை வைத்து வேடிக்கை காட்டிக்கொண்டிருந்தார். அப்போது நிலை தடுமாறி தரையில் விழுந்துவிட்டார்.

தக்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்ததைப் போல் பௌலிட்டோ என்ற 620 இறாத்தல் எடை கொண்ட அந்தக் கொடிய சிங்கம் ஆமெடியோ மீது ஒரே பாய்ச்சலாக பாய்ந்து கடித்துக்கொன்று விட்டது.

ஏனைய இரு சிங்கங்களும் இக்காட்சியினைப் பார்த்துக்கொண்டிருப்பதைப் போல் அன்றைய காட்சிக்கு வந்திருந்த 3000 பார்வையாளர்களும் நேரடியாகவே அந்தப் பயங்கரக் காட்சியைப் பார்த்தனர். அந்தச் சிங்கம் சுட்டுக்கொல்லப்பட்டது.



# வழித் தோன்றல்களைக் கண்டதால் வந்தது ஆனந்த அதிர்ச்சி!



ஒராங் உட்டான் என்றழைக்கப்படும் வாலில்லாக்குரங்குக் குட்டி, பிறந்து 4 வாரங்களின் பின்னர் முதன் முதலில் தனது பின் வழித்தோன்றல்களான மனிதர்களைக் காணும் போது இவ்வாறுதான் தன் முகத்தை வைத்துக்கொண்டது. ஜேர்மன்-முனிச் நகரிலுள்ள மிருகக் காட்சிச்சாலையில் பிறந்த இக்குழந்தைக் குரங்கு நோய்வாய்ப்பட்டிருந்தமையினால் மிருக மருத்துவமனையிலேயே 4 வாரங்கள் வைக்கப்பட்டிருந்தது. அதனை முதன் முதலில் வெளியே கொண்டு வந்தபோது நூற்றுக்கணக்கான சிறுவர்கள் மொய்த்துவிட்டனர். அந்த அதிசயக் காட்சி அக்குட்டிக் குரங்கினை திகில் கொள்ள வைத்துவிட்டதோ! அல்லது தன் வழித் தோன்றல்களை கண்டுவிட்ட ஆனந்த அதிர்ச்சியோ யார் அறிவார்!

# தலைமுறைகள் பலவாய் தலைமுடி இல்லாமல் வாழும் குடும்பம்


## முடிமீது ஆசை இல்லை

அனிதா கிராங்கிளின் குடும்பத்தைச் சேர்ந்த அத்தனை பேருக்கும் தலையில் முடி இல்லை. வேண்டுமென்றே முடியினை இவர்கள் வழித்துவிட்டவர்களல்ல. இயற்கையாகவே இவர்கள் தலைகளில் கேசம் வளரவில்லை. "இதுவே எங்களுக்குத் திருப்பித்தருகிறது" என்று மகிழ்ச்சியாகவே காணப்படுகின்றனர்.

கடந்த வருடம் மேயில் இவர்களுடைய புகைப்படம் மேலைநாட்டு சஞ்சிகை ஒன்றில் இடம்பிடித்திருந்தது. இதனைக் கண்ணுற்ற, இங்கிலாந்தைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் ஒருவர், இவர்களின் தலையில் மயிர் வளர்வதற்கான மருத்துவ உதவியினைத் தான் செய்து தர விரும்புவதாக முன்வந்தார். ஆனால் இக்குடும்பத்தில் மூத்தவரான 73 வயது அனிதா அதனை ஏற்க மறுத்துவிட்டார்.

அனிதாவின் மகள்களான 53வயது ரம்மி, 43 வயது எடித் மற்றும் பேரப்பெண் மார்தா ஆகியோர் கேசம் வளரும் சிகிச்சைக்கு மறுப்புத் தெரிவித்துவிட்டனர். ஐந்து பரம்பரையாக இந்தக் குடும்பத்துப் பெண்கள் முடியற்றவர்களாகவே பிறந்து வளர்ந்துள்ளனர். இந்தப் பாரம்பரிய நோயினை நீக்குவதற்கேற்ற புதிய மருந்தினைத்தான் கண்டுபிடித்திருப்பதாகவும் இலவசமாகவே சிகிச்சை அளிக்க விரும்புவதாகவும் இங்கிலாந்தைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் தெரிவித்திருந்தபோதும், அமெரிக்காவில் விஸ்கொன்சின் மாநிலத்தைச் சேர்ந்த மெடிசன் நகரவாசிகளான அனிதா கிராங்கிளின் குடும்பத்தினர் மறுத்துவிட்டனர்.

"ஏனையோரிடமிருந்து மாறுபட்ட தோற்றத்துடன் வாழ்ந்து பழகிப் போய்விட்டோம். இவ்வாறு வாழ்வதே மகிழ்ச்சி தருகிறது." என்கின்றனர்.



# சினிவிசிட்

## மினிசினி

★ புன்னகை மன்னன் படத்திற்குப் பிறகு மகாநதி படத்திற்குக் கொம்ப்யூட்டர் மூலம் தனியே இசையமைத்துள்ளார் இசைஞானி இளையராஜா.

★ பாக்யராஜின் வீட்ல விசேஷங்க படத்தின் அறிமுக நாயகியான பிரகதிக்கு தற்போது பல படவாய்ப்புகள் தேடி வந்திருக்கின்றன. குடும்பப் பாங்கான வேடங்களில் நடிக்கவே விரும்புகிறார் இவர்.

★ பாலச்சந்தர் தனது வானமே எல்லை படத்தில் பானுப்பிரியாவை, நடிகை பானுப்பிரியாவாக ஒரு பாடல் காட்சியில் நடிக்க வைத்தார். தற்போது அவர் இயக்கி வரும் டூயட் படத்தில் கஸ்தூரியை, நடிகை கஸ்தூரியாக ஒரு பாடல் காட்சியில் நடிக்க வைத்துள்ளார்.

★ இன்று தமிழ்த் திரையுலகில் பிஸியான இயக்குநர் பி.வாசு. பொங்கலன்று வெளியான சேதுபதி ஐ.பி.எஸ். படத்தை அடுத்து பிரபு, அர்ஜுன், சத்யராஜ் நடிக்கும் மூன்று படங்களை இயக்க உள்ளார்.

★ தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் எழுபத்தைந்திற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார் ரகுவரன். இவர் இப்போது முதல் முறையாக இந்திப்படமொன்றில் நடிக்கவுள்ளார்.

★ பிரபல வார இதழ்களில் தொடர்களாக வந்த கதைகள் தற்போது படங்களாகி வருகின்றன. இந்த வரிசையில் கல்கியில் வெளிவந்த பாபகான் கன்யுகள் என்னும் தொடர்கதை உங்கள் ஜுனியர் என்ற பெயரில் படமாகிறது. தொடர்கதையை எழுதிய ம.வெ. சிவகுமார் படத்தை இயக்கி கதாநாயகனாக நடிக்கிறார்.



ஜுஹி சாவ்லா

★ அபிராமி படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானவர் திலீப்குமார். இவர் அடுத்து இயக்கும் படத்திற்கு தமிழரசி என்று பெயரிட்டுள்ளார். அரண்மனைக்கிளி படத்தில் நடித்த காயத்திரி கதாநாயகியாக நடிக்கவுள்ளார்.

★ கைவசம் பதினைந்து படங்களுக்கு மேல் வைத்திருக்கும் வடிவேலு, விரைவில் ஒரு படத்தில் கதாநாயகனாக நடிக்க இருக்கிறார். அவருக்கு ஜோடியாக இரண்டு கதாநாயகிகள் நடிப்பார்கள் எனத் தெரிய வருகிறது.

★ இந்த வருசத்தில் மிக மூன்று படங்களை இயக்கப்போகிறார் அப்படங்களில் ஒன்றில் கதாநாயகியாக குஷ்பு நடிக்கவிருக்கிறார்.

★ இயக்குநர் இராம. நாராயணன் கடைசியாக எடுத்த படம் வாங்க பாட்னர் வாங்க. இப்படத்தை பதினைந்து நாட்களில் எடுத்து முடித்து வெளியிட்டுள்ளனர்.

★ விஜயகுமார், ராதிகா, நெப்போலியன் நடித்து வெற்றி பெற்ற கிழக்குச் சீமையிலே படத்தை அடுத்து கலைஞானம் தயாரிக்கும் பூஞ்சோலை படத்தில் மூவரும் இணைந்து நடிக்கிறார்கள்.

## காதோடு சொல்லுகிறோம்

★ 'தெள' நடிகைக்கு இந்தியில் நடிக்கும் ஆசை வந்துவிட்டதால் பம்பாயில் சொந்தவீடு வாங்கும் யோசனையில் இருக்கிறார். அங்கு தங்கியிருந்தால் முயற்சி செய்து சான்ஸ் பிடிக்கலாம் என்று கணக்குப் போட்டிருக்கிறார்.

★ கவர்ச்சியால் இரசிகர்களை மயக்க எந்த மாதிரியான விதத்தில் நடிக்கவேண்டும் என்பதையெல்லாம் விரல் நுனியில் வைத்திருக்கிறார் 'ஷ' நடிகை.

★ மூன்றெழுத்து இளம் திலகத்துடன் இந்தி நாயகி நடிக்கவிருப்பதால் கோடம்பாக்கம் வட்டார நடிகைகள் கோபத்தில் இருக்கிறார்களாம்.

★ பூ நடிகை இரகசியமாக வெளிநாடு சென்றுவிட்டார். காரணம் தெரியாமல் பல்வேறு வதந்திகள் உலாவுகின்றன. அங்கு சகோதரி இருக்கிறார். அவருக்கு குழந்தை பிறந்துள்ளது. அதுதான் பூ நடிகை போயிருக்கிறார் என்பதுதான் லேட்டஸ்ட் நியூஸ்.

★ கஸ்தூர நடிகைக்கு ஒரு பழக்கம். படத்தில் நடிப்பதாக ஒப்புக்கொண்டு கைநீட்டிப் பணம் வாங்கிவிடுவார். பின்னர் அது சரியில்லை, இது சரியில்லை என்று காரணம் சொல்லி நடிக்க மறுத்துவிடுவார். அதனால் தயாரிப்பாளர்கள் அவர் பெயர் கேட்டாலே போதும் நடுங்குகிறார்கள்.

★ 'மனித வாழ்க்கை அலுத்துவிட்டது. பறவையாகப் பிறக்க ஆசைப்படுகிறேன்' என்று கவர்ச்சி நடிகை 'ஷ' பேட்டி கொடுத்திருக்கிறார். பறவைக்கும் சிறகுண்டு. சிறகுகளை உதிர்த்து ஆடமுடியும் என்ற நம்பிக்கையாக்கும்.

★ இளம் நடன இயக்குநர் இப்போது நாயகனாகவும் நடிக்கிறார். தனது அடுத்த படத்தில் பூ நடிகையை கதாநாயகியாகப் போட்டே தீரவேண்டும் என்று அடம்பிடிக்கிறாராம்.

★ திருமணத்திற்குப் பின் நடிப்பதை நிறுத்திக் கொண்ட 'சரித' நடிகை ஓய்வில்லாமல் டப்பிங் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார். "பல நடிகைகளின் புகழுக்கு தன் குரலே காரணம்" என்கிறார். முகத்தைக் காட்டாவிட்டாலும் குரலைக் காட்டுகிறார்.

★ இளையதிலகத்தின் செஞ்சாரி எதிர்பார்த்தளவுக்கு அமையவில்லை. இத்தனைக்கும் சிம்மக்குரலோன் கேட்டு திருப்திப்பட்டு ஓ.கே. சொன்ன கதைதான் படமானது. அதிக விளம்பரமும் கேடாகலாம் என்பதற்கு இதுவும் ஒரு உதாரணமோ?

★ எந்தக் கதாநாயகனும் தன்னிடம் வம்பு பண்ணுவதில்லை என்கிறார் மேஜபன நடிகை. அதனால்தான் சிலர் தன்னை சிபாரிசு செய்வதில்லையாம்.

## கமலின் பாடகன் வருகிறான்

மண்வாசனை, ஜல்லிக்கட்டு போன்ற வெற்றிப்படங்களைத் தயாரித்த [illegible] ராமு, சித்ரா லட்சுமணன் இருவரும் இணைந்து கமல் இந்தியில் [illegible] படம் ஒன்றை தமிழில் மொழிமாற்றம் செய்கின்றனர்.

கமல்ஹாசனின் ஜோடியாக நீலா நடித்துள்ளார்.

மேடைப்பாடகராக கமல் நடிப்பதால் படத்திற்கு 'பாடகன்' என்று பெயரிடப்பட்டுள்ளது. சண்டைக்காட்சிகளுக்கும், பாடல்களுக்கும் பஞ்சமில்லாத படம்.

## இப்படியும் பெயர்கள்!

சினிமாப் படங்களுக்கு பெயர் தேடுவது பெரும் பிரச்சனை என்பதால் மூளையில் உதிக்கும் பெயர்களை உடனுக்குடன் பிலிம் சேம்பரில் பதிவு செய்துவிட வேண்டும். இல்லாவிட்டால் வேறு யாராவது அந்தப் பெயரில் படம் எடுத்து தொலைத்துவிடுவார்கள். கடந்த மாதம் பிலிம் சேம்பரில் பதிவாகியுள்ள படங்களது பெயர்கள். இப்படியும் பெயர்களா என்று வியப்பாக இருக்கும். இதோ பெயர்கள்.

'ஆஹா-ஓஹோ' 'அடுத்த முதல்வர்' 'அஞ்சுக்கு பத்து' 'சேர்மன் கோபால்சாமி' 'சின்ன கவுண்டச்சி' 'தாதா' 'ஃபிரம் சிக்லடு சிக்ஸ்' 'கோபால்சாமி' 'ஜிக்கு புக்கு ஜிக்கு புக்கு ரயிலே' 'மாஜிக் மாமா' 'மருமகனா கொக்கா' 'வேடி பாஸ்' 'பொம்பிளைங்க சமாச்சாரம்' 'புற்று நோயும், பால்வினை நோயும்' 'ரவுடி டீச்சர்' 'சூப்பர் மாப்பிள்ளை' 'தமிழ்நாடு காவல்துறை' 'உசிலம்பட்டி பெண்குட்டி.'

இதில் எத்தனை பெயர்கள் படங்களாகி வந்து தங்களைப் பார்க்கச் சொல்லுமோ?

## வைரமுத்துவின் குற்றச்சாட்டுக்கள்

"தமிழின் வளமான சொல்லாட்சிகளை வாங்கி வைத்துக்கொள்ளக்கூடிய வசதியை தற்போதைய மெட்டுக்கள் தரவில்லை.

இளையராஜா தமிழை முடமாக்கிவிட்டார்.

சபதங்களின் சபையில் தமிழின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது தப்பு.

பாடலாசிரியரையும் வாத்தியக் கருவிகளில் ஒரு கருவியாக நினைத்தது தப்பு" என்று அடுக்கடுக்காக குற்றம் சாட்டியுள்ளார் வைரமுத்து.

ஒரு பாடலில் தன் முகம் தெரிய வேண்டும் வேறு எவன் முகமும் தெரியக்கூடாது என்று நினைக்கும் இசையமைப்பாளர் சிலரது முனைப்பையும் வைரமுத்து சாடியுள்ளார்.

"மேற்கத்திய இசையின் தாக்கம் திரைப் படப் பாடல்களில் தமிழைத் தள்ளி வைத்து விட்டதே தவிர, கவிஞர்களின் திறமை தீர்ந்து போகவில்லை" என்று சொல்கிறார் வைரமுத்து.



## ஒரே ஒரு காட்சியில் ஓடி – ஆடியவர்கள்!

கதாநாயகிகளாக கலக்கிக் கொண்டு இருந்தவர்கள் ஒரே ஒரு பாடல் காட்சியில் மட்டும் நடிக்கத் தொடங்கிவிட்டார்கள். அந்தப் பட்டியலில் சேரும் கதாநாயகிகள் தொகை ஏறிக்கொண்டே இருக்கிறது. இதுவரை ஒரு பாடல் காட்சியில் மட்டும் தலைகாட்டியுள்ள நடிகைகளின் விபரம்.

பானுப்பிரியா-வானமே எல்லை.
விஜி- சூரியன், உழைப்பாளி.
பல்லவி- உழைப்பாளி.
ரூபினி- உழைப்பாளி, அதிரடிப்படை.
கௌதமி- ஜென்டில்மேன்.
மோகினி- செண்பகம், உடன்பிறப்பு.
சிவரஞ்சனி- பாஸ்மார்க்.
குஷ்பு- இந்து, அரண்மனைக் காவலன்.
காயத்ரி- கப்டன்.
கஸ்தூரி- டூயட்.

## அடுத்த படம் ஆரம்பம்

பிரபலமான ஏவிஎம் நிறுவனம் தயாரிக்கப்போகும் புதிய படத்திற்கு சக்திவேல் என்று பெயரிடப்பட்டுள்ளது.

இதில் கதாநாயகனாக செல்வா நடிக்கிறார். ஜோடியாக நடிப்பவர் கனகா. இவர்களோடு விஜயகுமார், மஞ்சுளா ஆகியோரும் உண்டு. இசை இளையராஜா. இயக்குவது கே.எஸ். இரவிக்குமார்.

## முகப்பிலிருப்பது

ப்ரியாராமன், பிர[…]

## கஸ்தூரி பட்டதாரியானார் பார்த்திபன் பரிசு வழங்கினார்

வித்தியாசமான பரிசு வழங்குவதில் கில்லாடியான நடிகரும் இயக்குநருமான பார்த்திபன் நடிகை கஸ்தூரிக்கும் ஒரு பரிசு வழங்கியுள்ளார்.

பட்டப்படிப்பு படித்து முதல் வகுப்பில் தேறியுள்ள கஸ்தூரிக்கு அவர் வழங்கியு[…] சிறுவர்கள் பறக்கவிடுவதுபோன்ற பட்டம்.

அதில் பார்த்திபன் எழுதியுள்ள வாசக[…] "ஷா மதியே (கஸ்தூரியின் இயற்பெயர்[…]) பட்டம் பெற்றமைக்கு எனது வாழ்த்து[…] வாசகம்.

## மொழிகள் எ[…] படங்கள் எழு[…]

இசைஞானி இளையராஜா கடந்த பதி[…] இசையமைத்துள்ள பாடல்களின் எண்ணிக்[…] எழுநூறு.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னட[…] ஆங்கிலம், ஆகிய ஏழு மொழிகளில் உள்[…] அவர் இசையமைத்துள்ளார்.

## 'இளையராஜாவின் மோ[…]

படங்களுக்கு வித்தியாசமான பெயர் வைப்[…] சினிமா உலகில் புகழோடு இருப்பவர்களது பெ[…] நிலைக்கு வந்திருக்கிறது.

மணிரத்னம் என்ற பெயரில் ஏற்கனவே ஒ[…] வருகிறது. இப்போது 'இளையராஜாவின் மோதி[…] ஒரு படம் தயாராகிறது. இதில் கதாநாயகனாக [...] வடிவேலு நடிக்கிறார். ஜோடி கிடையாது.

இளையராஜாவும் சில காட்சிகளில் நடி[…] தகவல்.

படத்தை இயக்கப்போவது பி[…] எஸ்.பி.முத்துராமன்.

முன்னர் 'இளையராஜா' என்ற பெய[…] தயாரிக்க முயற்சி நடந்தது.

உடனே இளையராஜா வழக்குத் தொ[…] அது கைவிடப்பட்டது.

## பழைய முகங்[…] புதிய பெயர்[…]

பாலசந்தர் இயக்கத்தில் உருவாகி[…] வாசல் படத்தில் நடித்தவர் யாமினி. [...] பெயரை 'கண்மணி' என்று மாற்றிக்கொண்[…] பாட்டையா' படத்தில் ரமேஷ் அரவிந்த் [...] வருகிறார்.

உன்னால் முடியும் தம்பி படத்தில் [...] இப்போது தன் பெயரை 'அஜந்தா' என்[…]

## கமல்+கமல் மோதல் [...]

கமலஹாசன் நடித்த மகாநதி பொங்கல் [...] வெளியாகியிருக்கிறது.

பொங்கல் தினமே கமலின் சொந்தப்பட[…] வெளியாக இருந்தது.

ஆனால் தனது இரு படங்களும் மோதுவ[…] 'மகளிர் மட்டும்' பட வெளியீட்டை ஒத்தி[…] தமிழ் புத்தாண்டுக்கு மகளிர் மட்டும் [...] வந்தால் ரஜினி[…] மோதும். சில [...] புத்தாண்டுக்கு [...] மட்டும் வெளி[…]



ஸ்ரீதேவி

## பிடிக்காவிட்டால் மறுத்துவிடுவேன்!

"ஒரு பாத்திரத்துக்கு என்ன தேவையோ அதை மட்டுமே நான் தருகிறேன். நடித்த காட்சியில் திருப்தி இல்லை என்றால் இயக்குநரிடம் சொல்லி அந்தக் காட்சியை மாற்றிவிடுவேன்.

'மிஸ்டர் இந்தியா' படத்தில் ஒரு காட்சியில் அழவேண்டும் என்று இயக்குநர் சொன்னார். அந்தக் காட்சியில் நடித்தால் அழும் முகமாக இருக்கும் என்பதால் மறுத்துவிட்டேன்" இப்படி ஒரு பேட்டியில் சொல்லியிருக்கிறார் ஸ்ரீதேவி.

## பாரதிராஜா திருவிழாவுக்கு முன்னர்!

கிழக்குச் சீமையிலே வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

பிரபுவை வைத்து 'திருவிழா' என்ற பெயரில் படம் எடுக்கப்போகும் பாரதிராஜா அதற்கிடையே இன்னொரு படத்தை இயக்கப் போகிறார்.

புது முகங்கள் நடிக்கும் அந்தப் படத்திற்கு 'கரிசல் மண்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

பாடல்கள் வைரமுத்து இசை ஏ.ஆர்.ரகுமான். ஒளிப்பதிவு பி.கண்ணன். புதுமுக நடிக, நடிகையர் தேர்வு நடைபெற்று வருகிறது.





www.padippakam.com

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்


## சின்னத்தம்பி இந்தியில்

சிவாஜி நடித்த வசந்தமாளிகை படத்தை தயாரித்தவர் ராமநாயுடு. அவரது மகன்தான் வெங்கடேஷ்.

தெலுங்கில் வெற்றி நாயகன் வெங்கடேஷ். சிரஞ்சீவிக்கு கடும் போட்டி.

வெங்கடேஷ் இந்தியிலும் கால்வைத்துள்ளார். பிரபு நடித்த சின்னத்தம்பி படம் இந்தியில் 'அநாரி' என்ற பெயரில் தயாராகிறது. அதில் கதாநாயகனாக நடிப்பவர் வெங்கடேஷ்.


சண்டைக்காட்சிகள், பாடல் காட்சிகள், இடையே சோகம் அதுதான் தெலுங்குப் படவுலகில் வெற்றிக்கான சூத்திரம். அதில் தேறிய வெங்கடேஷ் இந்தியிலும் தேறுவாரா? இருந்து பார்க்கலாம்.



வெங்கடேஷ்

## முப்பதுநாளில் ஒரு படம்!

வில்லன் நடிகர் அழகர்தனம் கதாநாயகனாக நடித்துள்ள 'கண்ணா என்தன் மன்னா' படப்பிடிப்பு முப்பது நாட்களில் நடந்துமுடிந்துள்ளது. முப்பது நாட்களும் காட்டில் முகாமிட்டு இருந்து படப்பிடிப்பை வேகமாக முடித்துவிட்டார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் காட்டில் நடந்த சம்பவம் பற்றிய கதை உருவாக்கப்பட்டுள்ளது.



மாதுரி டிக்ஷித்

## கிழக்கே போகும் ரயில் முதல்-கிழக்கு சீமையிலே வரை

கிழக்குச் சீமையிலே வெற்றிக்குப் பின் பாரதிராஜா புதுத் தெம்போடு இருக்கிறார். ஒரு இனிய மாலை நேரத்தில் எமது தமிழக சினிமா நிருபர் வெங்கட் பாரதிராஜாவை பேட்டி கண்டார்.

முதல் மரியாதைக்குப்பின் உங்களுக்கு ஏற்பட்ட சோதனைகள் பற்றி சொல்லுங்கள்.

முதல் மரியாதைக்குப் பின் வெளி வந்த கடலோரக் கவிதைகள், வேதம் புதிது இரண்டு படமும் என்னை பொறுத்தவரை தோல்வி இல்லை.

பைனான்ஸ் பாதிப்பு ஏற்பட்டது. ஆனால் மனம் பாதிக்கவில்லை. ரஜினிக்காக கொடி பறக்குது செய்தேன். பொருளாதாரத் திருப்தி ஏற்பட்டது. புதுநெல்லு புதுநாத்து வியாபார ரீதியாக ஹிட். ஆனால் நாடோடி தென்றல், கேப்டன் மகள் தோல்விகள் என்னை பெரிதும் பாதித்து விட்டது. என்னிடம் மக்கள் சினிமாத்தனம் எதிர்பார்க்கவில்லை. பலரும் விரும்பிக் கேட்டதால் நான் கிழக்கு சீமையிலே கொடுத்தேன். வெற்றி அடைந்தது.

குடும்பக் கதைக்கு அழுத்தமான கதை தேவை. நீங்கள் அண்ணன் தங்கை பாசம் என்ற விசயத்தை வைத்து கொண்டு எப்படி இவ்வளவு பெரிய வெற்றியை கொடுத்தீர்கள்?

இது பெரிய கதை அல்ல "விருமாயி" என்ற சிறு பாத்திரம். அவளது மென்மையான உணர்வுகள், கதாசிரியர் ரத்னகுமார் சொன்ன கதை பல இடங்களில் என் நெஞ்சை தொட்டது. நமது பெண்களுக்கு புருஷன் எவ்வளவு செய்தாலும் பிறந்த வீட்டில் அண்ணன் சிறிதளவு செய்தாலும் அதை பெரிய பெருமையாக நினைப்பார்கள்.

உங்கள் படத்தின் உயிர் இசைதான். ஆனால் இந்த படத்தில் பின்னணி இசை சரி இல்லை என்ற முணுமுணுப்பு பற்றி என்ன கூறுகிறார்கள்?

என்னைப் பொறுத்தவரை இந்த படத்தில் இளைஞர் ரகுமானின் இசை மிகச்சிறப்பாக அமைந்திருக்கிறது. அவர் இசையமைத்த மேற்கத்திய இசைக்குப்பிறகு முழுவதும் கிராமத்து இசையை எனது விருப்பத்தின்படி டியூன் போட்டுப் பின்னணி இசையில் எனது எதிர்பார்ப்புக்கு குறைவின்றியும் செய்துள்ளார்.

கிழக்கே போகும் ரயில் ராதிகா கிழக்கு சீமையிலே ராதிகா வித்தியாசம்?

12 வருடங்களில் தனது நடிப்புத்திறமையை வளர்த்துக்கொண்டு தனது நடிப்பாற்றல் நான் எதிர்பார்த்ததைவிட நன்றாக செய்துள்ளார். அசாத்தியமான வளர்ச்சி படப்பிடிப்பில் பழைய சாவித்திரியை கண்முன் நிறுத்திவிட்டார். விஜயகுமாரிடம் இத்தனை திறமை எங்கு இதுவரைகாலமும் மறைந்திருந்தது என்று யோசித்தேன்.

அடுத்த படங்கள் பற்றி?

பெண் சிசுவை கொல்வதை தடுக்க அரசாங்கம் முயற்சி செய்வது போல் நானும் அந்த கருவை முன்வைத்து முற்றிலும் புது முகங்களை கொண்டு எடுக்கும்படம் 'செல்வராணி' ஆனந்தி பிலிம்ஸ் பிரபு நடிக்கும் படம் 'திருவிழா'.

கதைவசனம் ஆர் செல்வராஜ் பிரபுவுக்கு வித்தியாசமான படம் 'திருவிழா'.

பாரதிராஜா இன்றும் தனது குருவாக மதிக்கும் புட்டண்ணாவின் படத்தை வணங்கிவிட்டு தினமும் வெளியே செல்கிறார். நன்றி உள்ள மனிதர் வெற்றி காண்பது உறுதி.



பிரசாந்த்- படம்-செந்தமிழ் செல்வன்




பீடா ராணி

## வாய்ப்புத்தேடி காத்திருக்கிறார்

பாசமலர்கள் படத்தில் புதுமுகமாக அறிமுகமாகியிருப்பவர் சபிதா. பாசமலர்களில் சபிதாவின் நடிப்பை பலரும் பாராட்டினார்களாம்.

புதிய வாய்ப்புக்கள் வந்து சேரும் என்று காத்திருக்கிறார். பாசமலர்கள் மூலம் தன்னை அறிமுகப் படுத்திய சுரேஷ் மேனனுக்கு நன்றி சொல்லும் சபிதா திறமைக்கு தீனி போடும் பாத்திரம் ஒன்றுக்காக ஏங்குகிறார்.

## கழுத்தில் பட்டஅடி



சரத்குமார்

'அரண்மனைக் காவலன்' படத்தின் பாடல் காட்சி ஒன்று மைசூர் அரண்மனையில் படமாக்கப்பட்டது. சரத்குமார்-சிவரஞ்சனி ஆகியோர் தாராளமாக நடித்துள்ளனர்.

அரண்மனைக்காவலன் படத்தில் உயிரைப் பணயம் வைத்து நடித்துள்ளார் சரத்குமார். சண்டைக்காட்சி ஒன்றில் கழுத்தில் அடிபட்டு மயக்கம் ஏற்பட்டது. சிகிச்சைக்குப் பின் தொடர்ந்தும் நடித்தார்.

இத்தனை ஒத்துழைப்புத்தரும் சரத்குமாரை வைத்தே தொடர்ந்தும் படம் செய்ய விரும்புகிறோம் என்கிறார் தயாரிப்பாளர்.

## எனக்கு கிறுக்கு மூளை



சபீதா

தமிழ் பெண்ணான மீனாட்சி சேஷாத்திரி இந்தித் திரையுலகில் கொடிகட்டிப் பறக்கிறார்.

பாலசந்தர் இயக்கத்தில் பிரபுவின் ஜோடியாக அவர் தமிழில் நடித்துவரும் படம் டூயட்.

இன்னும் இரண்டு வருடம் கழித்தே திருமணம் பற்றி யோசிப்பேன் என்று சொல்லுகிறார். ஒரு விசயத்தை உறுதியாகச் சொல்கிறார். திருமணத்தின் பின்னரும் சினிமாவில் நடிப்பாராம்.

பட்டதாரியான மீனாட்சி சேஷாத்திரி தனக்குக் கொஞ்சம் கிறுக்கு மூளை என்று சொல்கிறார். "எதைப் பண்ணக்கூடாதோ அதைப் பண்ணுவேன். அதுதான் நான்." என்று சிரிக்கிறார்.

1981ல் மிஸ் இந்தியாவாக தெரிவு செய்யப்பட்டார். அதன் பின்னரே சினிமா வாய்ப்புகள் தேடி வந்தன என்கிறார்.

தமிழில் பாக்யராஜ் ஜோடியாக 'என் ரத்தத்தின் ரத்தமே' படத்தில் நடித்தார். இப்போது டூயட் படத்தின் மூலம் மீண்டும் தமிழ் படவுலகில் காலடி வைத்திருக்கிறார்.

## ப்ரியா ராமனா? சீதாவா? பதில் சொல்லிப் படும் கஷ்டம்

வள்ளி பட நாயகி ப்ரியாராமன் பாண்டியராஜனோடு சுப்பிரமணிய சுவாமி படத்தில் நடித்து வருகிறார். வெளிப்புறப் படப்பிடிப்புக்கு போனபோது ரசிகர் பட்டாளம் சூழ்ந்து கொண்டதாம்.

"ஆண்பாவம் படத்திற்கு பின் பாண்டியராஜனோடு மீண்டும் நடிக்கிறீர்கள் வாழ்த்துக்கள்" என்று கைகுலுக்கினார்களாம்.

"ஸாரி நான் சீதா அல்ல. வள்ளி படம் பார்த்ீங்களா? நான் ப்ரியாராமன்." என்று அவர் சொல்ல ரசிகர்கள் நம்பவில்லையாம்.

ப்ரியாவுக்கு ஒரு பக்கம் பெருமை. இன்னொரு பக்கம் கவலை. ரசிகர்கள் மத்தியில் தான் இன்னும் பிரபலமாகவில்லையோ என்று கவலை.

## பாப்பா முரசு சிறுகதை

# ஆசையும் மீசையும்

இரத்தினபுரி அரசனுக்கு ஒரே ஒரு பெண். அவளை மிகச் செல்லமாக வளர்த்தார். நன்றாகப் படிக்க வைத்தார். பருவம் வந்ததும் அவள் விரும்பும் ஒருவனுக்கே அவளை மணம் முடித்துத்தர விரும்பினார்.



மகளை ராஜாத்தி என்றுதான் செல்லமாக அழைப்பார்.

ஒரு நாள், "ராஜாத்தி இங்கே வாம்மா" என்று அழைத்தார்.

"இதோ வந்துவிட்டேன் அப்பா," என்றபடியே ஒரு புறாவைக் கையில் ஏந்தியபடி அங்கே வந்து நின்றாள் ராஜாத்தி.

"இன்றைக்கு உனக்கு ஒரு சந்தோசமான செய்தி சொல்லப் போகிறேன்!" என்றார்.

"சொல்லுங்கப்பா!"

"உனக்குத் திருமணம் செய்து வைக்கப் போகிறேன். எந்த மாதிரி மணமகனைத் தேர்ந்தெடுக்கப் போகிறாய் சொல்...!"

அரசர் இப்படிக் கேட்டதும் நாணிக் கோணி நிற்கவில்லை ராஜாத்தி.

"அப்பா எனக்குக் கணவனாக வருபவனுக்கு மீசை இருக்கலாம். ஆனால் ஆசை இருக்கக்கூடாது. இது என் முதல் நிபந்தனை. அவன் மெய் பேசலாம். ஆனால் பொய் பேசக்கூடாது. இது இரண்டாவது நிபந்தனை. அசைவம் சாப்பிடக்கூடாது. இது மூன்றாவது நிபந்தனை."

தான் நினைத்ததை ஒளிவு மறைவின்றி அரசரிடம் சொன்னாள் ராஜாத்தி.

அரசர் அடுத்த நாளே இதைத் தாண்டோரா போட்டு நாடெல்லாம் அறிவிக்கச் சொன்னார். மந்திரியை அழைத்து ராஜாத்தி விரும்பிய மாதிரியான நிபந்தனைகளுடன் மணக்க விரும்புபவர்களை அழைத்து வர ஏற்பாடு செய்யச் சொன்னார்.

மணமகன் தேர்வு நாளன்று...

அரண்மனையின் வெளியில் மிகப் பெரிய பந்தல் போடப்பட்டிருந்தது. நிறையப் பேர் வந்திருந்தனர். அத்தனை பேர் முகத்திலும் மீசை படர்ந்திருந்தது. முதலில் ஒருவன் வரவழைக்கப்பட்டான். ராஜாத்தியே பேட்டி கண்டாள்.

"நீங்கள் ஏன் மீசை வளர்க்கிறீர்கள்?"

"எனக்கு மீசை மீது ஆசை" என்றான். உடனே அவனை நிராகரித்து அனுப்பி வைத்தாள். முதல் நிபந்தனை ஆசை கூடாதென்பதல்லவா?

அடுத்தவன் உஷாரானான். இதே கேள்வி கேட்கப்பட்டது.

'நானா வளர்க்கிறேன். அது தானாகவே வளர்ந்தது."

அடுத்த கேள்வி, "பொய் பேசுவீர்களா?"

"நீங்கள் ரொம்பவும் அழகாக இருக்கிறீர்கள். இது எப்படிப் பொய்யாகும்?" திருப்பிக் கேட்டான்.

இந்தப் பதிலை நிராகரிக்க முடியவில்லை. மூன்றாம் கேள்வியைக் கேட்டாள்.

"நீங்கள் சைவமா, அசைவமா?"

மறந்து போய் அவன் "அசைவம்" என்று சொல்லி விட்டான். நிராகரித்து விட்டாள்.

இப்படிப் பலபேரை நிராகரித்த பிறகு மிஞ்சியவர் ஒருவர்தான்.

அவரிடமும் மூன்று கேள்விகளைக் கேட்கலானாள்.

மூன்று கேள்விகளுக்கும் அவர் வித்தியாசமாகவே பதிலளித்தார்.

"நான் வைத்திருப்பது பொய் மீசை. எனக்கு மீசை மீது ஆசை இல்லை, உன்மீது தான்," தைரியமாகப் பதிலளித்தான்.

இரண்டாவது கேள்விக்குப் பதில், "நான் வீட்டில் சைவம், வெளியில் அசைவம். எப்படியும் என்னால் இருக்கமுடியும்."

ராஜாத்திக்கு இவனது பதில் பிடித்துவிட்டது. "உங்கள் பதில்களில் உண்மை தெரிகிறது. வீரம் தெரிகிறது. எதையும் அனுசரித்துப் போவீர்கள் என்றும் தெரிகிறது. அதனால் நான் உங்களையே திருமணம் செய்து கொள்கிறேன்," என்றாள். ●

## விடுகதைகளும் விடைகளும்

1. கட்டையன் கறுவலன். காவலுக்குக் கெட்டிக்காரன். அவன் யார்?
2. கண்ணுக்குப் பெரியவன். சின்னக் கண்ணன். அவன் யார்?
3. பிறந்த நாள் முதல் வயிற்றாலே போகுது. அது என்ன?
4. பாம்பு ஓடுவதேன்? பால்கிணறு இடிவதேன்? அது என்ன?
5. அந்தரத்துச் செம்பிலே அதிசயமான தண்ணீர். அது என்ன?
6. மண்ணுக்குள் கிடந்த மயிராண்டி. உரிக்க உரிக்கத் தோலாண்டி. அது என்ன?
7. இரவில் சுமந்திடுவான். பகலில் சுருண்டிடுவான். அவன் யார்?
8. நாள்தோறும் வருவார். நல்லது கெட்டது தருவார். அவர் யார்?

1. பூட்டு 2. யானை
3. பாம்பு 4. அடிப்பாரற்று
5. இளநீர் 6. வெங்காயம்
7. பாய் 8. தபாற்காரன்

ச.சுரேந்திரன்-காத்தான்குடி.

• • •

1. வெளிச்சத்திலே பிறந்ததை இருட்டிலே பார்க்கிறோம். அது என்ன?
2. நெல்லுக்கும் புல்லுக்கும் நின்றாடும் கருவி. அது எது?
3. இணைபிரியமாட்டார்கள், நண்பர்களல்ல. ஒன்று சேர மாட்டார்கள், பகைவருமல்ல. அவர்கள் யார்?
4. நீரிலே விளையும்பூ, நிலத்திலே விளையாப்பூ, மங்கையர் கொண்டைக்கு வைக்காப்பூ. அது என்ன பூ?
5. எலும்பில்லாதவன் எருதுபோல் உழைக்கிறான். அவன் யார்?
6. இரவும் பகலும் ஓடுகிறான். இடத்தை விட்டு நகர்வதில்லை. அவன் யார்?
7. அடி காட்டிலே, நடுமாட்டிலே, நுனி வீட்டிலே. அது என்ன?
8. தரையிலே தவளமாட்டான். தண்ணீரில் மிரளமாட்டான் அவன் யார்?
9. செலவில்லாமல் வீடுகட்டி நிலையில்லாமல் வாழ்பவன் யார்?

1. சினிமாப்படம் 2. பணம்
3. தண்டவாளம் 4. உப்பு
5. மண்புழு 6. கடிகாரம்
7. நெல் 8. மீன்
9. சிலந்தி

பா.ரகுநாதன்-தாழங்குடா-2.

•••

## விநோத கணிதச் சதுரம்

01 தொடக்கம் 09 வரையுள்ள எண்களைப் பயன்படுத்தி மேல் இருந்து கீழாகவும் இடமிருந்து வலமாகவும் கூட்டும் போது கூட்டெழுத்தோடு 15 பெற முடியுமா? முடியும் இதோ:

| | | |
|---|---|---|
| 4 | 9 | 2 |
| 3 | 5 | 7 |
| 8 | 1 | 6 |

ஆக்கம் எம்.எல்.ஸாமிலா
மத்திய கல்லூரி- ஓட்டமாவடி.



இங்கிலாந்தில் 1916ம் ஆண்டு நடைபெற்ற ஒரு வழக்கில் வில்லியம் அப்ஜான் என்ற வழக்கறிஞர் தன் தரப்பு வாதத்தை 45 நாட்கள் பேசி முடித்தார். இங்கிலாந்து சட்ட வரலாற்றில் இந்தப் பேச்சு முக்கிய இடம் பிடித்தது. மிக அதிக நாட்கள் பேசிய வழக்கறிஞர் என்ற பெயரை வில்லியம் பெற்றார்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 12.02.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 27
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு-05.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 24

பரிசுக்குரியவர்:
ஜிவகர்ஷினி தேவசிகாமணி சர்மா
சிலாபம்.

பாராட்டுக்குரியவர்கள்:

அப்துல் ஸலாம்
அல்-ஹிலால் மகா வித்தியாலயம்,
கண்டி.

த. பாலசுப்பிரமணியம்
இறம்பொட தமிழ் மகா வித்தியாலயம்,
இறம்பொட.

பாத்திமா ரிஸ்மியா
அடபாகை ரோமன் கத்தோலிக்க
வித்தியாலயம், கம்பளை.

பாத்திமா நலீலா
பதியுத்தீன் மகளிர் கல்லூரி, கண்டி.

சி. தேவதர்ஷினி
கூனித்தீவு-9, மூதூர்.

கே. சிவசந்திரன்
பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு.

வடிவேல் மணிமாலா
கொழும்பு-9.


ரியாஸா பாரூக்
நுவரெலியா.

வினோகாந்தன் வீரபுத்திரன்
புனித ஜோன் போஸ்கோ கல்லூரி
ஹட்டன்.

ஈ.எல். தோமஸ்
ஹொப்டன் எஸ்டேட்,
ஹொப்டன்.

## அறிவோம் மனதில் பதிவோம்

அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்ட புதிதில் மேற்கிந்தியத் தீவுகளில்தான் முதன் முதலில் ஆடுகள் வளர்க்கப்பட்டன. பின் அவை கண்டம் முழுவதற்கும் கொண்டு செல்லப்பட்டன.





மீன் வளர்க்கும் தொழில் பிரான்ஸ் நாட்டில் 13ம் நூற்றாண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டது. அங்கு குளங்கள் அமைக்கப்பட்டு உணவுக்காக மீன்கள் வளர்க்கப்பட்டன.

முற்காலத்தில் இங்கிலாந்தில் மருத்துவமனைகள் மிகக் குறைந்த அளவில்தான் இருந்தன. செல்வந்தர்கள் அளிக்கும் நன்கொடையால் அவை இயங்கின. சில சமயம் ஒரே கட்டிலில் இரண்டு நோயாளிகள் இருக்கும் நிலையும் ஏற்பட்டது.



இங்கிலாந்து அரசர்களிலேயே மிகவும் அழகானவர் என போற்றப்படுபவர் நான்காம் எட்வேர்ட். இவரது உயரம் ஆறு அடி.






பிரான்ஸ் மன்னர் பதினோராம் லூயி பெரும் பொய்யர். இங்கிலாந்தின் நான்காம் எட்வேர்ட் மன்னர் பிரான்ஸ் மீது படை எடுத்து வந்தபோது அவருக்கு நிறைய பணம் லஞ்சம் கொடுத்துப் படையெடுப்பைத் தடுத்தார். பின் எல்லோருக்கும் விருந்தளித்து, சாமர்த்தியமாகப் பேசி படையெடுப்பைத் தடுத்தேன் எனக் கூறினர்.

1. மரம் வழுக்கும். காய் துவர்க்கும். பழம் இனிக்கும் அது என்ன?
2. தட்டும் தின்னும். தாளும் தின்னும். செம்பரிக்காளை நீர் பட்டால் செத்துப் போகும் செம்பரிக்காளை. அது என்ன?
3. மேலும் தாவரம். கீழும் தாவரம். நடுவில் பழம். அது என்ன?
4. கம்பு கீழே. கொட்டை மேலே. அது என்ன?
5. உயர உயரக் குதிப்பான். ஊசி படப் பொறுக்கமாட்டான். அவன் யார்?
6. சரியான நீதிபதி. நீதி கூறுவதில் வல்லவர். அவர் யார்?
7. நித்தம் கொட்டும் சத்தம் கேளா. அது என்ன?

4. பனங்கிழங்கு 5. பலூன் 6. தராசு 7. கண்
1. வாழை 2. தீ 3. அன்னாசிப்பழம்

கா.ம.நவாஸ்-காத்தான்குடி-06.




பாசமுடன் வளர்த்த யானைக்கு நோய் வந்துவிட்டது. வளர்த்தவரால் தாங்க முடியவில்லை. தவிக்கிறார். அதன் மூகத்தோடு தன் முகம் சேர்த்து அன்பைப் பொழிகிறார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## ஸ்போர்ட்ஸ்

# சொந்த மண்ணில் சாதனை படைக்க ஆசை!



இந்தியக் கிரிக்கெட் இரசிகர்கள் மட்டுமல்ல, இந்தியக் கிரிக்கெட் உலகமே ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு காரியத்தைக் கூறவேண்டுமானால் அது கபில்தேவின் அதிகபட்ச டெஸ்ட் விக்கட்டுக்கள் என்ற உலக சாதனைதான். அதிகபட்ச டெஸ்ட் விக்கட்டுக்களை வீழ்த்தி தற்போதைய சாதனையாளராக இருப்பவர் நியூசிலாந்தின் ரிச்சர்ட் ஹார்ட்லி. இவர் 431 டெஸ்ட் விக்கட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

இந்த மாபெரும் சாதனையை அவர் செய்து முடிக்கவேண்டும். அதுவும் விரைவாக என்று அவரது இரசிகர்கள் துடிக்கிறார்கள். ஆனால் சமீபகாலங்களில் கபில்தேவ் வழக்கம்போல் சிக்கனமாகவும், அதிக அளவில் ஓவர்களை வீசி வந்தாலும் விக்கட் வீழ்த்தும் அவரது தன்மையில் சற்ற மந்தநிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இந்தச் சாதனையை நிலைநாட்ட குறைந்தது மூன்று அல்லது நான்கு டெஸ்ட் போட்டிகளைக் கூட கபில்தேவ் எடுத்துக் கொள்ள நேரிடலாம் என்று சில வல்லுநர்கள் எண்ணுகிறார்கள்.


ஆனால் இலங்கைக்கெதிரான மூன்று டெஸ்ட்டுகளும் இந்திய மண்ணில் நடப்பதாலும், சமீபத்தில் நடைபெற்ற ஹீரோ கோப்பை இறுதிப் போட்டியில் கபில்தேவ் பந்து வீச்சு துல்லியமாக இருந்ததுடன், விக்கட்டுக்களையும் பெற்றுள்ளதால் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரிலேயே இந்த இமயச் சாதனையைக் கபில்தேவ் எட்டிவிடுவார் என்ற ஆணித்தரமான ஒரு கருத்தும் நிலவுகிறது.

சாதனை படைத்துச் சரித்திர நாயகனாக உள்ள போதும், கபில்தேவின் மனதில் உள்ளது என்ன? அவரே கூறியது இதோ:

இந்தியாவில் இப்போது நிறைய இளம் நடுத்தர வேகப்பந்துவீச்சாளர்கள் தோன்றியுள்ளது மகிழ்ச்சியாக இருக்கிறது. நான் சர்வதேச கிரிக்கெட்டில் காலடி எடுத்து வைத்தபோது புதுப்பந்தை வீசக்கூடியவர்கள் ஒரு சிலரே இருந்தனர். சொந்த வேலை காரணமாக சமீபத்திய வடக்கு மற்றும் மேற்கு மண்டல அணிகளுக்கிடையிலான டுலீப் கோப்பை போட்டியில் நான் கலந்துகொள்ளவில்லை. இதனால் இளம் வீரர்கள் அதிகம் பந்து வீசும் வாய்ப்புக் கிடைத்தது. அவர்கள் திறமை வெளிப்பட உதவியது. இது போன்று உள்நாட்டுக் கிரிக்கெட் போட்டிகளில் இளம் வீரர்கள் அதிகம் பந்து வீச வேண்டும்.

இந்திய அணிக்காக விளையாடுவதைக் காட்டிலும் முக்கியம் வேறு எதுவும் இல்லை. ஒரு டெஸ்டில் விக்கட்டே இல்லாமலும் அடுத்த போட்டியில் மளமளவென்று ஒருவர் விக்கட்டுக்களை வீழ்த்துவதும் சகஜம்தான். டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிகபட்ச விக்கட்டுக்களை வீழ்த்தியிருக்கும் நியூசிலாந்தின் ரிச்சர்ட் ஹார்ட்லியின் சாதனையை இந்திய மண்ணிலேயே முறியடித்து எனது உலக சாதனையை நிகழ்த்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இவ்வாறு கபில்தேவ் கூறியுள்ளார்.

# இலங்கை அணியின் சுற்றுப் பயணம்



தற்போது இந்தியாவில் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள இலங்கை கிரிக்கெட் அணி, இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும், ஒரு மூன்றுநாள் போட்டியிலும் இந்திய அணியுடன் விளையாடியுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணியின் இந்திய சுற்றுப்பயணத்தில் அடுத்து நடைபெறவுள்ள போட்டிகளின் அட்டவணை:

| திகதி | போட்டி | இடம் |
|---|---|---|
| பெப்ரவரி 03-05 | இரண்டாவது 3 நாள் போட்டி | சண்டிகார் |
| பெப்ரவரி 08-13 | மூன்றாவது டெஸ்ட் போட்டி | அகமதாபாத் |
| பெப்ரவரி 15 | முதலாவது ஒரு நாள் போட்டி. | ராஜ்கோட் |
| பெப்ரவரி 18 | இரண்டாவது ஒரு நாள் போட்டி. | ஹைதராபாத் |
| பெப்ரவரி 20 | மூன்றாவது ஒரு நாள் போட்டி | ஜலந்தர் |

## மழையும் வேண்டாம்! வெள்ளமும் வேண்டாம்!


மழைபெய்து வெள்ளம் போட்டால்
மா, சீனி, அரிசியெல்லாம்
கிடைத்திடும் என்றுதானே
கதிரோனை இந்தப்பக்கம்
வர வேண்டாமென்று கேட்டு
வழிபட்டோம்; நடந்ததென்ன?
நிரம்பிய வெள்ளத்தாலே
நிரந்தர அகதியானோம்!

பள்ளத்தில் வீடுகட்டி
பயிர்செய்தார் உடைமையெல்லாம்
வெள்ளத்தில் அழிந்து போச்சு!
விதானையை நீந்திச்சென்றே
"வெள்ளத்தை வந்துபார்க்க
வரவேண்டும் ஐயா!" என்றோம்
"பள்ளத்தில்தானே வெள்ளம்
பாதகம் இல்லை!" என்றார்

பெருவாரியாக வெள்ளம்
போட்டாலும் மனிதர் நெஞ்சில்
ஒரு துளி ஈரம்கூட
ஊறவே இல்லை; ஏனோ?
பெருவீடு வாசல் கட்டி
பணத்தின்மேல் புரள்வோருக்கு
பெருவெள்ளம் போட்டாலென்ன?
பேய் மழை பெய்தாலென்ன?

கதிரோனே வாடாப்பா நீ!
கார்முகில் கூட்டத்துள்ளே
ஒளித்தது போதும்! போதும்!
உடல் தேய்ந்து போனாற்கூட
இனியிங்கே வெள்ளம் வேண்டாம்!
இடி மின்னல்மழையும் வேண்டாம்!
குனிபவர் நாம் நிமிர
கொண்டுவா விடிவு நாளை!

செ. குணரத்தினம்.



## தொலைந்துவிட்டாள்

வெறும் மணல் வெளி...
முகத்தில் ஒவென்று அறையும்
வேலையற்ற காற்று
வெறும் பொழுது...!

ஆயிரம் கோடிக்கனவுகளையும்
குழிதோண்டி புதைத்து விட்டு
சோகமூச்சு விட்டாயிற்று
கண்ணீரும் வடித்தாயிற்று.

மறக்க முடியாத நினைவுகளில்
அழியும் மனம்
வாழ்வின் வசீகரத்தில்
வளரும் உயிர்.

யாருமற்ற ஓர்
அனாதை வெளியில்
நானும் எனது காதலும்...

ஏதோ ஒரு திக்கில்
எங்கோ வெகு தொலைவில்

இருப்பதாய் படுகிறதே
அதுவா என் வாழ்க்கை??

தொடரும் வேக நடை....

வெறும் மணல் வெளி...
முகத்தில் ஒவென்று அறையும்....
வேலையற்ற காற்று...
வெறும் பொழுது.....
அவள் தொலைந்து விட்டாள்!!

வே. பத்மநாதன்
மட்டக்களப்பு.

## அடுத்த குண்டு வெடிக்கும்வரை

உன் நினைவுகள்தான்
இதயத்தில்
முளைத்துக்கொண்டிருக்கின்றன;
உன் கடித வரிகளை
வாசிக்கின்ற போது
கவலைகளின் கனதி
சுக்கு நூறாகிப் பறக்க
நினைவுகள்
பஞ்சின் மென்மையாகின்றன!

□□

மூன்று வருடங்களுக்கு
முந்திய நிகழ்வுகள்
பசுமை! அவை-
மழைக்காலத்து
பச்சை இலைகள் மாதிரி
மனதில் குளிர்ச்சியானவை;
ஆனால் நண்பனே...!
அந்த சுகங்கள்
இன்று கருகிப் போயினவே!

□□

உன் மடியில்
நான் படுத்துக்கிடந்து
நமது-
காதலிகளைப் பற்றி
கதைத்துக்கொண்டிருந்த
கடற்கரை மணலில்
இன்று-
மண்டை ஓடுகள்
தெரிகின்றன;
மனிதரின் எலும்புகளை
சொறி நாய்கள்
கவ்விக்கொண்டு திரிகின்றன!

□□

நீயும்-நானும்
வீட்டாருக்குத் தெரியாமல்
கள்ளத்தனமாய்
மீன் பிடித்து
பிறகு-
குளித்துக் கும்மாளமடிக்கின்ற
பால் வத்தை ஓடையிலே
ஒரு நாளைக்கு
இரண்டு-மூன்று சடலங்கள்
மிதந்து வருவதாகவே
ஊரார்கள் பேசிக்கொள்கிறார்கள்!

□□

ஆற்றங்கரை ஓரமிருந்த
உனது பணக்காரக் காதலியின்
தென்னை மர வளவுக்குள்
முட்டி மோதித் திரிகிற
தென்றலைக் காண முடியாது;
கொலை செய்யப்பட்டவர்களின்
குருதி வாசமும்,
நெருப்புப் புகையும்தான் அங்கே!
மாலை ஆறு மணியானால்
பேய்கள் கத்துகிற சத்தமே
பெரிதாய்க் கேட்கிறது!

□□

அன்பு நண்பா!
எட்டு நரகங்களும்
இன்று நம்மூரில்தான்!
அன்றைய சந்தோசங்களெல்லாம்
துப்பாக்கி வெடிகள் பட்டு
அழிந்து
நாசமாகிப் போயின.
ஒவ்வொரு நிகழ்வும்
பாறாங்கல்லின் சுமையாக

நெஞ்சை-
கிழித்துக்கொண்டேயிருக்கிறது.

□□

உன் கடிதத்தின்
பழைய நினைவுகளில்தான்
இன்று-
மனம் களிக்கின்றேன்!
கொஞ்சம் நிம்மதி;
அடுத்த குண்டு
வெடிக்கும் வரைக்கும்தான்
ஆறுதல்!

-காத்தான்குடி அனு-





## என் மலையகத்தாய்க்கு...!

அம்மா!
நீ சுமக்கும்
கொழுந்துக்கூடை
என் இதயத்தைப்
பாதித்துப் பிழிகிறது.

ஒவ்வொரு காலையும்
மலையின்
அடிமுடி தேடி
நீ வைக்கும் ஒவ்வொரு
பாதச் சுவடுகளிலும்
என் இதயத்தை
ஒற்றி எடுக்கிறேன்.

சூரிய உதிப்பும்
சூரிய அஸ்த்தமனமும்
உன் வாழ்க்கையை
மறைத்தும் வெளிப்படுத்தியும்...

இன்னும் எத்தனை
நாளைக்கு
இந்தப் போலிகள்?

ஊனம் வடிப்பதும்
உருகி அழிவதும்
நீ சுற்றும்
கந்தல்ப் படங்கு போல
உனது எண்ணங்களும் வாழ்க்கையும்...

வெறிச் சோடி
கண்ணீர் உகுத்து
வழி நிலந்தேடுவது
உனக்காயல்ல என்பது
எத்தனை பேருக்குப்
புரியப்போகிறது.

அம்மா!
உன் தூக்கம் தொலைந்த
எத்தனை இரவுகளில்
ஆறு பிள்ளைகளையும்
எட்டடிக்குள்
போட்டு முடங்குவாய்?

இந்தத் தேசம்
விழிக்கும்வரை
உன் நிலை
இதுதானா தாயே?

அக்குறணை
ஹீரா அனஸ்.

## தேன் கிண்ணம்



## தேடலின் சுமை

மனித எழுதலின்
கொடூரத்தால்
கொளுத்தப்பட்ட
சுதந்திர முகம்
கரித்துண்டாய் தெரிந்தது
எனக்கு!

•

எலும்புகளில்
உற்பத்தியாகி
சதைகளில்
வளர்ந்தது
இது!

•

எனது
தேச இடுப்புகளை
உடைத்தெறிந்த
விலங்கின் கூுரமும்
இந்த மண்ணில் விளைந்த
சுதந்திர வித்துக்கள்தான்!

•

மறுத்தலில்
எழும்பிய உணர்ச்சிகளை
இடுக்கிக்கொண்டு
மிருகமாய் ஆனதும்
இதனால்தான்.

•

காகத்தின்
கூட்டினுள்
இப்போது குயில்கள்.

•

கூடு கட்டிக்கொள்ள
வலிமையற்ற
இயலாமையில்,
கூடுகளையே கலைத்துவிட்ட-
அக்கிரமங்கள்...!

•

யுகம் யுகமாய்
இந்த வெடிப்புகள்
இனி எழும்!

•

வாழ்தலின்
தத்துவம்
தவறாக
புரிந்துகொள்ளப்பட்ட
இந்த மண்ணில்
மயானங்களைத் தவிர
வேறென்ன மிஞ்சும்...?

ஒட்டமாவடி-அறபாத்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(06.02.94 முதல் 12.02.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மகரம் | - சூரியன், செவ்வாய், புதன் |
| கும்பம் | - சனி, வெள்ளி |
| இடபம் | - கேது |
| துலாம் | - வியாழன் |
| விருட்சிகம் | - இராகு |

விருட்சிகம், தனு, மகரம், கும்பம் ஆகிய இராசிகளில் சந்திரன் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனக்குழப்பம், காரியத்தடை. | காலை 8 மணி |
| திங்கள்- | பூமியால் நஷ்டம், மனக்கவலை. | காலை 10 மணி |
| செவ்வாய்- | பெரியோர் சகவாசம், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| புதன்- | செய்தொழில் விருத்தி, உயர்வான எண்ணம். | காலை 10 மணி |
| வியாழன்- | நடைக்கஷ்டம், அந்நியர் உதவி. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | வெளியிடத்தால் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| சனி- | வீண் சஞ்சலம், பணவரவுத்தடை. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்ச்சி, செய்தொழில் நன்மை. | காலை 7 மணி |
| திங்கள்- | உறவினர் உதவி, பணவரவு. | காலை 9 மணி |
| செவ்வாய்- | அந்நியர் நட்பு, தேகசுக நன்மை. | பி.ப 1 மணி |
| புதன்- | பெரியோர் சகவாசம், உயர்ந்த நிலை. | பி.ப 2 மணி |
| வியாழன்- | கடன்பயம், தேவையற்ற செலவு. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், மனமகிழ்வு. | காலை 8 மணி |
| சனி- | பொருள் பேறு, செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | ஆடம்பரச் செலவு, இனசன கொண்டாட்டம். | பி.ப 1 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, முன்னேற்றமான வாழ்க்கை. | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | உத்தியோக உயர்வு, முயற்சிகளில் வெற்றி. | காலை 7 மணி |
| புதன்- | பணப்புழக்கம், வீண் சஞ்சலம். | காலை 9 மணி |
| வியாழன்- | தூர இடப்பிரயாணம், கௌரவம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | அதிகார விருத்தி, உயர்ந்த நோக்கம். | பகல் 11 மணி |
| சனி- | வெளியிடத்தால் நன்மை, மகிழ்ச்சி. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ந்த எண்ணம், செய்தொழில் நன்மை. | பி.ப 2 மணி |
| திங்கள்- | கௌரவம், பெரியோர் நட்பு. | காலை 7 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், எண்ணங்கள் நிறைவேறும். | பகல் 12 மணி |
| புதன்- | வெளியிட நன்மை, காரியசித்தி. | காலை 9 மணி |
| வியாழன்- | பயணங்களில் வெற்றி, மகிழ்ச்சி நிலை. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | அந்நியர் சகவாசம், முன்னேற்றம். | பி.ப 4 மணி |
| சனி- | கீர்த்தி, செல்வச் சிறப்பு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், காரிய சித்தி. | காலை 9 மணி |
| திங்கள்- | வீண் மனஸ்தாபம், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | கௌரவம், உயர்ச்சி நிலை. | காலை 9 மணி |
| புதன்- | செலவு மிகுதி, பணக்கஷ்டம். | பி.ப 1 மணி |
| வியாழன்- | வெளியிடப் பயணம், பணவரவு. | காலை 8 மணி |
| வெள்ளி- | அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- | செய்தொழில் லாபம், உயர்ச்சி. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்- 8

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கௌரவம், காரியமேன்மை. | பி.ப 1 மணி |
| திங்கள- | துயர் அதிகம், பூமியால் கவலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியார் நட்பு, வீணான செலவு. | காலை 9 மணி |
| புதன்- | செய்தொழில் நட்டம், கவலை மிகுதி. | பி.ப 2 மணி |
| வியாழன்- | எடுத்தகாரியம் தடை, யோசனை மிகுதி. | காலை 7 மணி |
| வெள்ளி- | உறவினர் உதவி, செய்தொழில் மேன்மை. | காலை 8 மணி |
| சனி- | பணக்கஷ்டம், திடீர் பயணம். | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனப்பயம், காரியத்தடை. | காலை 10 மணி |
| திங்கள்- | உறவினர் பகை, குடும்பக் கலகம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- | செலவு மிகுதி, பெண்கள் சகாயம். | காலை 9 மணி |
| புதன்- | மனக்கஷ்டம், ஆழ்ந்த யோசனை. | பி.ப 2 மணி |
| வியாழன்- | பொன்பொருள் சேர்க்கை, பூமியால் கஷ்டம். | காலை 9 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், சுபகாரிய நன்மை. | பகல் 12 மணி |
| சனி- | செலவு மிகுதி, பணத்தட்டுப்பாடு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம் -5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மகிழ்ச்சியான நிலை, கௌரவத்தன்மை. | பி.ப 3 மணி |
| திங்கள்- | இனசனமகிழ்ச்சி, பணச்செலவு. | காலை 10 மணி |
| செவ்வாய்- | காரியசித்தி, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| புதன்- | புதிய முயற்சி, பணச்செலவு. | பி.ப 2 மணி |
| வியாழன்- | நடைக்கஷ்டம், தேகசுகம் பாதிப்பு. | காலை 8 மணி |
| வெள்ளி- | பெரியோர் அனுகூலம், மகிழ்ச்சி நிலை. | பகல் 10 மணி |
| சனி- | துயர் நீங்கும், அரசியல் இலாபம். | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 1

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரியானுகூலம், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, பணத்தட்டுப்பாடு. | காலை 6 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், பொருள்பேறு. | பி.ப 3 மணி |
| புதன்- | திடீர் சுகயீனம், வைத்தியச் செலவு. | காலை 9 மணி |
| வியாழன்- | தனலாபம், தாரசுகம். | காலை 8 மணி |
| வெள்ளி- | அந்நியர் நட்பு, சுபகாரிய மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- | கௌரவம், செலவு மிகுதி. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -7

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, கஷ்டநிலை நீங்கும். | காலை 9 மணி |
| திங்கள்- | துன்பம் அகலும், பொறுமையிழப்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தேகசுகம் பாதிப்பு, மனக்கவலை. | காலை 8 மணி |
| புதன்- | அந்நியர் சகாயம், பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| வியாழன்- | சுபகாரிய சித்தி, உயர்ந்த எண்ணம். | காலை 10 மணி |
| வெள்ளி- | செய்தொழில் இழப்பு, மனக்கவலை. | பி.ப 2 மணி |
| சனி- | செலவு மிகுதி, இனசனக் கொண்டாட்டம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொன்பொருள் வரவு, செலவு மிகுதி. | பி.ப 3 மணி |
| திங்கள்- | வெளியிடவாசம், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பயணங்கள் தடை, பணக்கஷ்டம். | காலை 9 மணி |
| புதன்- | முயற்சி மேன்மை, பலிதமான செயல். | பி.ப 1 மணி |
| வியாழன்- | கௌரவம், உயர்ந்த நிலை. | காலை 9 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| சனி- | தனலாபம், காரியசித்தி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பயணங்களில் வெற்றி, முன்னேற்றம். | பி.ப 1 மணி |
| திங்கள்- | வீணான முயற்சி, உயர்ந்த நிலை. | காலை 6 மணி |
| செவ்வாய்- | காரியசித்தி, கௌரவப்பேறு. | பகல் 12 மணி |
| புதன்- | வெளியிடத்தால் நன்மை, சுபகாரிய மகிழ்சி. | காலை 8 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, முன்னேற்றம். | பி.ப 1 மணி |
| வெள்ளி- | தனலாபம், செய்தொழில் நன்மை. | காலை 10 மணி |
| சனி- | துயர் நீங்கும், செலவு மிகுதி. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 4

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மருத்துவ ✚ விந்தைகள்



## தொண்டைக் கரகரப்பு!----- -------------ஏன்? எப்படி?

தொண்டை கரகரப்பு நீடிக்குமானால் அதனை உதாசீனம் செய்து விடாதீர்கள். ஏதோவொரு பொல்லாத வியாதிக்கு அது அறிகுறியாகவும் இருக்கக்கூடும்.

தடுமலோ அல்லது தடுமல்காய்ச்சல் நோயோ இல்லாத வேளையிலும் தொண்டையில் கரகரப்பு இருக்கக்கூடும். இத்தகைய தன்மை நீடிக்குமானால் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.


மஞ்சள் காய்ச்சல், டிஃப்தீரியா எனப்படும் தொண்டை அடைப்பான், வாதநோய் மற்றும் இரத்தப் புற்றுநோய் போன்றவை தோன்றுவதற்கும் தொண்டை அரிப்பு முன்னெச்சரிக்கையாக இருக்கலாம்.

தொண்டை அரிப்பு எப்போதும் அபாயகரமானதல்ல என்ற போதிலும் சில சமயங்கள் அபாய அறிகுறியாகத் தோன்றக்கூடும் என்றே நிபுணர்கள் கருதுகின்றனர்.

சில நுண்கிருமிகள் 3 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளின் உள்ளுறுப்புக்களைத் தாக்கும்போது அவர்களுக்கு பயங்கரமான இருமல் தோன்றும். சில நுண்ணுயிர் கொல்லிகளை உபயோகிப்பதன் மூலம் இத்தகைய தொண்டை அரிப்புகளைக் குணமாக்கலாம். தொடர்ந்து கொடுக்கப்படும் நுண்ணுயிர் கொல்லிகளினால் பயன்கிட்டவில்லையானால் நிச்சயமாக அது வேறு ஏதோ ஒரு பாரதூரமான நோய்க்கான அறிகுறி என்று நம்பலாம். இது குழந்தைகளுக்கு மட்டுமல்ல பெரியவர்களுக்கும் பொருந்தும்.

வெண்குருதிக்கலங்களில் தாக்கம் எற்படும் போதும் தொண்டை கரகரப்புத் தோன்றும். இதனால் நிணநீர் சுரப்பு அதிகரித்து கழுத்துப் பகுதியில் வீக்கம் உண்டாகும். நாம் உண்ணும் உணவுகள் மூச்சுக்குழாய் மற்றும் நுரையீரல் போன்றவற்றைச் சென்றடையாமல் தடுக்கும் மென்மையான தடுப்புக்கதவாக இயங்கும் தடையினை வைரஸ் கிருமிகள் தாக்கும்போது அவை சற்று வீங்கிவிடும். இதனாலும் தொண்டை வலி, கரகரப்புத் தோன்றும்.

சாதாரண குளிர் அல்லது தடுமல் போன்ற பாதிப்பில்லாத நோய்களினால் தொண்டைக் கரகரப்புத் தோன்றினால் நுண்ணுயிர்க் கொல்லிகளால் அல்லது தொண்டை வரை விட்டுக் கொப்பளிக்கும் மருந்துகளால் குணமாகிவிடும். இவற்றை மீறி நீடிக்குமானால்தான் கவனமாக இருக்க வேண்டும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்.



## இது 'உங்கள் குடலுக்குள் குடியிருக்கிறது

வேறு ஒரு உலகில் இருந்து வந்துள்ள விசித்திரப் பிராணி என்று நினைத்து விடாதீர்கள்.

வெளியே அல்ல-உங்கள் உள்ளேயே இது இருக்கிறது.

ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? மனிதனின் குடலில் காணப்படும் நாடாப்புழுவின் பெருப்பிக்கப்பட்ட தோற்றம்தான் இது.

நாடாப்புழுவை எடுத்து மருத்துவ ஆராய்ச்சிக் கூடத்தில் வைத்து இலத்திரோனிக் நுண்ணோக்கி கருவி மூலம் பெருப்பித்து பார்த்தபோது இப்படியான பயங்கர உருவமாகிவிட்டது.

## மாரடைப்பு வந்துவிட்டதா? அறிந்துகொள்ள சில அறிகுறிகள்

இருதயத்துடன் தொடர்புடைய நோய்கள் குறிப்பாக மாரடைப்பு நோயின் தாக்கம் ஏற்படப் போகிறது என்றால் பல சமிக்ஞைகள் தோன்றும். இத்தகைய எச்சரிக்கைகள் உங்கள் உடம்பில் தென்பட்டால் நிச்சயமாக நீங்கள் இருதய நோய் மருத்துவரை நாடவேண்டும். அதனை நிர்ணயிக்கும் பரிசோதனைகளைச் செய்து பார்த்துக் கொள்ள வேண்டும்.

சுவாசிப்பது கடினமாக இருக்குமானால், உணவு சமிபாடடைவதில் தொடர்ச்சியான சிக்கல் இருக்குமானால், அடிக்கடி மயக்கம் தோன்றினால் உடனடியாக மருத்துவரை நாட வேண்டும்.



சிலருக்கு புயங்களிலும் மார்பிலும் அழுத்தும் தன்மையோ பாரிக்கும் நிலமையோ ஏற்கடக்கூடும். தோள் பட்டையில் அல்லது நெஞ்சில் வலி தோன்றி புயம் வரை பரவலாம். வலி மிகக் கடுமையாக இருக்க வேண்டும் என்பதல்ல. ஆரம்பத்தில் சிறிதளவில் காணப்படும் வலி வரவர அதிகரிக்கக்கூடும். இவையும் மாரடைப்புக்கான அறிகுறிகளே. சில சந்தர்ப்பங்களில் வாயுக் கோளாறினாலும் இத்தகைய அடையாளங்கள் ஏற்படக்கூடும். எதற்கும் தீர்ப்பளிக்கும் பொறுப்பினை மருத்துவரிடமே விட்டு விடுவது நல்லது. ■

## மனிதாபிமானம் கொண்ட மிருகம் ஒரு பிரதேசம் கண்ணீர் வடிக்கிறது!

ஸ்பெயின் நாட்டிலுள்ள சியெறா டி அவிலா என்ற மலைப்பிரதேசத்தில் வாழ்ந்த ஒரு கரடி மரணமான செய்தி அந்தப் பிராந்தியத்தில் வாழ்ந்த மக்களனைவரையும் துயரத்திலாழ்த் தியது. அது வாழ்ந்த அதே மலைப்பகுதியில் கல்லறை ஒன்றினை அமைத்து மரணச் சடங்கினை மக்கள் நடத்திவைத்தனர்.



பௌலா மற்றும் பௌலோ என்ற பெயருடன் இரு கரடிகள் அந்த காடடர்ந்த மலைப் பிரதேசத்தில் வாழ்ந்து வந்தன. இளம் பருவத்திலேயே இவையிரண்டும் அந்தப் பகுதியிலுள்ள கிராமப் புறங்களில் வாழ்ந்த மக்களுடன் நெருங்கி உறவாடி வந்துள்ளன.

இதனால் இவையிரண்டும் மிருக குணத்தையும், முரட்டு சுபாவத்தையும் இழந்து-காட்டில் வசித்தாலும் வீட்டு வளர்ப்புப் பிராணிகளைப் போன்று பழகி வந்துள்ளன. சர்வசாதாரணமாக வீடுகளுக்குள்ளெல்லாம் புகுந்து சிறு குழந்தைகளுடன் விளையாடியும் வந்துள்ளன. வீட்டிலுள்ளவர்கள் உணவு உட்கொள்ளும் போதெல்லாம் பௌலாவும் பௌலோவும் தாராளமாக வந்து வீட்டுக்காரருடன் சேர்ந்து உணவில் பங்கு கொள்வதுமுண்டு.


கடந்த வருடம் மே மாதத்தில் அயலிலுள்ள நகரத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த சிலர் அந்த மலைக் காட்டிற்குச் சென்றபோது திசையறியாது சிக்கிக் கொண்டனர்.

அந்தக் குடும்பத்தினருக்கு உதவுவதற்காக அயலில் உள்ள கிராமத்து வீடு ஒன்றில் இருந்து பழங்களைக் கொண்டுவந்து கொடுத்திருக்கிறது.

தனது முன்னங்கால்களில் கரடி பழங்களைக் கொண்டுசெல்வதை வீட்டுக்காரர் கண்டுவிட்டார். உடனே அவர் அருகே சென்ற கரடி ஒருவகையான முனகல் ஒலி எழுப்பி சைகை காட்டி அவரையும் காட்டுக்கு அழைத்து சென்றது.

பின்னர்தான் உண்மை புரிந்தது. அன்றுமுதல் அந்தக் கரடியின் மனிதாபிமானத்தை அந்தப் பிரதேசமே பேசத்தொடங்கியது.


இப்பொழுது அந்த மனித நேயம் கொண்ட பௌலா இறந்துவிட்டது. அதன் இணையான பௌலோ ஒவ்வொரு நாளும் பௌலாவின் கல்லறைக்குச் சென்று மௌன அஞ்சலி செலுத்தி வருவதைக் கண்டு அந்தப் பிராந்தியத்திலுள்ளவர்கள் மனம் உருகிக் கண்ணீர் வடிக்கின்றனர். ■



கீழே கொடுக்கப்பட்டவைகளில் ஏதாவது ஒரு பிரச்சனை இருந்தால் கூட டாக்டரிடம் சென்று கண்களைச் சோதனை செய்து கொள்ளுங்கள்.

- இருட்டறையின் சூழலுக்கு ஒத்துப் போகமுடியாமை.
- பக்கத்தில் அல்லது தூரத்தில் உள்ள பொருட்களைக் காண்பதில் கஷ்டம் ஏற்படுதல்.
- அடிக்கடி கண்ணாடியையோ அல்லது கான்டாக்ட் லென்ஸையோ மாற்றிய பொழுதும் திருப்தி ஏற்படாமை.
- ஒளி அல்லது க்ளேரைக் காண்கின்ற பொழுது வழக்கத்திற்கு மாறான உணர்வு ஏற்படுதல்.
- கண்பார்வையில் நிறம் மாறியிருந்தால்.
- எரிச்சல் உள்ள சிவந்த கண்கள்.
- மின்னல் போன்ற வெளிச்சம் அல்லது கருப்புப் புள்ளிகள் தெரிந்தால்.
- கண்ணுக்குள் அல்லது கண்களைச் சுற்றி அடிக்கடி தொடர்ந்து வலி ஏற்படுதல்.
- ஒரு பொருள் இரண்டு பொருட்களாகத் தோன்றுதல்.
- ஒளியைச் சுற்றிய வட்டம் அல்லது வானவில் தோன்றுதல்.
- கண் முன்னால் திரை விழுந்தது போன்றிருத்தல்.
- பார்வையின் நடுப்பகுதியில் கருப்புப் பகுதி தெரிதல்.
- நேரான கோடு தெளிவற்று அல்லது வளைந்து தோன்றுதல்.
- மிகுதியாகக் கண்ணீர் ஏற்படுதல்.
- வறட்சியான, எரிச்சல் அல்லது அரிப்பு உள்ள கண்கள்.
- இடங்களைப் பார்க்கும் பொழுது பெரிய பூதம் போல் தெரிதல்.
- பக்கப் பார்வை (Side) தெரியாதிருத்தல். ■

## கடலுக்குள் காதல்



கடல்வாழ் பிராணிகளில் திமிங்கிலம் அபாயகரமானது. டொல்ஃபின் எனப்படும் பிராணி சாந்தமே உருவானது. அத்துடன் மனிதர்களுடன் நட்புக் கொள்ளக்கூடியது. கடலில் தத்தளிக்கும் மனிதர்களுக்கு உதவி அவர்களைப் பத்திரமாகக் கரைசேர்த்துமிருப்பதாக கதைகளுமுண்டு.

இவை இரண்டும் கடலில் வாழ்ந்தாலும் குட்டிகளை ஈன்று அவற்றுக்கு பாலூட்டும் தன்மை கொண்டவை. எனினும் இரண்டும் ஒன்றினை ஒன்று எப்போதும் எதிர்க்கும் பகையாளிகள். ஆனால் ஃபுளோடாக்கடலில் அண்மைக் காலங்களில் ஒரு புதுமையான காட்சியினைப் பலரும் கண்டு வியக்கின்றனர். கண்டும் கேட்டுமிராதவகையில் ஒரு திமிங்கிலமும் டொல்ஃபினும் இணைந்து திரிகின்றன. இந்த அதிசயக் காட்சி உயிரியல் நிபுணர்களுக்கு ஒரு சவாலாகவே இருந்து வருகிறது.

பயங்கரத் திமிங்கிளத்தின் அளவில் பாதியாக டொல்ஃபின் காணப்படுகிறது. இவையிரண்டும் எப்போதும் ஒன்றாகவே நடமாடுகின்றன. ஒன்றை மற்றொன்று பிரியாமல் மிக நெருக்கமாக இவையிரண்டும் கடலில் நீச்சலடித்துத் திரிகின்றன. இவையிரண்டுக்கும் வேறு துணையோ இணையோ கிடையாது. தங்களை ஒத்த இனங்டகளுடன் இவை சேருவதில்லை. அதுமட்டுமல்லாமல் இவற்றை ஏனைய அதே ரக இனங்கள் புறக்கணித்து ஒதுக்கி வைத்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது. இவற்றைப் பார்ப்பவர்கள் இவற்றுக்கிடையில் 'காதல்' ஏற்பட்டிருக்குமோ என்று சந்தேகப்படுகின்றனர். 'றோமியோ அண்ட் ஜூலியட்' என்று இவற்றை அழைக்கவும் தலைப்பட்டு விட்டனர்.

"கொலைகார திமிங்கிலமும் சாதுவான டொல்ஃபினும் இயல்பாகவே ஒன்றுக்கொன்று எதிரும் புதிருமானவை. ஒன்றை ஒன்று எதிரெதிரே சந்திக்க நேர்ந்தால் மோதிக்கொள்வதுண்டு. திமிங்கிலம் டொல்பினைப் பயங்கரமாகத் தாக்கிக் கொன்றுவிடும். அவ்வாறிருக்கும்போது இவையிரண்டும் 'யுத்த'த்தை வெறுத்து, சமாதானத்தை விரும்புகின்றன." இவ்வாறு நெல்சன் ஜோன்ஸ் என்ற மீனவர் கூறுகிறார்.

இவை இரண்டும் ஒன்றை ஒன்று தழுவியும் மூக்கால் மூக்கை முட்டியும் திரிவது காதலர்கள் உறவாடுவதைப் போல் தோன்றுகிறது என்றும் அவர் சொன்னார்.

பிரபல உயிரியல் நிபுணர் மாட்டின்ஸ் என்பவர் கருத்துத் தெரிவிக்கையில், திமிங்கிலம் பெண் என்றும் அதனை விட உருவத்தில் அரை மடங்காக மட்டுமே உள்ள டொல்ஃபின் ஆண் என்றும் தெரிவித்தார்.

இவையிரண்டும் உடலுறவு கொள்ளும் வாய்ப்போ சந்ததிகளை உருவாக்கும் வாய்ப்போ பெறமுடியாது என்று கூறுகிறார்.

இருப்பினும் இவையிரண்டும் கொண்டுள்ள நட்புறவு மிகவும் அதிசயமானதொன்று என்று வியந்து கூறுகிறார். ■

## பாலும் மீனும் சேர்ந்தால்...?

இரவில் பால் சாப்பிடுவது பலருக்கு பழக்கம். இரவு சாப்பாட்டுக்கு மீன் இருந்தால் பால் சாப்பிடக்கூடாது. இப்படி பலரும் சொல்வதைக் கேள்விப் பட்டிருப்பீர்கள். அப்படி சாப்பிட்டால் வெண்குஷ்டம் (Leucoderma) என்னும் வெள்ளைப்படை ஏற்படும் என்பது நம்பிக்கை. இது மருத்துவ உலகில் சிரிப்பை வரவழைக்கிறது. அப்படி வந்ததாக ஒரு நோயாளி கூட தன்னிடம் வரவில்லை என்கிறார் இந்தியாவைச் சேர்ந்த மாலா சந்திரசேகர்- தோல் மருத்துவ நிபுணர். ■

www.padippakam.com                                    நன்றி - நூலகத்திட்டம்

எழுதுவது-ரசிகன்

32

# கண்ணே மதுமிதா

ஹோட்டல் அஜந்தாவில் மடக்கப்பட்ட நரேனும்-சுஜிதாவும் மிகவும் உபயோகமாக இருந்தார்கள்.

ஒரு தட்டுக்கூட கிடையாது. சகல உண்மைகளும் சொன்னார்கள்.

நரேன் தன்னிடம் இருந்த நெக்கடிவ் கொடுத்தான்.

ஹோட்டல் அஜந்தாவில் வைத்திலிங்கமாய் நடித்த தனபால் வெளிநாட்டு தொழில் அதிபர்களுக்கு நடத்திய விருந்தில் மதுமிதாவையும் கலந்துகொள்ள அழைத்து வந்தது, சரியான சமயம் பார்த்து கூல்ட்ரிங்சில் மயக்க மாத்திரை கலந்து மதுமிதாவை ரூமுக்கு அள்ளிப் போய் அங்கே நிர்வாணம் செய்து படமெடுக்க வைத்தது என்று முழுக்கதையும் சொன்னான்.

டி.ஐ.ஜி டென்சில் நேரடியாய் விசாரணை நடத்தினார்.

"பொய் சொன்னால் பொடியாக்கிவிவேன்." என்று ஆரம்பத்திலேயே அவர் சொன்னதில் தெரிந்த கடுமை நரேனையும்- சுஜிதாவையும் பயத்தில் கட்டிப்போட்டிருந்தது.

"ஒத்துழைத்தால் பொலிஸ் ஒன்றும் செய்யாது, உங்கள் விடுதலைக்கு உதவும். முரண்டு பிடித்தால் பொலிஸ் வித்தையைக் காட்டும். எலும்புக்கள் எண்ணும். சுஜிதா நீ அழகாக இருக்கிறாய். தாங்க மாட்டாய். பொலிஸ் அடி உன்னை தும்பாக்கிவிடும்."

டி.ஐ.ஜி டென்சில் சொல்ல சுஜிதா பெட்டிப் பாம்பானாள்.

கேள்விகள் அனைத்துக்கும் சுத்தமான உண்மை பதிலாய் சொன்னாள்.

லாலின் தொடர்புகள், உள்நாட்டு, வெளிநாட்டு இரகசிய குற்ற உலக உறவுகள் என்று தனக்குத் தெரிந்த யாவும் சொன்னாள்.

நரேன் வைத்திருந்த புகைப்பட அல்பத்திலிருந்து றொபேட் ஜேம்ஸ் பீரிஸ் சிரித்துக் கொண்டிருக்க, அவனைப் பற்றிய முழு விபரங்களையும் கம்பியூட்டர் சொன்னது. உடனடியாக றொபேட் ஜேம்ஸ் பீரிஸின் புகைப்படம் பெரிதாக்கப்பட்டு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் போய்ச் சேர்ந்தது. பொலிஸ் உஷார் படுத்தப்பட்டது.

■

ரம்யா, றொபேட் ஜேம்ஸ் பீரிசின் நெற்றியின் மையத்தில் பிஸ்டலின் முனையால் அழுத்தினாள்.

"இங்கே உங்கள் கூட்டத்தின் நோக்கம் என்ன?"

"வழக்காமான நோக்கம்தான்."

"நேரடியான பதில் தேவை. சொல். சொல்லடா"

"பணம். யெஸ் கோடி கோடியாய் பணம்."

"அதற்காக?"

"ஹெரோயின் கடத்துவது. அதற்கு வசதியாக நாணயமான தொழில் நிறுவனத்தின் உதவி தேவைப்பட்டது.""

"அதாவது வைத்திலிங்கத்தின் ஏற்றுமதி-இறக்குமதி வியாபாரம் உங்கள் மனிதக் கொல்லி வியாபாரத்திற்கு பயன்படும் என்று கருதினீர்கள்."

றொபேட் ஜேம்ஸ் பீரிஸ் தலையாட்டினான். முகம் வெளுத்து வியர்வையில் உடல் முழுவதும் நனைந்து கொண்டிருந்தான்.

"வைத்திலிங்கத்தை வலையில் போட முடியவில்லை."

"யெஸ். ஆசை காட்டினோம். மசியவில்லை. அப்போதுதான் தனபால் கண்ணிலே பட்டான். அவன் பலவீனம் புரிந்து மடக்கினோம். உடன் பட்டான். டாக்டர் நந்தகோபால் ஏற்கனவே நமது ஆள்."

ரம்யா கரம் உயர்த்தி அவன் பேச்சை நிறுத்தி குறுக்கே கேள்வி வீசினாள்.

"நந்தகோபாலுக்கும் உங்களுக்கும் என்ன மாதிரியான உறவு?"

தயங்கினான். ரம்யா முறைத்து பிஸ்டல் முனையால் அழுத்த தொடர்ந்து பேசினான்.

"மனித உறுப்புக்களை எமக்கு விநியோகிப்பது அவர் தொழில்."

ரம்யாவுக்கு அதிர்ச்சியாக இருந்தது. வைத்திலிங்கமாய் நடித்த தனபாலின் கூட்டத்தில் அவள் இருந்தபோது கரோலினை ஒரு முறை சந்தித்திருக்கிறாள்.

சந்தோஷிடம் அவள் பற்றி விசாரித்தபோது ரம்யாவின் அணைப்புத் தந்த கிறக்கத்தில் கரோலினின் சாதகத்தையே உளறிக் கொட்டினான். றொபேட் ஜேம்ஸ் பீரிஸ் பற்றியும் உளறிவைத்தான்.

ஆஸ்பத்திரியில் படுக்கையில் இருந்தபோது நிறைய யோசித்ததில் "அட. குலாம்ஷாவுக்கு இதை சொல்ல மறந்தோமே" என்று நினைத்தாள்.

தானே நேரடியாக றொபேட் ஜேம்ஸ் பீரிஸை கவனித்தால் என்ன? குலாம்ஷாவுக்கும் உபயோகமாக இருக்கும்.

"ரம்யா நீ சாதாரணப் பெண்ணல்ல." என்று சொல்லி குலாம்ஷா வியக்க,

"வெறும் பாராட்டு மட்டும்தானா" என்று கேட்க வேண்டும்.

"என்ன வேண்டும். வேறென்ன வேண்டும் ரம்யா?"

என்று குலாம்ஷா விழிகள் விரிக்க, சுட்டுவிரல் நீட்டி, நெஞ்சில் தொட்டு,

"நீங்கள்தான் வேண்டும். எனக்கு நீங்கள் மட்டும்தான் வேண்டும்."

என்று சொல்லிக்கொண்டு குலாம்ஷா திணறத் திணற முத்தம் பொழிந்து, இறுக அணைத்து வலிய நேசம் வெளிப்படுத்த வேண்டும் என்று ரம்யா நினைத்தாள்.

எனவே ரம்யா ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறினாள். எனவே ரம்யா தானே பீரிசை கவனித்துக் கொண்டாள்.

றொபேட் ஜேம்ஸ் பீரிஸ் இப்போது ரம்யாவையே கவனித்துக்கொண்டிருந்தான். தப்பிக்கொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைக்காதா? என்று பயத்தோடு கலந்து நினைத்துக் கொண்டிருந்தான்.

"மதுமிதாவை ஏன் உங்கள் விளையாட்டில் இழுத்தீர்கள்?"

"தனபாலாய் நடித்துக் கொண்டிருந்த வைத்திலிங்கம் போலி என்பதை மதுமிதா எப்போதாவது புரிந்து கொண்டாள் என்றால் அவள் வாயை மூட வேண்டுமே அதற்கு."

"வைத்திலிங்கமாய் நடித்தது தனபால் என்பதை மதுமிதா அறிந்து கொண்டாள் என்பது தெரியுமா?"

"தெரியும். டாக்டர் நந்தகோபால்தான் பிளாஸ்ரிக் சர்ஜரி மூலம் தனபாலை நந்தகோபால் ஆக்கினார் என்பதும் மதுமிதாவுக்கு தெரிந்துவிட்டது."

ரம்யா புன்னகைத்தாள்.

"எந்தவொரு புத்திசாலிக் குற்றவாளியும் ஏதாவது தடயத்தை தன்னையும் அறியாமல் தவற விடுவதுண்டு ஜேம்ஸ். தனபாலும் தனது கடந்தகாலத்தை ஏதோ பெரிய தியாகியின் சுயசரிதை மாதிரி எழுதிவைக்க, அது மதுமிதாவின் கண்ணில் பட்டுவிட சகல வேசமும் கலைந்தாயிற்று."

"மதுமிதா நாங்கள் எதிர்பாராத புத்திசாலியாக இருந்துவிட்டாள்."

"பெண் என்றால் மட்டமா மிஸ்டர் ஜேம்ஸ்? அவளாலும் முடியும். நினைத்தால் போதும். நிறைய சாதிக்கலாம். இப்போது எனக்கு சில பெயர்கள் தேவை!"

நெற்றி வியர்வையை ஜேம்ஸ் துடைத்துக் கொண்டான்.

"எந்தப் பெயர்கள்."

"இங்கே இன்னும் பசுத்தோலுக்குள் மறைந்திருக்கும் உன் கூட்டத்தின் பங்காளிகளது பெயர்கள்"

ரம்யா கேட்க, ஜேம்ஸ் தன் கூட்டாளிகளது பெயர்கள் சொன்னான்.

சொல்லி முடிக்க ரம்யா தன் ஜீன்ஸ் பொக்கற்றில் இருந்து கையடக்கமான ரேப் ரெக்கோடர் எடுத்தாள். ஜேம்ஸின் முகத்துக்கு எதிரே தூக்கிக்காட்டிச் சிரித்தாள்.

"மிஸ்டர் ஜேம்ஸ் உமது ஒத்துழைப்புக்கு மாபெரிய நன்றி. நீ சொன்னதையெல்லாம் இது பத்திரமாக சேகரித்து வைத்திருக்கிறது. இப்போது நான் ஒரு காரியம் செய்யப் போகிறேன்."

ஜேம்ஸ் குழப்பமாய், புதிராய் ரம்யாவைப் பார்த்தான"என்ன காரியம் தெரியுமா?"

பதில் சொல்லாமல், முகத்தில் பயம் மாறாமல் மேலும் வியர்த்தான்.

ரம்யா அவன் பயத்தில் துடிப்பதை இரசித்தாள்.

"பார்த்தாயா ஜேம்ஸ். என்ன செய்யப் போகிறேன் என்று தெரியாமல் நீ துடிக்கிறாய். உன்னைக் கொல்லப்போகிறேன் என்று நான் உண்மையைச் சொன்னால் மேலும் எப்படி நீ துடிப்பாய்."

"வேண்டாம் ரம்யா. என்னை..என்னை"

"கொல்லாதே நான் திருந்திவிடுகிறேன் என்று சொல்லப் போகிறாயோ? படத்தில் வரும் வில்லன் கடைசியாக வரும் சீனில் திருந்திவிடுவது மாதிரி நீயும் கதை சொல்லப் போகிறாய்."

"ரம்யா...உனக்கு என்ன வேண்டும். எவ்வளவு பணம் வேண்டும் கேள் தருகிறேன்...ஆனால் என்னை விடு. இந்த நாட்டைவிட்டே ஓடி விடுகிறேன்."

ஜேம்ஸ் கெஞ்சினான். ரம்யா சிரித்தாள்.

"உன்னை பொலிசில் கொடுத்தால் அதிக தொகை வாங்கும் சட்டத்தரணியை வைத்து வெளியே வந்துவிடுவாய். ஓடித்தப்ப அனுமதித்தால் போதை மருந்தால் இன்னும் பலரை மெல்ல மெல்ல சாகடிப்பாய். இதெல்லாம் அவசியமா ஜேம்ஸ். வேண்டாம்."


சொல்லிக்கொண்டு நெற்றியின் மையத்தில் பிஸ்டல் முனை சரியாகப் பொருந்தி இருக்கிறதா என்று பார்த்துக்கொண்டு,

" நீ சாவதுதான் சரி ஜேம்ஸ். அதனால் இந்தா ஒரு தோட்டா."

விசை தட்ட நெற்றியின் மையத்தில் ஒரு வட்டப் பொட்டாய் துளையிட்டு பிடரிவழியாக வெளியே போனது தோட்டா.

பக்கத்து கதவு திறந்து சீற்றில் சரிந்துகிடந்த றொபேட் ஜேம்ஸ் பீரிஸை வெளியே தள்ளி வீதியில் போட்டுவிட்டு கதவு மூடி, சாவிதிருகி காருக்கு உயிர் கொடுத்தாள்.

■



கரோலின் ரம்யாவால் கட்டப்பட்ட கயிறுகள் விலக்கி, உடனே ஒரு ராக்சி பிடித்து றொபேட் ஜேம்ஸ் பீரிசின் இரகசிய இடம் வந்தாள்.

அங்கு ஜேம்ஸ் இல்லாமல் போக அங்கிருந்தவர்களை உஷார்படுத்தினாள்.

உடனே அந்த இடத்தைக் காலி செய்து வெளியேற யோசனை சொன்னாள்.

பங்களா முழுவதும் பரபரப்பானது. றொபேட் ஜேம்ஸ் பீரிசின் ஆட்கள் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு தப்பிச் செல்ல அவசரமானார்கள்.

நீலநிற வானில் வந்து டாக்டர் நந்தகோபால் வெளியே காத்து நிற்பதாக கேட் காவலாளி இண்டர்கோம் மூலம் சொல்ல, கரோலின் யோசித்தாள்.

"சரி உள்ளே விடு."

நீலவான் உள்ளே புகுந்து நிற்க பின்னால் இருந்து பி.எம்.லால் அவசரமாக கீழே குதித்தான்.

"டாக்டர் குலாம்ஷா ஏமாற்றிவிட்டான். போலி என்று நடித்து, றொபேட் ஜேம்ஸ் பீரிஸ் போல் யாரையோ பேசவைத்து நாடகமாடி இந்த இடத்தை கண்டுபிடிக்க முயன்றிருக்கிறான்."

லால் கத்திக்கொண்டிருக்க, டாக்டர் நந்தகோபால் அதிர்ச்சியாய் கீழே இறங்கினார். லாலின் சத்தம் கேட்டு பெரிய மார்புகள் குலுங்க ஓடிவந்த கரோலின்,

"இப்போது குலாம்ஷா எங்கே"

என்றாள் மூச்சிறைத்தபடி.

"பின்னால் ஒரு கறுப்புக்காரில் வந்து கொண்டிருக்கிறான்."

கரோலின் பதட்டமாகி, தன் ஆட்களை அழைத்து உத்தரவுகள் போட்டாள்.

"காரை உள்ளே வர அனுமதித்து சுட்டுத் தள்ளுங்கள். யாரும் தப்பவே கூடாது."

கறுப்புக்கார் வர கேட் காவலாளி கேட் திறந்து வழிவிட்டான். எவ்வித கேள்வியும் இல்லாமல்கேட் திறக்கப்பட்டது குலாம்ஷாவுக்குள் சந்தேகம் விதைத்தது. உள்ளே பொறி வைக்கப்பட்டிருக்கிறது என்று புரிந்து போனது.

பின்னால் திரும்பிப் பார்த்து,

"கார் உள்ளே நுழையும்போது நாம் குதித்துவிடவேண்டும். மோதல் காத்திருக்கிறது. வலை விரிக்கப்பட்டிருக்கிறது."

பின்னால் இருந்தவர்கள் புரிந்து கொண்டார்கள். கார் கேட் தாண்டி உள்ளே நுழைய, குலாம்ஷா வேகமாய் கதவு திறந்து, இடுப்பில் இருந்து பிஸ்டல் உருவி தரையில் விழுந்து உருண்டார். பின்னால் இருந்தவர்களும் தரையில் குதித்து உருள, உள்ளே இருந்து பொழிந்த தோட்டாக்கள் காரை சல்லடை போட்டன. சாரதி கீழே குதிக்க கதவு திறக்க பாய்ந்துவந்த தோட்டாக்கள் உடலில் பொத்தல்கள் போட்டன.

குலாம்ஷா தரையில் உருண்டபடி பிஸ்டலை இயக்க, தவறாத குறியில் எதிரே எதிரிகள் இரத்தம் கொட்டி தரையில் வீழ்ந்தனர். குலாம்ஷாவுக்கு துணையாய் வந்த இருவரும் துல்லியமாய் எதிரிகள் மீது எ.கே 47ஐ பயன்படுத்த எதிரிகள் அதிர்ந்து போய் தப்ப வழி தேடினார்கள். இனி முடியாது என்று புரிந்து ஆயுதம் கீழே போட்டு சரண் அடைந்தார்கள்.

டாக்டர் நந்தகோபால், லால், கரோலின் மூவரும் பங்களாவின் உள்ளே ஓடி திகைத்து நிற்க,இரண்டாவது மாடியில் இருந்து குலாம்ஷாவை நோக்கி குறிவைத்துக் கொண்டிருந்தான் அவன். தரையில் இருந்து குலாம்ஷா எழும் நேரத்திற்காக பொறுமையாய் காத்திருந்தான்.

அவன் றொபேட் ஜேம்ஸ் பீரிசின் தீவிர விசுவாசி, நம்பகமானவன். பயஸ். பயஸ் குறி தவறாது என்பது றொபேட் ஜேம்ஸ் பீரிசுக்கு அவனிடம் பிடித்த விசயங்களில் ஒன்று.

எதிரிகள் சரணடைய குலாம்ஷா தரைவிட்டு எழுந்தார்.

பயஸ் குறிபார்த்து விசை தட்ட தயாரானான்.

"எல்லோரும் அந்த ஓரமாய் நில்லுங்கள். பணிந்தால் உங்களுக்கு பாதகம் வராது."

குலாம்ஷா சொல்லிக்கொண்டிருக்க, பயஸ் மேலே இருந்து மிகச் சரியாக குலாம்ஷாவின் மார்புக்கு குறிவைத்துச் சுட்டான்.

குலாம்ஷாவை நோக்கி தோட்டா பறந்துவர,

குலாம்ஷா மீது பாய்ந்து அவர் மார்பை தன் உடலால் மறைத்தது ஒரு உருவம்.

பயஸ் அனுப்பிய தோட்டா அதன் முதுகின் மையத்தில் துளைபோட்டு குருதி பெருக்கியது.

"ரம்யா நீயா?" என்றார் குலாம்ஷா.

பயஸ் அடுத்த தோட்டாவை அனுப்ப முயல, குலாம்ஷாவின் பிஸ்டல் முந்திக்கொண்டது. ரம்யாவை அணைத்தபடி பயஸ் மீது குறிபார்த்து விசை அழுத்த, பயஸின் இடது கண்ணில் பாய்ந்தது தோட்டா. குலாம்ஷாவுக்கு துணைக்கு வந்தவர்கள் தொடர்ந்து சுட்டதில் பயஸ் இனி தன் உடம்பில் தோட்டா தங்க இடமில்லாமல் சரிந்து விழுந்து மூச்சு அடங்கினான்.

ரம்யா அதிக இரத்தம் சிந்தி துவண்டு கொண்டிருந்தாள்.

நரேன் மூலமாய் றொபேட் ஜேம்ஸ் பீரிசின் இரகசிய இடம் அறிந்து டி.ஐ.ஜி டென்சில் பொலிஸ் படையோடு வந்துசேர, பங்களா முழுவதும் அலசப்பட்டது.

ரம்யா இனி தன் முடிவு நிச்சயம் என்று உணர்ந்தாள். ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்ல குலாம்ஷா எடுத்த முயற்சி தடுத்தாள்.

"வேண்டாம் ஷா. இனி பிரயோசனம் இல்லை. உங்களை காத்து அதற்காக உயிர் தந்தது பெருமை. உங்களுக்காய் சிந்திய குருதி இதுவரை நான் செய்த குற்றங்களுக்கு தந்த விலை."

குலாம்ஷா தன் உறுதி தளர்ந்து உடைந்து போனார்.

"ஐயோ ரம்யா. நீ சாகக்கூடாது. நீ...நீ சாகக்கூடாது."

வாய்விட்டு அழுதார். அருகே வந்து குலாம்ஷாவின் தோளில் ஆதரவாய் கரம் பதித்தார் டி.ஐ.ஜி. டென்சில்.

"ஷா எனக்கொரு ஆசை."

ரம்யா பலவீனமான குரலில் சொன்னாள்.

"கடைசியாக எனக்கொரு முத்தம் தருவீர்களா ஷா"

விழிகளில் வெள்ளமாய் கண்ணீர் திரள ரம்யாவை மடியில் சாய்த்து கடைசியாய் துடித்த இதழ்களில் முத்தமிட்டார்.

திருப்தியாய் விழிகளில் காட்டிவிட்டு ரம்யா தன் இறுதி மூச்சை விட்டாள்.

'ர...ம்...யா..'

தன் நெற்றியில் கையால் அறைந்து உரத்துக் கத்தினார் குலாம்ஷா.

ரம்யாவின் உயிரற்ற ,இதழ்களில் உயிர்ப்புள்ள புன்னகை தெரிவது போல் இருந்தது.

■

பொலிஸ் விசாரணையில் பி.எம்.லால், டாக்டர் நந்தகோபால் இருவரும் தம் குற்றங்களை ஒப்புவித்தனர்.

ரம்மியாவின் ரேப்ரெக்கோடர் பல புள்ளிகளை வலையில் மாட்ட உதவியது.

வைத்திலிங்கம் தான் தப்பியகதை சொன்னார்.

தன்னோடு காரில் வந்த தனபால் தன்னை திடீரென்று தாக்கியது. தான் இறந்தது போல் நடிக்க, காரோடு சேர்த்து எரிந்துவிட பெற்றோல் ஊற்றிக் கொளுத்தியது. தனபாலுக்கு தெரியாமல் கார்க்கதவு திறந்து தான் தப்பியது, உடனே வெளிப்பட்டால் எல்லாம் குழப்பமாகிவிடும், எதிரிகளும் உஷாராகிவிடுவார்கள் என்று ஒளித்திருந்தது என்று சகலமும் விபரித்தார்.

தன்னோடு கோபித்து கண்டியில் தனது சிறிய தாயாரோடு இருந்த மகன் பஸ்டினை துணைக்கு சேர்த்தது, அவனை அநியாயமாக இழந்தது பற்றிச் சொல்லி விழிகள் கலங்கினார்.

டி.ஐ.ஜி. டென்சில் மதுமிதாவைப் பார்த்தார். கபடமில்லாமல் சிரித்தாள்.

"யோசிக்க வேண்டாம் வைத்திலிங்க மதுமிதா கொன்றது கொடியவர்களை. இந்த விசாரணையில் போதைக் கடத்தல் சாம்ராச்சியமே சிக்கியிருப்பதால் மதுமிதாவுக்கு நன்றி சொல்ல வேண்டியிருக்கும். நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளலாம்."

என்று சொல்ல, அவரை நன்றியோடு பார்த்தாள் மதுமிதா.

■

குலாம்ஷா மூன்று மாத விடுப்புக் கேட்க, கவலையோடு பார்த்தார் டி.ஐ.ஜி. டென்சில்.

"வேலையில் இருந்தால் ரம்யாவின் நினைவுகள் உன்னை வாட்டாது ஷா."

குலாம்ஷா வரட்சியாய் சிரித்தார்.

"அவள் நினைவுகளை மறக்க விரும்பவில்லை டி.ஐ.ஜி. நேசம் வற்றிப் போகும் உலகில், நேசிக்கத் தெரிந்தவர்களை பெறுவது அரிது. பெற்றுக் கொண்டது அபூர்வம். அந்த நினைவுகளே சுகம். ரம்யா என்றும், எப்போதும் இனி எனக்குள். அவளே உயிர். அவளே உற்சாகம். அவளே மூச்சு. மறக்க விரும்பவில்லை. முடியாது."

ஒரு சல்யூட் வழங்கிவிட்டு குலாம்ஷா செல்வதை கவலையோடு பார்த்துக்கொண்டிருந்தார் டி.ஐ.ஜி டென்சில்.

(நிறைவானது)


■


வரும் வாரம் புதிய தொடர்!

-இளமை துள்ளும் இனிய நடையில்-


ரசிகன் எழுதும்

கொலை விழும் நேரம்







## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: பி.றியாஸ் முகம்மட்
வயது: 19
முகவரி: அண்ணல்வீதி, சின்னக்கிண்ணியா
கிண்ணியா-03.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, உதைபந்து, கிரிக்கெட், பேனா நண்பர் தொடர்பு.



பெயர்: செல்வி.சின்னத்தம்பி மாலதி
வயது: 19
முகவரி: கருணா டெயிலர்
வாழைச்சேனை.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகங்கள், பத்திரிகை வாசித்தல், வானொலிகேட்டல் பேனா நண்பர் தொடர்பு



பெயர்: ஏ.முஸ்டாக் அமீன்
வயது: 20
முகவரி: 638, கடற்கரை வீதி,
சாய்ந்தமருது-04.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், பேனா நண்பர் தொடர்புகள்.



பெயர்: வி. இராமச்சந்திரன்
முகவரி: M.S.L.T.DB.12C
I.D.No-15267
P.o.Box-20942.
RYADH-11465
K.S.A.
பொழுதுபோக்கு: ஓவியம் வரைதல் டி.விபார்த்தல்,கதைப்புத்தகம் வாசித்தல்.

பெயர்: ஆர்.ராதாகிருஷ்ணன்
வயது: 24
முகவரி: 217/I, டிம்புள்ள றோட்
ஹட்டன்
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.

பெயர்: ஏ.எல்.நௌபல்
வயது: 17
முகவரி: 17, ஓடாவியார் ஒழுங்கை
காத்தான்குடி-06.
பொழுதுபோக்கு: நாவல்கள், பத்திரிகை வாசித்தல்.

பெயர்:ரி.மனோரஞ்சிதம்
வயது: 19
முகவரி: 51/3, யட்டிநுவர வீதி
பட்டுமாவத்த, கண்டி.
பொழுதுபோக்கு: ரீவி பார்த்தல், பத்திரிகை வாசித்தல், தையல்.

பெயர்:செல்வி. ஏ.றிசானா
வயது: 18
முகவரி: நாயக்கர் சேனை
மாம்புரி, புத்தளம்.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, பேனாநண்பர் தொடர்பு.


பேனா நண்பர் அரங்கம்
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-5.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# ஒரு கவிஞனின் கன்னிகை!

அக்குறணை ஹீரா அனஸ்



இரண்டு இதயங்களது "அன்பு" என்ற பொக்கிஷத்தின் அர்த்தத்தை காதல் என்பதோடு மட்டுப் படுத்தப் பார்க்கும் சமுதாயத்தினரின் மூளைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது என் உள்ளம்; சிந்தனை எல்லாம். அப்படிப்பட்ட வர்களின் எதிர்க்கட்சி நான்.

இதுவும் ஒரு வித்தியாசப்பட்டதான நேசிப்பு.

அந்த நந்தவனம் முழுக்க தென்றல் காற்று. சிதறிப்போன மகரந்தச் சுகந்தம். அவன் ஆசுவாசமாய் உலாவிக்கொண்டிருந்தான். அவன் ஒரு குழந்தை. அவனுக்கு ஒரு குழந்தை. ஆனால் அவன் ஒரு கவிஞன். அதனால்தான்; அதனாலேதான் அவள் அவனை நேசித்தாள். றிபாதா ஒரு செல்வி. ஒரு ஆசிரியை. அவனின் கவிதைகளை அவள் விரும்பினாள். அதனால் அவனை அவள் விரும்பினாள்.

காலுக்கடியில் ஒரு பூக்கொத்து மஞ்சளாய் வந்து விழுந்தது. ஆச்சரியமாய்ப் புருவங்களை உயர்த்தினான். எதிர்பாராமல் றிபாதா கைகொட்டி குழந்தையாயும், சிறுமியாயும், செல்வியாயும் சிரித்தாள். எதிர்ப்பட்டவுடன் அக்கறையாய் நலம் விசாரித்து கவிதைகளைப் பற்றியும், கவிதைக் கதைகளைப் பற்றியும், தாய்மையன்பு பற்றியும் மாறி மாறிக் கதைத்து மகிழ்ந்து, இரண்டு ஐஸ்கிறீம் வாங்கி தனியத் தனிய சாப்பிட்டு நேரம் செல்ல இரண்டு செவ்விளநீர் வாங்கி தனியத் தனியக் குடித்து....

'றிபாதா"

"ம்"

"உன் அன்பின் ஆழத்தை என்னால் உணரமுடிகிறதம்மா...ஆனால்..."

"என்ன ஆனால் உங்கள் கவிதையின் உயிர்ப்புத்தானே என்னை உயிருள்ளவளாக உலவவிட்டது."

அந்தக் கயல்விழிகள் லேசாய்க் கனிந்திருந்தன. கண்ணீர்க் குடம் சிறிதாய்த் தளும்பியது.

"வேண்டாம்..அழுகையும் வேண்டாம் ஆர்ப்பரிப்பும் வேண்டாம். மகிழ்ச்சி என்பதாய் இன்றைக்கு பிரகடனம் செய்வோம்."

அவனுடன் சேர்ந்து றிபாதாவும் சிரித்தாள்.

"என் கவிஞரே! உங்கள் கவிதைகள் தான் என்னுயிர்.. இல்லை இல்லை. அதற்கும் அதிகமாக நேசிப்பது.

"சத்தியமாய் உங்கள் மீது நான் வைத்திருப்பது வித்தியாசமான அன்பு. உங்கள் கவிதைகளுக்காகவே...!

"அவைகளைப் பார்க்கும் போது ஒரு நேசம்! அவைகளை பத்திரிகைகளில் இருந்து பேணுதலாய்க் கத்தரிக்கும் போது இன்னொரு பிரியம். அவைகளை ஒட்டிவைத்து சேர்த்துப் படிக்கும் போது மற்றுமொரு அன்பு. அந்தத்திருப்தியில் அவைகளை என் நெஞ்சோடு அணைத்தபடி சயனிக்கையில் ஒரு ஆத்ம திருப்தி.

"மஜ்னூன் லைலாவின் ஊருக்குப் போனால் அங்குள்ள எல்லாப் பொருட்களையும் நேசிப்பானாம். இந்தச் சுவர்களையும் அந்தச் சுவர்களையும் வாஞ்சையோடு முத்தமிடு வானாம். காரணம், சுவர்கள் மேலுள்ள பிரியத்தால் அல்ல. அந்த ஊரில் லைலா வசிக்கிறாளே... அவள் மீதுள்ள பைத்தியப் பாசத்தால்தான்....

"அதே போல்..."

"போம்மா...உன் பாசம் விசித்திரமானது...தான்."

• • • •

அந்த விபத்துச் செய்தி கேட்டு றிபாதா மயங்கி விழுந்தாள். அவளால் அதனை நம்பவே முடியவில்லை. பல நபர்களிடம் தீர விசாரித்தபின்தான் தன் கவிஞனின் நிலமை அவளுக்குத் தெரிய வந்தது. அழுது அழுது வீங்கிச் சிவந்த கண்களோடு ஜீ.எச்சுக்கு ஓடினாள். ஜீ.எச்.இல் கூட்டம் கொள்ள முடியாதபடி வரிசையில் நீண்டிருந்தது. (ஜீ.எச்.என்பதை கவர்ண்மென்ட் ஹொஸ்பிட்டல் என்பதாய் அர்த்தம் கொள்ளவும்.) வரிசை செல்வதாய் இல்லை. நேரம் 12 மணி மணியடித்ததும் கியூவரிசை மெல்ல மெல்ல முன்னேறியது. அவளின் தவணைவர பரபரப்புடன் விஷேட விபத்துப் பிரிவின் ஆறாம் இலக்கக் கட்டிலில் தன் நேசத்திற்குரிய கவிஞன் படுக்க வைக்கப்பட்டிருப்பதைக் கண்டாள். உயிர் இன்னும் இருக்கிற உத்தரவாதமாய் குளுக்கோஸ் ஏறிக்கொண்டிருந்தது.

றிபாதா அவனின் வலது கையைப் பார்த்தவள் அதிர்ந்தே போனாள். 'ஐயோ ஆண்டவனே! என் கவிஞனின் வலது கை...' என்று அலறியடித்தாள்.

இனி அவன் கவிதை எழுதமாட்டானா? வலதுகை முறிந்தே போய்விட்டதா...?

அவனண்டை போனாள். அவன் கண்திறக்கவில்லை. இன்னும் மயக்கம். கூடுதல் இரத்தப் போக்கின் விளைவு. றிபாதா அழுதாள்... தன் அன்புக் கவிஞனுக்காய் அழுதாள். எத்தனையோபேர் அவன் றிபாதாவின் காதலன் என்று சீண்டவும் அனைவருக்கும் ஆணித்தரமாக அசைக்க முடியாமல், "அவர் என் கவிஞன்" என்று அடித்துச் சொல்லியிருக்கிறாள். ஆனால் இன்று இவள் இந்த நேர்ஸ் என்ன கேட்டாள்? அவருக்கும் எனக்கும் அப்பிடி என்ன ஒற்றுமை?

"அம்மா அவங்க உங்க புருஷனா?"

அந்த நேர்ஸின் கேள்வியால் அவள் ஒருகணம் 'திக்' என்றாள். ஆனால் சமுதாயத்தின் பார்வை அப்படித்தான் இருக்கும். அதன் போக்கு அப்படியேதான். உலைவாயைத் தான் மூட முடியும்.

• • • •

ஒருநாள் அந்தக் கவிஞன் இறந்து போனான். றிபாதா அந்த அபாயத்தினால் அலைந்து போனாள். கண்கள் தொடராய்ச் சொரிய அவள் தன் கவிஞனின் கவிதைகளை எடுத்தாள். உள்ளத்தோடு அணைத்துக் கொண்டாள். தனது கவிஞனுக்காய் வீரிட்டு அழுதாள். மௌனமாயும் அழுதாள். விம்மி விம்மி அழுதாள். ஓடிச்சென்று தன் கவிஞனின் மௌன நிலையைப் பார்த்தாள். அந்தச் சோக சித்திரத்தை அவன் கண்டால் "அழாதே என் அன்பானவளே"! என்று அணைத்திருப்பான்.

மௌனம் கலைந்து அவனின் கவிதை அடிகளில் ஒன்றைக் கண்ணீருடன் படித்தாள்.

**"இன்றைய இரவு**
**மட்டும்**
**என் தூக்கத்தைத்**
**தாலாட்ட**
**ஒரு**
**ஒற்றைக்குயிலின்**
**இரவுக் கீதம்.**
**அதோ சப்தங்கள்....**
**அதோ நிசப்தங்கள்...**
**அனைத்தும்**
**இன்றுமட்டும்.**
**எங்கோ ஒரு**
**சுடலைக்குருவி**
**எனக்காக...**
**சத்தியமாய்**
**ஒரு இரவு.**
**இந்த உதிரப்போகும்**
**உயிரில்கூட நீ..நீ...நீ.."**

மீண்டும் மீண்டும் அதனையே நினைவிருத்திப் படித்தாள்; அந்தக் கவிஞனின் ரசிகை. இனி தனக்காய் கவிதைகளைத் தர அவன் இல்லை என்பதைத் தீர்மானப்படுத்த முடியாமல் தவித்தாள். அந்தப் 'ப்ரேமரசிகை' தன் கவிஞனின் உடைந்துபோன கையினை அள்ளி எடுத்து ஆசைதீர முத்தமிட்டாள். உயிருடன் இருக்கும் போது செய்யாத ஒன்றை மரியாதைக்காயும் மதிப்பிற்காயும் அவ்வாறு செய்தாள். பாடை போகிறது. அவளின் ஆருயிர்க் கவிஞனைச் சுமந்தபடி சுடலை நோக்கியதாய்... அவள் அழுது அழுது வீங்கிய கொவ்வை விழிகளுடன் வீதியையே நோக்கியிருந்தாள். றிபாதா ஒரு முடிவெடுத்தாள்.

என் உயிர்க் கவிஞனுக்காகவே வாழ்வது.

அவர் நினைவுடனேயே வாழ்வது.

அவரை நான் இப்போதும் நேசிக்கிறேன், கவிஞனாய்....

கால்கள் நடக்க அவள் உணர்வற்றுப் போகிறாள்.

அந்தக் கவிஞனின்-றிபாதாவின் உறவு வேறுபட்டது. அந்த ரசிகை ஒரு வித்தியாசமானவள்.

(கற்பனை)

---



# முகவரி தெரியாதவனுக்காக....!

-சேத்தூர் எஸ்.பகீரதி-

நாட்டுச் சூழ்நிலைகளின் காரணமாக தனது தொழில் நிமித்தம் அந்தக் கிராமத்துக்கு எண்பத்தொன்பதுகளில் வந்திருந்தவன்தான் ராதாகிருஷ்ணன். பிறரை வசீகரிக்கும் ஒரு அழகு அவனிடம் இருந்தது. அவனைப் பார்த்தவுடன் அவனுடன் எல்லோரும் பழகிவிடுவார்கள். அவன் தங்கியிருக்க அந்தக் கிராமத்தில் வசதியான வீடு ஒன்றும் கிடைத்தது. சிவராமன்-ஜெயா தம்பதியினர் ராதாகிருஷ்ணனுக்கு தனியறை ஒதுக்கிக் கொடுத்திருந்தார்கள். ராதாகிருஷ்ணனின் பண்பான நடத்தைகளைக் கொண்டு தமது மூத்த மகள் பவித்ராவுக்கு அவனை திருமணம் செய்துவைக்க இருவரும் நினைத்திருந்தார்கள்.

வெளிநாட்டுக்குச் சென்ற தனது தம்பியின் சாயல் ராதாகிருஷ்ணனில் இருப்பதால் ஜெயா ராதாகிருஷ்ணன் மீது நிறைய அன்பு வைத்து பல எதிர்பார்ப்புக்களுடனும் குறையேதுமின்றி நன்றாகக் கவனித்தாள். ராதாகிருஷ்ணனுக்கு எல்லாரையும் பிடித்திருந்தது. மூத்தவள் பவித்ரா. அவளுக்குப் பின் ஒரு தம்பியும் இரண்டு தங்கைகளும் உள்ளனர். ஓய்வு நேரங்களில் ராதாகிருஷ்ணன் பவித்ராவின் தம்பி தங்கைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பான். தமது குடும்பத்தில் ஒருவனாகி விட்ட ராதாகிருஷ்ணன் மீது எல்லோரும் நல்ல அன்பாயிருந்தார்கள்.

ஆனால்...பவித்ரா உருவத்தில் பதினாறு வயதுக்கன்னியாக இருந்தாலும் செயல்களில் குழந்தையாகவே இருந்தாள். எதையும் புதுமைக் கண்ணோட்டத்தில் நோக்குபவள். கலைஆர்வமுள்ள அவளுக்கென்று தனி உலகம். ராதாகிருஷ்ணன் அவளுக்குப் பெரிதாகத் தெரியவில்லை. தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பாள். ராதா கிருஷ்ணனுடன் ஒரு வார்த்தைகூட பேச மாட்டாள். பவித்ராவை ராதாகிருஷ்ணனுக்குப் பிடித்திருந்தது.

பவித்ரா படித்துக்கொண்டிருப்பதால் அவளது படிப்பு முடியட்டும் என சிவராமனும், ஜெயாவும் நினைத்திருந்தார்கள். இதனால் தங்கள் எண்ணத்தை அவர்கள் ராதாகிருஷ்ணனிடம் சொல்லவில்லை. அவனும் சற்று கூச்ச சுபாவம் உள்ளவனாகையாலோ என்னவோ அவர்களிடமும் ஒன்றும் கூறவில்லை. காலங்கள் யாருக்காகவும் காத்திருப்பதில்லைதானே. காலங்கள் செல்ல ராதாகிருஷ்ணன் வேறு ஊருக்கு மாற்றலாகிச் சென்றுவிட்டான். வேலை மாற்றலாகிய ஆரம்பத்தில் அடிக்கடி இங்கு வந்தவன் தற்போது அது குறைந்து விட்டது. ஆண்டுக்கு இரண்டு மூன்று தடவை வந்து நலம் விசாரித்துச் செல்வான்.

இதுவரை சிவராமனும் ஜெயாவும் ராதாகிருஷ்ணனிடம் முடிவு கேட்கவில்லை. ராதாகிருஷ்ணனை தமது மருமகனாகவே நினைத்திருந்தார்கள். தனது தாயின் மனதிலுள்ளதை அறிந்த பவித்ரா ஒன்றும் பேசவில்லை. அவளுக்கு பேசவும் தெரியவில்லை. ஏனெனில் பவித்ரா அம்மா பிள்ளை. அம்மா எது சென்னாலும் செய்வாள். அவளது இதயத்திலும் ராதாகிருஷ்ணனின் சுகமான நினைவுகளின் மெதுவான நெருடல்கள். இருப்பினும் அவள் ஒன்றுமே பேசாது மௌனமாகவே இருந்தாள்.

மலர்களைத் தேடி வண்டுகள் வருவது இயற்கைதானே. பவித்ராவின் அழகிலும் அமைதியிலும் மனதைப் பறிகொடுத்தவர்கள் பலர். பவித்ரா மெதுவாக நழுவிக்கொண்டாள். ஆனால் வர்த்தகப் பிரிவில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மனோ பவித்ராவைச் சுற்றி வந்தான். இரண்டு வருடங்களாக தொடர்ந்து மனோவும் பவித்ராவைச் சுற்றியே வருகிறான். ஒருநாள் மனோ பவித்ராவிடம் தன் மனதைத் திறந்து காட்டுகின்றான். தெளிந்த நீரோடையாய் ஓடிக்கொண்டிருக்கும் பவித்ராவின் இதயத்தில் மனோவால் சின்னச் சிதறல்.

இருப்பினும் அவள்"மனோ ஐ ஆம்வெரி சொறி. வீட்ல எனக்கு ஒருத்தர நிச்சயமாக்கிருக்காங்க. நீங்க என்னை மறந்துடுங்க...ஒழுங்கா படிங்க. என்னை மன்னிச்சிடுங்க." என விழிகளில் நீர் திரையிடக் கூறி விடைபெறுகிறாள். மனோ திகைத்து நின்றான். பவித்ராவால் தனது இதயத்தில் ஏற்பட்ட இடைவெளியை அவனால் நிரப்ப முடியவில்லை. இப்பொழுது அவன் சோகங்களை தனக்குள்ளே சுமந்து படிப்பையும் மறந்து வாழ்க்கையில் பிடிப்பே இன்றி தாடியுடன் தேவதாஸாக அலைந்துகொண்டிருக்கிறான்.

பவித்ராவுக்கு மனோவைப் பார்க்கப் பாவமாக இருந்தது. மனோவின் இந்த நிலைக்கு தானே காரணம் என நினைத்து சங்கடப்பட்டாள். மனோவின் பார்வையில் ஒளிந்தே பவித்ரா வாழ்கிறாள். மனோவுக்காக உள்ளுக்குள்ளே அழுதுகொண்டு முகவரி இல்லாதவனுக்காக பவித்ரா இன்னும் காத்துக்கொண்டு இருக்கிறாள். ■

---

குட்டிக்கதை

# மணமகளே... வா!

-குயில் ரசிகன்-



இன்னும் சில நிமிஷத் தாமதப்
பொழுதில்... என் சின்னக்குயில்
சில்மிதா மணவறைக்கு
வரப்போகிறாள்...
நான் கனவுகளுக்கப்பால் ஓர் காஷ்மீரின்
நிழலில்... மிதந்துகொண்டிருந்தேன்....
அவள் வந்து சேர்வதற்கிடையில்
அவளைப்பற்றிச் சொல்லி விடுகிறேன்.
யாரிந்த சில்மி?
முன்பொரு 'ரோசா'குத்திய முள்ளின்
வலிகாயுமுன்... என் பார்வைக்
கொடியில் தன் ஞாபக தாவணியைக்
காயப்போட்ட இந்தச் சில்மி யார்?
அவள் ஒரு உயர்திணைக்குயில்!
என்னை முதலில் சந்திக்கத்தவறிய என்
இரண்டாவது காதலி!
இன்று- 'வைகாசி பொறந்தாச்சு.'
முழுமதியாய் என் இதயவானில்
தவழ்ந்து
வந்தவள்.....இன்று-'திருமதியாய்.....
வாழ்வின் வெகுமதியாய்'
ஆகப்போகிறாள்...
ஆக...இன்று என் சில்மி மணமேடை
ஏறப்போகிறாள்.
அதோ! நான் ஆசைப்பட்ட
நாணச்சிட்டு....நடக்குந்தென்றல்...
மிதந்து வருகிறாள் ஓர் மௌன
தேவதையாய்...!
எனக்குள் எத்தனையோ நான்!
மேலதிகச் சந்தோஷங்களுடன் அவள்..!
இதோ...இப்பொழுது என் இதயக்
குயில் மணவறையில்
நாணித்தலைகுனிந்து....
நான் தலை குனியவே இல்லை.
சில அழகுகள் நெஞ்சை விட்டு
அகல்வதே இல்லை.
அவளை.... என்
சில்மியை...கடைக்கண்ணால்
ஆராய்ந்தேன்....
என் கம்ப விழிகளுக்குள் அவள்
சீதையாகத் தெரிந்தாள்.
என்னை- ஓரக்கண்ணாலே ஒருமுறை
பார்த்துச் சிரித்தாள்!
அதிகபட்ச அழகுகளோடு ஒரு பெண்
சிரிப்பது மணவறையில்
மாத்திரம்தானே!
அந்த நாணச் சிரிப்பில்....
ஆயிரமாயிரம் 'சில்மி'கள் என் தலைமீது
மலர்மாரி பொழிந்தார்கள்.
சில்மி! நான் கடைசியாகச் சந்தித்த
முதற்தர அழகியே!
தேன்குரலால்...எனையீர்த்த பூங்குயிலே!
நீ கொடுத்து வைத்தவள்!
இன்று கலியாணம்...ஆமாம்-உனக்கு
மாத்திரம்.
'எங்கிருந்தாலும் வாழ்க! உன் இதயம்
அமைதியில் வாழ்க!'
என் கன்னத்தில் இறங்கிய
கண்ணீருக்குள் நீ மங்கலானாய்...
உன் கழுத்தில் தாலி ஏறிய அந்த
நிமிஷங்களில்...
நீ என் வாழ்வின் தொங்கலானாய்..!
ஆமாம்; சில்மி; உன் கலியாணநாள்-
என் சந்தோஷங்கள்
காலியான நாள்...
உன் புதுமாப்பிள்ளை பரவாயில்லை!
ஆனாலும் எனக்குள் ஒரு ஏக்கம்!
உன்னைக் கூண்டில் அடைச்சிக்
கூவச்சொன்னால்..?
'கூண்டுக்குள்ளே என்னை விட்டுக் கூடி
நின்ன ஊரை விட்டுக் கூண்டுக்குள்ளே
போனதென்ன கோலக் குயிலே..?'
கவலைப்படாதே!
'எங்கே நீ சென்றாலும்
சுகமாகலாம்!-நான்
எப்போதும் நீ வாழ இசைபாடலாம்'!
உண்மைதான்; உறவாகிப் பிரிவாகும்
உலகை மாற்ற முடியாது.
இனி- ஊர்பாடும் தாலாட்டு உனக்கும்
எனக்கும் பொருந்தாது.
'கண்களை மூடிக்கட்டும் தாலி சதமா?
இந்தக் கல்யாணம் உனக்கே சம்மதமா?'
'எழை என் வாசலுக்கு வந்தது
பூங்குருவி.
கோழை என்றே இருந்தேன் போனது
கைநழுவி...' இதை யாரோடு சொல்ல..?
சில்மி! உன்னை நானும், என்னை நீயும்
ஏமாற்றிக்கொண்டோமா?
இல்லை....கண்ணே! காலம்தான் நம்மை
ஏமாற்றி விட்டது.
'முட்களில் நடந்த பாதங்களைத்தான்
பூக்கள் அர்ச்சிக்குமோ?....
காயம் பட்ட மனங்கள்தான் காலத்தை
வெல்லுமோ....?'
உன் ரசிகன் இங்கே! பூங்குயில் நீ
எங்கே? புகுந்த சோலை உனக்குப்
பொருத்தமோ?
உன்னோடு பாட கைத்தாளம்
போட...நானில்லை என்ற வருத்தமோ?
என் 'நெஞ்சோடு நெஞ்சமே' மனதில்-
சந்தோஷம் பஞ்சமே! 'கால தாமதங்கள்
கவலையின் வேர்கள்' என்பாய்,
உண்மைதான் சில்மி; இதயம் அனாதை
என்பதற்குக் காதல் சாட்சி சொல்கிறது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# இதயக் கதவுகள்

-மடவளை கலீல்-



பொன் அந்தி மாலைப்பொழுது...!

செவ்வானம் சிவக்க, இளம் தென்றல், இதமாய் வீசுகிறது.

இக்பால் தனது கைக்குட்டையை விரித்து, வீட்டுவாசற்படியில் அமர்கிறான்.

அவனுடைய உள்ளக்கடல், சிந்தனை அலைகளால், கொந்தளித்துக் கொண்டிருந்தது.

இக்பால் தனது பார்வையை தூரச் செலுத்துகிறான். யாரோ ஒரு இளம் சோடியினர், ஆனந்த வெள்ளத்தில் தத்தளித்துக்கொண்டு வருவது தெரிகிறது.

யார் இவர்கள்?

சற்று நெருங்கியதும், அவர்களை இனம் கண்டுகொள்கிறான்.

இக்பாலுடைய இதயம் சற்று வேகமாகத் துடிக்கிறது.

முன் வீட்டு பாத்திமா டீச்சரின் திருமணம், சென்ற கிழமைதான்.

அப்பாடா! எவ்வளவு குதூகலமாக இருக்கிறார்கள். சோடிப்பொருத்தத்தை பார்க்கும் போது இக்பாலுக்கு சற்று பொறாமைதான்.

பாத்திமா டீச்சரின் புருஷன் ஒரு ஆணழகன். நல்ல உயரம், அதற்கேற்ற பருமன், அரும்பு மீசை, அழகிய விழிகள்.

இவர்களைக் கண்டதும், இக்பாலின் உள்ளம் கவலைச் சுமைகளால் கனத்து விட்டது.

'என்னுடைய கையில் தவழவேண்டிய பச்சைக்கிளி இன்னொருவனின் கையில்' என்று இக்பாலின் உள்ளம் அழுதது.

'எல்லாம் என் தந்தை செய்த வேலை.' என்று அவனது உள்மனம் சொல்லியது.

சுமார் இரண்டு வருடத்திற்கு முன் நடந்த சம்பவத்தைப்பற்றி இக்பாலின் உள்ளம் அசைபோட ஆரம்பிக்கிறது.

•••

அன்று இக்பாலின் உள்ளம் குதூகலத்துடன் துள்ளி விளையாடியது.

அவனது சிந்தனைச் சிறகுகள், வருங்கால மனைவி பாத்திமா டீச்சரைச் சுற்றி வட்டமிட்டன.

இக்பாலின் திருமணநாள் நெருங்கி விட்டது. இன்னும் மூன்றே மூன்றுநாட்கள்.

'பாத்திமா டீச்சர் எனக்கு மனைவியாக அமைய நான் என்ன தவம் செய்தேனோ' என்று அவனது உள்ளம் சந்தோஷக்கடலில் மூழ்கியது.

பாத்திமா டீச்சர் ஒரு நல்ல குடும்பப் பெண். அழகான கண்கள், நேரிய மூக்கு, மாநிறம், பிடி இடை, சுருண்ட கேசங்கள். இவைகள் அனைத்தும் இக்பாலின் மனக்கண் முன் நிழலாடின.

அன்று இரவு இக்பாலின் இல்லம் குதூகலமாக இருந்தது. பக்கத்து வீட்டுப் பெண்கள் அரிசி புடைத்துக்கொண்டிருந்தார்கள். இன்னும் சிலர் வீட்டுக்குச் சாயம் பூசிக்கொண்டிருந்தார்கள்.

இக்பால் திருமண அழைப்பிதழ் வழங்குவதற்குரிய பெயர் பட்டியலை மிக சந்தோஷத்துடன் தயாரித்துக் கொண்டிருந்தான்.

அப்போது இக்பாலின் தாயார் "மகன் ஒனக்குத் தெரியுமா ஒன்ட வாப்பா நல்ல வேலைதான் செய்கின்றார்."

"உம்மா நீங்க என்ன சொல்லுறீங்க?"

"மகன் ஒன்ட கலியாணம் நடக்க மாட்டாதாம்."

என்று கண் கலங்கியவாறு கூற,

இக்பால் அதிர்ச்சி அடைந்தவனாக "உம்மா சொல்லுறத கொஞ்சம் விளக்கமா சொல்லுங்க." என்று ஆவேசமாய்க் கத்த...

"மகன் எல்லாம் ஒன்ட வாப்பா செய்யிற வேலை. அவருடைய சந்தேகக் குணத்தைப் பற்றி ஒனக்குத் தெரியும்தானே! சற்று முன் பாத்திமா டீச்சருடைய வாப்பாவிடம் போய், சீதனக் காணிய, கலியாணத்துக்கு முன் எழுதி ஒப்பினையையும் உடனே கையில் தரும்படி கேட்டிருக்கிறார்."

"பிறகு என்ன நடந்தது. கெதியா சொல்லுங்க உம்மா." என்று இக்பால் அவசரப்படுத்த...

"ஒன்ட வாப்பாட கதையைக் கேட்டதும், அவர்களுக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்ததாம். அவங்களைப்பற்றி கொஞ்சமும் நம்பிக்கையில்லாத மாதிரி ஒன்ட வாப்பா கதச்சிருக்கிறார். பிறகு அவங்க கலியாணத்துக்கு விருப்பம் இல்லையென்று, உறுதியாகக் கூறிவிட்டார்களாம்."

இதைக் கேட்டதும், இக்பாலின் உள்ளம், வெடித்து விடும்போல் இருந்தது. அவனது கண்கள் குளமாகின.

கைக்கு எட்டியது, வாய்க்கு எட்டாத நிலை.

'என்னுடைய தகப்பனின் சீதனத் தாகத்தால் வந்த விளைவுதான் இது' என்று அவனது உள்ளம் அழுதது.

•••

சிந்தனையில் மூழ்கிக்கொண்டிருந்த இக்பாலுக்கு தனது தாயாரின் அழைப்பு கேட்கிறது.

"மகன் தேத்தண்ணி குடிக்கவா."

சிந்தனையில் இருந்து விடுபட்ட இக்பால் "வாறேன் உம்மா" என்று வீட்டினுள் சென்று தேனீரை சுவைத்துக் கொண்டிருக்கிறான்.

'அன்புத்தாயின் கையால் தேனீர் பருகும் எனக்கு, இன்பத் தாரத்தின் கையால் பருகும் நாள் என்று வரும்' என்ற சிந்தனையோடு வாசற்கதவை சாத்துகிறான்.

அவன் வாசற்கதவை மட்டும் சாத்தவில்லை. தன் இதயக் கதவுகளையும் சாத்திவிட்டான்.

ஏனெனில் பாத்திமா டீச்சர் வேறொருவரின் மனைவி என்பது அவனது உள்ளத்தில் நிரந்தரமான ஒரு பூட்டைப் போட்டுவிட்டது போலும்...!

மாலை நேர இளம் தென்றல் மெதுவாய் வீசிக்கொண்டிருக்கிறது.

(யாவும் கற்பனை)

# மிஸ்டர் சப்சாரங்கன்

-துறையூர் எஸ்.கனகசபை-



அன்று மழை அடித்து நொறுக்குகிறது. பள்ளமென்றும், திட்டியென்றும் பாராது மழைநீர் முட்டிமோதிக்கொண்டு ஓடுகிறது. சுமாரான குளிரில் போர்வையை இழுத்து மூடிக்கொண்டு படுத்துக்கிடக்கிறார் சாரங்கன்.

இவர் எண்ணமெல்லாம் கொழும்பிலேயே வட்டமிடுகின்றன. "இன்றைக்கென்றா இந்த மழை பெய்யவேண்டும்? வெள்ளம் காரணமாகப் போக்குவரத்தும் தடையாம்....சீ...!" என்றபடி மறுபக்கம் திரும்பி படுத்துக்கொள்கிறார்.

இந்த வேளையிலா அவர் மனைவி அந்தப்பக்கம் வரவேண்டும்? அந்தச் 'சீ' என்ற வார்த்தை அவர் மனைவி காதில் பட்டுவிட்டது. இது போதுமே அவளுக்கு, "என்னைக் கண்டால் இப்ப இப்படித்தான் இருக்கும்," என்றவாறு அவள் முகத்தைத் திருப்பிக்கொள்ள; அவர், "இது என்ன புதினமடா கடவுளே! (சற்று ஆத்திரத்துடன்) நான் உனக்கா சொன்ன நான். இந்தச் சனியன் பிடிச்ச மழையைச் சொன்னநான்." என்றவாறு மீண்டும் புரண்டு படுத்துக் கொள்ளுகின்றார். இதற்கு மனைவியிடமிருந்து பதில் கிடைக்கவில்லை.

சாரங்கன் என்று சொன்னால் அந்த வட்டாரத்திலேயே யாருக்கும் இவரைத் தெரியாது. ஆனால் சப்சாரங்கன் என்று சொல்லிப் பாருங்களேன், இவரை ஒரு சிறுபிள்ளைகூட அடையாளம் காட்டிவிடும். இப்படி, ஊரெல்லாமென்ன, அந்த டிஸ்றிக்கே அறியுமளவுக்கு பிரபல்யமானவர் இவர்.

அழகாக ஐரோப்பிய பாணியில் உடையும், மிடுக்கான நடையும், கலகலப்பாக; இனிமையாக மற்றவரைக் கவரும் வண்ணம் அழகாகத் தமிழையும், சிங்களத்தையும், அவசியமேற்படும் போது ஓரளவு ஆங்கிலத்தையும் பேசுகின்ற வல்லமைதான் இவரை வாழவைக்கிறது எனலாம். இல்லாவிட்டால் இன்று, முப்பதுக்கும் மேற்பட்டவர்களிடம்; வெளிநாடு வெளிநாடு என்று சொல்லி இருபத்தைந்து முப்பது என்று கற்றையாக வாங்கிவைத்துக்கொண்டு மனுசன் கல்லுப்போல் இருப்பாரா? எது வந்தாலும் பேசிப்பேசியே சமாளித்துவிடுவார் இவர்.

கொழும்பில், இவருக்குத் தெரியாத வெளிநாட்டு முகவர் நிலையங்களே இல்லையெனலாம். இவர் ஏறி இறங்காத "லிக்கர்பார்"களும் அப்படியேதான். நிறையக் குடிப்பார், எல்லாம் ஓசியில். "இந்தா, இருபத்தைந்து விசாக்கள் வந்திருக்கின்றன. ஒரு கிழமையில் ஆட்களை அனுப்ப வேண்டும். ஏஜன்சி ஏபிரகாம் தந்தி கொடுத்திருக்கிறான்." என்பார். புழுகும் போது உண்மைபோலப் புழுகி விடுவதில் இவருக்கு நிகர் இவரேதான். தனது வலையில் அகப்படுபவர்களை ஒரே அமத்தலாக அமுக்கி விடுவார்.

இப்படி இவரின் பேச்சில் மயங்கி, பணத்தையும் கொடுத்துப் பாஸ்போட்டையும் கொடுத்துவிட்டு எப்போது வெளியில் போகலாம் என்று ஏங்கிக்கொண்டிருப்பவர்கள் ஏராளம். தற்செயலாக இவர்களைச் சந்திக்கும் போது, "தம்பி, றெடியாக இருக்கவேண்டும். அனேகமாக இந்தக் கிழமை ரெலிகிறாம் வந்தாலும் வரும்." என்று ஐஸ்சைக் கரைத்துக்கொட்டிவிடுவார். கேட்பவருக்கும் மனத்திருப்திதான். வேறு என்ன செய்வது?

பணம் இவர் கையிலே புரளும், பரிதவிப்பு பணம் கொடுத்தவர்கள் இடையிலே திரளும். அலைச்சல்மேல் அலைச்சல்தான். இந்தப் பயங்கரமான காலகட்டத்தில் 'மினிஸ்ரர்' மாரைக் கூடச் சந்தித்துவிடலாம் இலகுவாக. ஆனால், மிஸ்டர் சப்சாரங்கன் அவர்களைச் சந்திப்பதென்றால் அது முயற்கொம்புதான். அப்படி ஒரு 'பிசி' இவருக்கு. எல்லாம் பணநாதன் படுத்தும் பாடுதான்.

இவர் எப்போதும் வீட்டில் இருக்க மாட்டார். அப்படித்தான் வீட்டில் இருந்தாலும், "அவர் இல்லையே தம்பி, கொழும்புக்குப் போனவர்." என்ற பதில் இவர் மனைவியிடமிருந்து வரும். வீட்டில், மனைவிக்கும் இவருக்குமிடையில் என்னதான் பிரச்சனைகள் இருந்தாலும்; தற்செயலாகத்தேடி வந்து இவரைக் கேட்டால், அந்த நேரத்தில் சாதுரியமாகப் பதில் சொல்லி சமாளித்து விடுவார் இவர் மனைவி.

இவரது கணக்குப்படி, யாராவது ஃபொறின் போக என்று பணம் கொடுத்தால், குறைந்தது ஒரு வருடம் முடியவேண்டும். அதன் பிறகுதான் அந்த நபரைப் பற்றி நினைத்துப்பார்ப்பார். இத்திட்டத்தின் படியே இவர் செயல்பட்டு வருகின்றார். ஏமாந்தவன் அங்கே யாருக்கோ வட்டி கொடுக்க, இவருக்கு எங்கிருந்தோ வட்டி வந்து சேரும் தாற்பரியம் யாருக்குப் புரியப் போகின்றது?

இப்படி ஏமாந்த எத்தனையோ பேர் ஒரு வருடத்திற்குப் பிறகும் விசயம் சரிவராமல், திரும்பவும் பணத்தை வாங்கிக் கொண்டு, வெளிநாட்டுப் பயணத்திற்கே முற்றுப்புள்ளி வைத்து முழுக்கடன் கடலில் அமிழ்ந்து போயிருக்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்களையும் இவர் சமாளிக்கும் பாணிதான் மகத்தானது. "தம்பி, நான் என்ன செய்யிறது? இன்னுமொருமாதம் உன்னால பொறுக்க முடியாமல் போச்சுதே! கொஞ்சம் பொறுத்திருந்தால் நீர் இப்ப கனடாவில் இருப்பீர். எல்லாம் தலையெழுத்தப்பா. நீர் விரும்பாத போது என்னால் என்ன செய்ய முடியும்? ஆனால், பாரு தம்பி, என்னில் எந்தக் குறையும் எண்ணக்கூடாது. நான் கடவுளுக்கு மாறாக நடக்கிறவனில்லை." தன்னை ஒரு சத்தியவானாகக் காட்டிக்கொள்வார்.

நம்பிப் பணம் கொடுத்தவர்களைத் தனது திருகுதாளங்களால் நடைப்பிணங்கள் ஆக்கிவிடும் பாரிய கலையின் நாயகன் தான் மிஸ்டர் சப்சாரங்கன். இவருக்கு ஒரேயடியாகப் பெரியதொரு ஆசை வந்துவிட்டது. கொழும்பில் பெரியதொரு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டார். தனது நண்பர்கள் மூலம், தான் 'ஃபொறினுக்கு' ஆட்களை அனுப்பும் விசயத்தை கொழும்பிலுள்ள எல்லா 'லொட்சு'களிலும் பரவலாக அறியும்படி செய்துவிட்டார். இவர் நினைத்ததைவிடவும் தாராளமாகக் கூட்டம் கூடிவிட்டது.

ஏற்கனவே, ஒரு நல்ல ஏஜன்சி மூலம் இரண்டு பேரை இவர் சுவிசுக்கு அனுப்பி விட்டார். இந்தக்கதை எங்கும் பரவிவிட்டது. இது போதாதா இவரின் மவுசி உயர்வதற்கு? பல இலட்சம் ரூபாய்கள் இவர் கையில் புரண்டன.

கொழும்பில் இவரை யாராவது சந்திக்க வந்தால், தனது வீட்டின் வாசலில் பொருத்தப்பட்டுள்ள ரெலிபோனிலேயே பதில் சொல்லுவார். "உங்களால பெரிய தொல்லையப்பா! சுவிஸ் போறதெண்டால் சும்மா வேலையே? இரண்டொரு கிழமையில சரிவரும், போயிற்றுப் பிறகு வாரும்" என்று எரிந்து விழாத குறையாகச் சொல்லுவார்.

தேடி வந்தவர், "இல்லையண்ணன், நம்மட பாலனுக்குப் ஃபிளைட்டாம் என்று கேள்விப்பட்டனான். அதுதான்..." என்று வார்த்தையை முடிக்குமுன்பே,

"ஓமோம், பாலனுக்கு நாளைக்குப் ஃபிளைட்தான்... அதுக்கு இப்ப என்ன செய்யிறது? இஞ்ச பாரு தம்பி, எனக்கு இப்ப நேரமில்ல. இல்லையெண்டால் கதைச்சிக்கொண்டிருக்கலாம் தான், நீர் பிறகு வாரும்...." என்று தொடர்பைத் துண்டித்துவிடுவார். வந்தவரும், "எப்படியும் அடுத்த கிழமையளவில் சரிவரும்." என்ற நம்பிக்கையோடு திரும்பி விடுவார்.

இதனிடையில் "ஏன் நாங்கள் சுவிசுக்குப் போகக்கூடாது." என்ற இனிய எண்ணம் மிஸ்டர் சப்சாரங்கனுக்குத் தலைதூக்கத் தொடங்கிவிட்டது.

சில வாரங்களில், ஏற்கனவே போட்டிருந்த திட்டத்தின்படி எல்லா ஏற்பாடுகளையும் செய்துமுடித்து விட்டார். கையில் இருந்த பல இலட்சம் ரூபாய்களையும் டொலராக மாற்றிக்கொண்டார். குறித்த தினத்தில் தனது மனைவி, மக்கள் சகிதம் எயார்போட்டுக்கு வந்துவிட்டார்.

இவரிடம் பணம் கொடுத்து இதுவரை பயணம் சரிவராமல் ஏமாந்தவர்களில் கந்தசாமி வைத்தியரின் மகனும் ஒருவர். இவரின் மச்சான்-அதாவது கந்தசாமி வைத்தியரின் மருமகன் எயார்போட்டில் ஓர் உயர் பதவியில் இருப்பதும், அவருக்கு மிஸ்டர் சப்சாரங்கனைத் தெரியும் என்ற தாற்பரியமும் மிஸ்டர் சப்சாரங்கனுக்குத் தெரியாது.

உடனே, கந்தசாமி வைத்தியரின் மருமகன் செயலில் ஈடுபட்டார். பொலீசுக்குத் தகவல் பறந்தது. பிறகென்ன? பத்திரிகைகளில் செய்தியடிபடுமளவுக்கு உயர்ந்து விட்டார் மிஸ்டர் சப்சாரங்கன்.

(யாவும் கற்பனை)



# உன்னைச் சுற்றும் ஆவி

-ஷர்மிளா இஸ்மாயில்-

"விஷ்..விஷ்.." அமானுஷ்ய சப்தத்துடன் அசுரத்தனமாய் வீசிக் கொண்டிருந்த பெருங் காற்றுடன் வானமே கிழிந்து விட்டாற்போலான தோற்றம் கற்பிக்கும் கடும் மழை கூட்டுச் சேர்ந்து வெளியுலகை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது.

உடுத்தியிருந்த நைட்டிக்கு மேலாக ஸ்வெட்டரை போர்த்துக்கொண்டு கட்டிலில் சாய்ந்தாள் அவள். கையில் ஓர்ஆங்கில நாவல். அதன் அட்டையில் சிதறுண்ட, இரத்தம் வழியும் ஒரு பெண்ணுடல். ஒரு கற்பாறையின் கீழாய் அவளை விழுத்திவிட்டு மேலிருந்து பயங்கரமாய் இளிக்கும் கொடூர மனிதனின் படம். பகலில் பாதிவரை படித்து, மீதியை இரவுக்கு ஒதுக்கி, மீண்டும் படிக்கிறாள் அவள்.

அது அழகான, பெரிய அம்சமான வீடு. பொலிஷ் பண்ணிய தரையில் வடிவமைக்கப் பட்ட பெரிய, பெறுமதி தளபாடங்கள். பெரிதாய்த் தொங்கும் அலங்கார விளக்குகள் அத்தனை விதமான சொகுசு மின்சாரப் பொருட்கள்...நிறைய அறைகள். அவற்றின் வாயிலில் தொங்கும் வண்ணத் திரைச் சீலைகள்...எல்லாமே அமைதியாய்க் கிடந்தன.

அங்கு அவளைத் தவிர யாருமில்லை. எங்கோ தூரப் பயணம் செய்த பெற்றவர்களின் வாகனம் இடையில் கோளாறு பண்ணிவிட்டதால் "வரத் தாமதமாகும். சமாளித்துக் கொள்" என அரை மணிமுன்னதாய் டெலிபோன் கோல் வந்திருந்தது. வேலைக்கு வரும் நடுத்தர வயதுப் பெண்ணும் மாலை ஆறுமணிக்கு ஐந்து நிமிடம் இருக்கையிலேயே கிளம்பிவிட்டாள். அவள் கணவனுக்கு டைபொயிட்டு ஜுரமாம். சீக்கிரமாய் முடித்துக் கொண்டு போகும் அவசரம். இவள் பெற்றோர் வரத் தாமதப்படும் என்ற செய்தியைக் கேட்டும் துணைக்கு நிற்கும் மனமில்லை. போதாக் குறைக்கு இவள் வேறு "பயமில்லை நீ போ" என்று வழியனுப்பிவிட்டாள்.

அப்போது தூறலாய் விழுந்த மழை இப்போது கடும் சப்தங்களுடன் விடாது பெய்துகொண்டிருந்தது. நாவல் வரிகளில் சில பயங்கரத்தின் உச்சக் கட்டத்தை தொட்டன. ஒரே இரத்தம், கத்தி, பலி,... சட்டென மூடி வைத்து எழுந்து பின் ஃப்ரிஜ்ஜில் இருந்து பட்டர், ஜேம் எடுத்து பாணுக்குத் தடவி சாப்பிட்டாள். டி.வியைத் திருகினாள். அழுது வடிந்தது. சேனலை மாற்றி பட்டனை அழுத்தி ஓர் ஆங்கில படம்-விவரணம். ஒவ்வொரு பட்டனை அழுத்தி சேனல்களை மாற்றி மாற்றி எதுவும் திருப்திப் படாமல் மீண்டும் அமர்த்தலாய் நடந்து கட்டிலில் சரிந்தாள். நேரம் ஓடிக்கொண்டிருந்தது. "சே..... என்ன இவ்வளவு லேட் ஆகிறார்கள்?" வாய் விட்டுக்கூறி கடிகாரம் பார்க்க அது 11.00 என முள் காட்டியது.

வெளியே மழை சடசடவென கண்ணாடி சன்னல்களை மோதித் தள்ளியது. எங்கோ சடாரென மரக்கிளையொன்று முறியும் சத்தம். தூக்கம் பிடிக்க மறுத்தது. மறுபடியும் நாவலை கையெடுக்கவும் கோலிங்பெல் இனிமையாய் ஒலித்தடங்கவும் சரியாகவிருந்தது. 'தட்' என போர்வையை விலக்கி, குதித்து நடந்தாள். "டெடி" என்றவாறு கதவைத் திறக்க 'ஹோ' வென்ற மழைக்காற்று வந்து முகத்தில் அறைந்தது. யாருமில்லை. வாசலில் முன் கேட் பூட்டியபடியே! வாகனமெதுவுமில்லை "ஓ...நோ..." மெல்லியதாய் பயம் நெஞ்சுக்குள் ஊடுருவ கதவை அவசரமாய்ச் சாத்தி மூடுகிறாள். "மனப்பிரேமை." தனக்குத்தானே ஆறுதல். ஆனாலும் ஏதோவொன்று எங்கோ மனதினுள் அச்சமாய் சில்லிட்டது. பாதங்களில் ஏற்பட்ட குளிர் உடலெங்கும் விரைவாய் படர்ந்தது.

இறை வசனங்ளைச் செபித்தவளாய் மீண்டும் அறைக்குத் திரும்பி கட்டிலில் வலது காலை வைத்தேறவும் 'கிளிக்' என்று நொடியில் மின்சாரம் ஓய்ந்து போகவும் சரியாகவிருந்தது. சுவாசக் கூட்டினுள் யாரோ தீ வைத்தாற் போல் ஓர் எரிவு. பயம். கால்கள் பின்னப் பின்ன மெதுவாய் தட்டுத்தடுமாறி வழமையாய் அம்மா மெழுகு திரிகளை வைக்கும் இடத்தைத் தேடுகிறாள். "அப்பாடா.." நிம்மதி மூச்சுடன் கையில் தட்டுப்பட்ட டோர்ச்சைத் தடவிக்கொடுத்து உயிர்ப்பித்தாள். "டிங் டாங்." 12 முறை டிங்டாங் அடித்து பழமையான அந்த மணிக்கூடு நேரம் காட்ட இவள் உடலெங்கும் ஒரு விறைப்பு. ஏதோ...எங்கோ...அமானுஷ்யம் உணர்ந்தாள். பயத்தில் நெஞ்சு வெடித்து துண்டுகளாய் வாய் க்கும் போன்ற வேதனை. நின்றுகொண்டேயிருந்தாள். அதிர்ந்துபோய் "தட்" கனமான எதுவோ விழுந்த சத்தம் வலுவற்றுப் போன விரல்களால் டோர்ச்சை இறுக்கித் திரும்பியவளின் முகம் அதிர்ந்தது. "ஆ.."

"அம்மா... ஆ....ஆ.." அதுவரை பத்திரமாய்க் காலைத் தூக்கி குஷனில் போட்டு, சாய்ந்து கொண்டு அந்த பேய்ப்படத்தை வீடியோவில் பார்த்து சில்லிட்டுப் போய்க் கொண்டிருந்த ஆஷா கத்தினாள். காரணம் அவளது அண்ணா- அப்போதுதான் வீட்டுக்குள் வந்தவன் வீடியோவை நிறுத்தி தான் கையோடு கொண்டு வந்திருந்த "தேவர் மகன்" கெஸட்டை திணித்துக்கொண்டிருந்தான். "ஏன்டி, இப்படி காட்டுக் கத்தல்?" என்றவாறே அம்மா சமயலறையிலிருந்து வர, ஆஷா அவளிடம் முறையிட, சர்வ அலட்சியமாய் அவன் படம் பார்க்கத் தொடங்கினான்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# பொய்க் கோபம் பெரும் இன்பம்

"சூரியா ஏனடி நகைக்கிறாய்? இன்று அந்திப்பொழுதிலே, தென்றல் தவழ்ந்திடும் நந்தவனத்திலே கள்வன் வந்து உன்னை அள்ளியெடுத்தானோ? கள்ளி நீ அதை எண்ணித்தான் நகைக்கிறாயோ?"

தோழி பூச்சரத்தை கைகளால் தொடுத்தபடி சூரியாவை நோக்கி வினாச்சரம் வீசினாள்.

வெல்லக் கன்னம் வெட்கத்தில் சிவக்க, வேல் வீசும் விழிகளிலும் வெட்கம் நிறைய சூரியா தோழியின் தலையில் செல்லமாய் குட்டினாள்.

"வலிக்கிறதடி சூரியா. சரி. சரி புரிகிறது."

தோழி இதழ்கள் மீது விஷமப் புன்னகை இருத்தினாள்.

"என்னடி புரிகிறது?"

"அங்கே வாங்கியதை இங்கே தருகிறாய். என்னடி குறும்பு செய்தாய்? குறும்பு தாங்காமல்தான் உன்னவர் குட்டினாரோ?"

"அடி போடி."

கீழ்வானச் சிவப்பு பவழ முகத்தில் பள்ளிகொள்ள, தோழியின் இடையிலே கிள்ளினாள். தோழி மேலும் சீண்டினாள்.

"அய்யய்யோ... இந்தளவுக்கு வந்துவிட்டாரா. துணிச்சல்காரர்தான். இந்தளவோடு நிறுத்தினாரோ அல்லது இதற்கு மேலும் துணிச்சல் தொடர்ந்ததோ? சொல்லடி என் தோகை மயிலே!"

"என்னடி சொல்லுகிறாய்?"

குழந்தைபோல் விழிகள் விரித்து சூரியா வினா எறிந்தாள்.

"கற்றுத்தந்ததை என்னிடம் காட்டிக் கொண்டிருக்கிறாயே, அதைச் சொன்னேன். காதல் என்னும் கடலில் நீ கற்றது கடலளவு. என்னிடம் காட்டுவது கைமண் அளவு."

"என்னடி முதுமொழியை முறித்துப் போட்டுவிட்டு புதுமொழி சொல்லுகிறாய்?"

"கற்கும் விசயத்தில் காதலர்கள் எப்போதுமே வேகம்தான். ஒருவருக் கொருவர் இன்பமாய் உதவுவதால் தினம் ஒரு அனுபவம் அறிமுகமாகிறது. கற்பதும், கற்றுக்கொடுப்பதும் சந்திக்கும் போதெல்லாம் பிந்திக்கொள்ளாமல் நடக்கும் விசயங்கள்தானே!"

தோழி சொல்லிவிட்டு நகைத்தாள். சூரியா போலியாய் கோபம் வரவழைத்து முகத்தில் அணிந்து,

"நீ முற்றும் அறிந்த முனிவியாக்கும்."

"நான் முற்றும் அறிந்தவளல்ல. ஆனால் முற்றும் என்று புள்ளியிடப்பட முடியாத காதல் சரசங்கள் பற்றி சற்றும் அறியாதவளுமல்ல."

"இருக்கும். இருக்கும்."

"என்ன இருக்கும்?"

"காதல் என்னும் கடலின் கரையில் நின்று வேடிக்கை பார்க்கின்றவளல்லவே நீ. முத்துக்குளிக்க கடலில் இறங்கியவள் நீ. அதனால் உன் காதலர் கற்றுத் தந்திருக்கலாம்."



இப்போது தோழியின் முகம் செவ்வானமாகியது. வெட்கம் வந்து அவள் விழிகளில் விழா நடத்தியது.

காதலில் நினைவுகள் சுகம். நினைப்பே இனிக்கும். மனதை மாரிகால மழை கண்ட பூமிபோல் நனைக்கும். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகலாம். ஆனால் நெஞ்சுக்குள் நிறைந்து அளவு கடந்து பொங்கும் நேசம் நஞ்சாகாது.

இணைந்திருக்கும் போதுகூட இல்லாத அளவு பிரிந்திருக்கும்போது நேசம் பொங்கும் வியப்பே காதலின் சக்தி. அதுவே காதலை வாழவைக்கிறது.

தன்னலம் அற்ற அன்பு சத்தியமான காதலின் உந்து சக்தி. அந்த சக்தி தோற்பது கிடையாது. நிர்ப்பந்தங்கள் அதனை முறிப்பது முடியாது.

நாம் வாழவேண்டும். நான் வாழ முடியாவிட்டாலும் நீ வாழவேண்டும். அதுதான் சத்தியமான காதலின் தன்னலம் துறந்த அன்பு. அதற்கு அழிவு கிடையாது. முறிவு கிடையாது.

தோழி சூழல் மறந்து நினைவுகளில் தன்னை தொலைத்துவிட, சூரியா அவள் காதுக்கருகே சென்று,

"எங்கேயடி போய்விட்டாய்? என் பிரிய தோழியே! எல்லையற்ற காதல் வானத்தில் நினைவுகள் என்னும் சிறகுகள் அணிந்து பறந்து நீ சென்றால் எனக்கு பேச்சுத்துணை யாரடி? இனிய தோழி கனவுகளுக்கு விடை கொடுத்துவிட்டு தரையில் இறங்காயோ?"

சூரியாவின் கேலி, தோழியை நினைவுகளில் இருந்து மீட்டெடுத்தது.

"என்னடி அப்படி பலமான யோசனை?"

"ஒன்றுமில்லையடி."

"ஒன்றுமில்லையென்றாலே ஏதோ ஒன்று இருக்கிறது என்றுதான் அர்த்தமாம். சரி. சொல்ல விரும்பவில்லை அந்த கரும்புச் சுவையான நினைவை என்றால் விட்டுவிடு. நான் ஒன்றும் வற்புறுத்தமாட்டேன்."

சூரியா முகம் திருப்பிக்கொண்டாள். உடனே தோழி கேட்டாள்.

"நீ மட்டும் சொன்னாயாக்கும்."

"ஏன்? சொல்லவில்லையாக்கும்."

"இங்கே வந்தவுடன் நகைத்தாய் அல்லவா? அதன் காரணம் கேட்டேன், மழுப்பிவிட்டாயே நீ."

"ஓ. அதுவா?"

"ஆ...அதுதான்."

நகைத்த காரணம் சொன்னாள் சூரியா.

■

தனசேகரன் சூரியாவின் காது மடல்களில் மெல்லக் கடித்தான். சூரியா கூச்சத்தில் நெளிந்து,

"போதும். பேசாமல் இருங்கள்."

"அறுசுவை விருந்தாய் அருகில் இருந்துகொண்டு விரதம் இருக்கச் சொல்கிறாயே. விரோதி கூட இப்படி ஒரு தண்டனை தரமாட்டான்."

"விருந்தும்-மருந்தும் அளவோடுதான் இருக்க வேண்டும்."

சூரியா விழிகள் சுருக்கி இதழ்கள் விரித்து புன்னகைக்க தனசேகரன் தன்னைத் தொலைத்தான்.

சூரியாவின் ஆப்பிள் கன்னங்கள் இரண்டையும் தன் கரங்களில் ஏந்தி விரல்களால் வருட சூரியா வண்ணத்துப் பூச்சியாய் படபடத்த இமைகள் மூடி உள்ளே இரசித்தாள். தனசேகரன் மூடிய அவள் இமைகளை தன் உதடுகளால் தொட்டான். மலரில் கூட இல்லாத மென்மை அவள் மலர்விழிகளில் உண்டென்று உணர்ந்தான்.

"இதுதான் உங்கள் பக்கத்தில் நான் இருப்பதில்லை."

மனது அவன் செயலை விரும்ப உதடு விருப்பமில்லாதது போல பொய் சொன்னது.

"நான் செல்லப் போகிறேன்."

"என்ன அவசரம்?"

"இங்கே இன்னும் நானிருந்தால் பாதிச் சூரியாவாகத்தான் வீடு போய்ச் சேர வேண்டி இருக்கும்."

"உதய சூரியன் போல் அப்போதும் நீ அழகாகத்தான் இருப்பாய்."

"இனி நான் இங்கு வரமாட்டேன்."

தனசேகரனின் முகம் சூரியன் மறைந்த வானம்போல் மாறியது.

"பொய்தானே?"

"இல்லை மெய்."

"ஏன் வரமாட்டாய்?"

"அப்படித்தான்."

சூரியாவின் கரம் தொட்டு அழுத்தி "காரணத்தைச் சொல்."

"உங்கள் தொல்லை தாங்கமுடிய வில்லை. அப்பப்பா... போதும்."

தோள்களைக் குலுக்கி தரைவிட்டு எழுந்தாள்.

தனசேகரன் தவிப்பாய் - தளர்வாய் பார்ப்பது புரிந்து, நாளைவரை தவிக்கட்டும், என்று மனதுக்குள் நினைத்தாள். புள்ளிமான் போல் துள்ளி ஓடினாள்.

■

"இதற்காகவா நகைத்தாய்?"

தோழி கேட்டாள்.

"பாவமடி அவர். நான் சொன்னதை உண்மை என்று நினைத்து எப்படி முகம் மாறிப் போனர் தெரியுமோ?"

"ஏனடி அப்படிச் செய்தாய்?"

"இன்பம் வேண்டாமா அதற்குத் தானடி."

"இதில் என்னடி இன்பம்?"

"திருவள்ளுவரே சொல்லியிருக் கிறாரடி. அன்புள்ள காதலரோடு ஊடல் கொள்வதைக் காட்டிலும் வேறு இன்பம் எதுவும் சிறந்தது அல்லவாம். சரி உன் கதை என்ன?"

சூரியா கேட்க, தோழி புன்னகையோடு சொன்னாள்.

"இங்கேயும் அதே கதைதான். எனக்கும் வள்ளுவரின் குறள் தெரியும்."

"எங்கே அந்தக் குறளை சொல்லடி பார்க்கலாம்."

தோழி தெளிவாய் குறள் சொன்னாள்.

**"புலத்தலின் புத்தேள் நாடு உண்டோ நிலத்தொடு**
**நீர் இயைந்து அன்னார் அகத்து."**

**அதிகாரம் - 133**
**குறள் - 1324**

## குறுக்கெழுத்துப் போட்டி இல—36

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | ■ | 2 |
| | 3 | ■ | 4 | | 5 | |
| | | | 6 | ■ | | |
| 7 | | 8 | | ■ | | |
| | | | | ■ | | |
| ■ | | | ■ | 9 | ■ | ■ |
| 10 | | ■ | 11 | | | |

**இடமிருந்து வலம்**

1. நீராவி இயந்திரத்திற்குச் சக்தி கொடுக்கும்.
4. நிஜமுகம் மறைக்கும்.
7. இதை உண்மையா பொய்யா என்று ஆராய்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.
10. மகாபாரதத்தில் கிருஷ்ணரால் மேற்கொள்ளப்பட்டது.
11. சமீபத்திலேதான் மறைந்தார்.

**மேலிருந்து கீழ்**

1. அகதிகளுக்காக சில வெளிநாட்டு நிறுவனங்கள் இதனைச் செய்வதுண்டு.
2. பாயும் குதிரையைக் கட்டுக்குள் வைத்திருக்க இது உதவும்.
3. மணமுறிவைக் குறிக்கும்.
5. இதிலே புல்லாங்குழலும் ஆக்கலாம்.
6. வண்டியிலே இருக்கிறது.
8. சிலருக்கு இதுதான் பொழுது போக்கு.
9. குறுக்குப் புத்தி உள்ளவர்களை இப்படியும் அழைக்கலாம்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 12.02.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-36
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-05.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-34க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 நு | ள | ம் | பு | ■ | 2 நி | சி |
| ரை | ■ | 3 ஆ | சி | ரி | ய | ர் |
| யீ | 4 ப | ச் | சோ | ந் | தி | ■ |
| 5 ர | க | சி | ய | ம் | ■ | 6 க |
| ல் | ல் | ர | ■ | ■ | 7 மெ | ட் |
| ■ | ■ | 8 ம | ண் | வெ | ட் | டி |
| 9 த | வ | ம் | ■ | 10 பி | டி | ல் |

குறுக்கெழுத்துப் போட்டி இல.34இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. பா. எட்வேட் புத்தளம்.
2. எஸ். தர்ஷினி புத்தளம்.
3. ஏ.கே. காமிலா கல்முனை.
4. வி. நிரோஷா மட்டக்களப்பு.
5. வை.எஸ். சபீனா அக்குறணை.
6. என். பௌசிக் கண்டி.
7. ஆர். இந்திரகுமார் கொழும்பு-5.
8. ஏ. ரம்சாட் மாத்தளை.
9. கே. ராதா கொழும்பு-11.
10. ஏ.எம்.எம். அமானுல்லா காத்தான்குடி-06.

இந்த அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

19ம் பக்க மகாபாரதம் தொடர்ச்சி

**நந்த:** கண்ணன் கோபித்துவிட்டான். சரி....இனி மேல் மதுராபுரிக்கு வெண்ணை அனுப்புவதில்லை.

-காட்சி மாற்றம்-

மதுராபுரி – கம்சனின் அரண்மனை. கம்சன் ஆத்திரத்துடன் காணப்படுகிறான்.

**அதிகாரி:** நந்தகோன் கிராமத்திலிருந்து இன்றும் பாலோ வெண்ணையோ வரவில்லை மகாராஜா.

**கம்ச:** என்ன இன்றுமா...? (ஆவேசத்துடன்) மாமந்திரி!

**மந்திரி:** மகாராஜா...!

**கம்ச:** சேனாதிபதிக்கு உடன் கட்டளையிடும். நந்தகோன் கிராமத்துக்கு படைகளை அனுப்பி அங்குள்ள பசுக்கள் அனைத்தையும் இங்கு கொண்டுவரச் சொல்...!

**மந்திரி:** தங்கள் சித்தம் பிரபு!

-காட்சி மாற்றம்-

- படை புறப்படுகிறது.
- யமுனா நதியை படை கடக்கிறது.
- வனத்தினூடே படை செல்கிறது.
- மேய்ச்சல் நிலத்தில் காணப்படும் கால்நடைகளையும் இடையர்களையும் படையினர் சூழ்கின்றனர்.
- இடையர்களை அடித்துத் துன்புறுத்தி பசுக்களை விரட்டுகின்றனர்.
- பதட்ட நிலை. மாடுகள் ஒருபுறம். இடையர்கள் மறுபுறம் தத்தளிக்கும் நிலை.

-காட்சி மாற்றம்-

நந்தகோபன் இல்லம்–உட்புறம் அமைதியிழந்த நிலையில் சுகதேவன் காணப்படுகின்றார்.

**நந்த:** சுகதேவா! என்ன நடந்தது?

**சுகதே:** மதுராவுக்கு வெண்ணை அனுப்பாதமையினால் ஏற்பட்டுள்ள நிலமையை நீங்களே பாருங்கள். ஒரு சிறு பிள்ளையின் சொல்லைக் கேட்டமையினால் ஏற்பட்டுள்ள சங்கடம்...!

**இரண்டாமவர்:** பசுக்களின்றி எங்களுக்கு வாழ்க்கை ஏது...?

**கண்ண:** (வந்துகொண்டே) உங்கள் பசுக்களை நீங்கள் ஏன் பாதுகாக்கவில்லை...?

**ஒருவர்:** கண்ணா! கம்சனின் பட்டாளத்தை நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. நாங்கள் இடையர்கள். எங்களால் என்ன செய்யமுடியும்?

**நந்த:** அவர் கூறுவது உண்மைதான் கண்ணா! ஆயுதப் படையுடன் மோத எங்களால் முடியுமா?

**ஒருவர்:** ஆயுதப்படையை எதிர்த்து வெறும் குச்சிகளுடனும் கோல்களுடனும் போரிட முடியுமா?

**கண்ண:** கோலின் ஆற்றல் பற்றி உங்களுக்குத் தெரியாது. என்னுடன் வாருங்கள்.

கண்ணனுடன் இடையர்கள் செல்கின்றனர்.

-காட்சி மாற்றம்-

நந்தவனத்தில் கிருஷ்ணன் புல்லாங்குழலில் இன்னிசை கீதம் பொழிகிறான். தெய்வீக இசை எங்கும் பரவுகிறது. இசைகேட்ட பசுக்களும் கன்றுகளும் கட்டப்பட்டிருந்த கயிறுகளை அறுத்துக்கொண்டு கிருஷ்ணனிடம் வந்து சேருகின்றன.

-காட்சி மாற்றம்-

கம்சனின் அரண்மனை– கடும் கோபமும் அச்சமும் கலந்த நிலையில் கம்சன் முன்னும் பின்னும் நடக்கிறான்.

**கம்ச:** சாதாரண பசுக்களைக் கொண்டு வர முடியாத படையினை வைத்துக்கொண்டு என்னால் என்னதான் செய்ய முடியும்? அவர்கள் அத்தனைபேருக்கும் மரண தண்டனைதான் கொடுக்க வேண்டும்.

**வீரர்கள்:** கருணை காட்டுங்கள் பிரபு!

**கம்ச:** கருணையா?...அந்த வார்த்தைக்கு அர்த்தமே தெரியாது எனக்கு!

-காட்சி மாற்றம்-

கம்சனின் அரண்மனை– அமைதியின்றி கம்சன் முன்னும் பின்னும் நடக்கிறான். நின்று தன் கைகளை இரு தடவைகள் தட்டுகிறான். இரு பூதங்கள் தோன்றுகின்றன.

**கம்ச:** தேனுகாசூரா...! அறிஷ்டாசூரா..!

**பூதங்கள்:** தங்கள் கட்டளைக்காகக் காத்திருக்கிறோம் பிரபு!

**கம்ச:** நந்தகோன் கிராமத்தில் எனக்கு எதிராக ஒரு கிளர்ச்சி நடக்கிறது. அந்தக் கிராமத்தை நிர்மூலமாக்கிவிடுங்கள். அழித்தொழித்துவிடுங்கள்.

**பூதங்கள்:** தங்கள் கட்டளைப்படி பிரபு...!

பூதங்கள் அகன்றதும் கம்சன் பலத்த சப்தமிட்டுச் சிரிக்கிறான்.

**கம்ச:** அழிந்தது நந்தகோன் கிராமம்!

-காட்சி மாற்றம்-

- நந்தகோன் கிராமம்– தேனுகாசூரனும் அறிஷ்டாசூரனும் கிராமத்தின் குடிசைகளை தீயினைக் கக்கி எரிக்கின்றனர். கிராமவாசிகள் பயந்து அலறி ஓடுகின்றனர். எங்கும் பதட்ட நிலை.
- சிறிதாமனும் வேறு பல இடையர்களும் கண்ணனையும் பலராமனையும் தேடுகின்றனர்.

**சிறிதா:** கண்ணா..கண்ணையா..:! எங்கே போய்விட்டாய்..? கண்ணா..!

**கண்ண:** என்ன சிறிதாமா..?

**சிறிதா:** நமது கிராமத்தை இருபூதங்கள் தீக்கிரையாக்கிக்கொண்டிருக்கின்றன.

**கண்ண:** என்ன...(பலராமனிடம்) அண்ணா வாருங்கள்.

எல்லோரும் செல்கின்றனர். வீடுகள் எரிகின்ற காட்சியைக் கண்டு பூதங்கள் மகிழ்ச்சியடைகின்றன.

கண்ணன், பலராமனுடன் நண்பர்கள் அங்கு செல்கின்றனர்.

**ஒருவர்:** அங்கே பாருங்கள்...எங்கும் தீ பரவிக்கொண்டிருக்கிறது.

**சிறிதா:** பலவீடுகள் எரிந்துபோய் விட்டன. அவர்கள் எல்லாவற்றையுமே அழிக்கிறார்கள் கண்ணா!

மக்கள் அல்லோல கல்லோலப் படுகின்றனர். மகிழ்ச்சியில் குதிக்கும் பூதங்களை கண்ணனும் பலராமனும் அணுகுகின்றனர். கண்ணன் மீது அவை தீயினை உமிழ்கின்றன. தீ கண்ணனைத் தீண்டவில்லை. இதனால் அவை திணறுகின்றன. பலராமன் ஒரு பூதத்தின் கையினைத் திருகும் போது மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றனர்.

கிருஷ்ணன் தன் கையிலுள்ள அக்கினி சக்கரத்தை ஏவுகிறான். பயந்த பூதம் தப்பித்துக் கொள்வதற்காக ஓடுகிறது. சக்கரம் சுழன்று சென்று அப்பூதத்தைத் தாக்கியதும் சாம்பலே எஞ்சியது. பலராமன் மற்றப் பூதத்தைச் சுழற்றி வான் நோக்கி வீச பலத்த பேரிரைச்சலுடன் வெடித்துச் சிதறுகிறது. நந்தகோன் கிராமவாசிகள் கிருஷ்ணனையும் பலராமனையும் வாழ்த்தி மகிழ்கின்றனர்.

பின்னணி:

கொடுமையே உருவான
பூதகணங்கள்
படு பாதகம் பல புரிந்தனவே!
பாரினைக் காத்திட
அவதாரமெடுத்த
பரந்தாமனால் அவை மடிந்தனவே!

-காட்சி முடிவு-

-தொடர்ந்து வரும்-

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

இவ்வாரம் (06.02.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

# மகாபாரதம்

அங்கம் 15

-காட்சி துவக்கம்-

கண்ணன் புல்லாங்குழலை ஊதுகிறான். பசுக்கள் மட்டுமல்லாமல் அந்த இசை கேட்ட கோபியரும் மயங்குகின்றனர். புட்களும் பூஞ்செடி கொடிகளும் இசையில் கட்டுண்டு கிடக்கின்றன. அவனுடைய நண்பர்களும் அவ்வாறே மயங்கிய நிலையினை அடைகின்றனர்.

-காட்சி மாற்றம்-

நந்தகோன்கிராமம். கண்ணன் மரக் கிளையிலிருந்தவண்ணம் வேணுகானம் பொழிகிறான். தண்ணீர் எடுக்கச் சென்ற ராதை கானம் கேட்டு நிலைதடுமாறுகிறாள்.

மற்றுமோர் புறத்தில் கோபியர்கள் தங்கள் பாத்திரங்களை கழுவுகின்றனர்.

ஒருத்தி: ராதாவுக்கு என்ன நடந்துவிட்டது ஏன்று தெரியவில்லையே!

அடுத்தவள்: அவள் எங்களையெல்லாம் மறந்துவிட்டாளே!

-காட்சி மாற்றம்-

ஒரு மரத்தின் கிளைகளில் கண்ணனின் நண்பர்கள் காணப்படுகின்றனர்.

சிறிதா: எனக்கு ஒன்றுமே ஓடுதில்லை. கண்ணன் நம்முடன் இருக்கும் போது அவனுடன் தர்க்கமிடுகிறோம். அவன் வராவிட்டால் பெரும் சங்கடமும் துன்பமும் மேலிடுகிறதே!

நண்ப: உண்மைதான்! கண்ணன் எம்மோடு இருக்கும்போது ஆனந்தமாக இருக்கும். இப்போதெல்லாம் அவனைக் காண்பதே அபூர்வமாகிவிட்டது.

ஷியாம்: (கண்பார்வையற்றவன்) கண்ணனை வெறும் ஊனக்கண்ணால் பார்க்காமல் மனத்தளவில் எண்ணிப் பாருங்கள்.

-காட்சி மாற்றம்-

ராதா பூங்காவின் பாதையில் செல்கிறாள். அவள் தோழிகள் ராதாவை கேலி செய்கின்றனர்.

கண்ணனின் வேணுகானம் காற்றில் தவழ்ந்து வருகிறது.

ஒருத்தி: அந்த மாயவனின் வேய்ங்குழலோசையில் மயங்காதவர் யார்?

மற்றவள்: (ராதையிடம்) ஓ...அந்த மாயாவியின் இசை உன்னை அழைக்கிறதடி. போ....!

ராதை: ஏன் நான் போகவேண்டும்? அவனுடைய இசையை நான் இரசிக்க வேண்டுமென அவன் விரும்பினால் அவனே என்னருகில் வரட்டுமே!

- இவ்வாறு கூறிய ராதை தன்னை அறியாமலே ஆடுகிறாள்– கோபியர்கள் சிரிக்கின்றனர்.

- வேய்ங்குழலின் இசையை கண்ணன் தொடர ராதை நெருங்கி வருகிறாள். கண்ணன் இசையை நிறுத்தி அவளிடம் வருகிறான்.

கண்ண: ராதா...! எங்கே ஓடப்பார்க்கிறாய்? உனக்காகவே இசைக்கிறேன். கேட்க மாட்டாயா?

ராதை: ஊஹூம்...

கண்ண: ஏன் என்னோடு கோபமா?

ராதை: இல்லையே!

கண்ண: அப்போ...காரணம்..?

ராதை: கண்ணா! உன்னுடைய இன்னிசை கேட்டவுடன் நான் என்வசமிழந்து விடுகிறேன் என்பதை அறியமாட்டாயா?

கண்ண: ஆஹா...அந்தப் பரவச நிலையினையே நான் எதிர்பார்க்கிறேன். இதோ இந்தப் புல்லாங்குழலில் நீ இசையெழுப்பு. நான் கேட்டு இரசிக்கிறேன்.

ராதை: வேண்டாம்.

கண்ண: ஏன்...?

ராதை: நீ எச்சில் படுத்தி விட்டாயே!

ராதை ஓடுகிறாள்.

கண்ண: ஓ ராதா....!

- கண்ணன் ராதையைத் தொடர்ந்து ஓடுகிறான்.
- யமுனை ஆற்றின் கரையோரம் கண்ணனும் ராதையும் பாடி ஆடுகின்றனர்.

-காட்சி மாற்றம்-

நந்தகோபன் இல்லம். யசோதாவிடம் பலராமன் வருகிறான்.

யசோ: பலராமா....எங்கே கண்ணன்?

பலரா: நானும் அதைத்தானே உங்களிடம் கேட்க வந்தேன்.

யசோ: அவனைக் கவனித்துக்கொள்ளும்படி உன்னிடம் சொன்னேன் அல்லவா?

பலரா: அவனைக் கவனிக்க எத்தனையோ பேர் இருக்கும் போது, அவன் எங்கே போய்விட்டான் என்பதைக் கண்டு பிடிப்பது சுலபமல்லவே அம்மா..!

யசோ: புதிர்போடாதே மகனே பலராமா! நேரடியாகக் கேட்கிறேன். பதில் கூறு– எங்கே கண்ணன்?

பலரா: ஓர் உண்மையைக் கூறட்டுமா அம்மா...?

யசோ: அப்போ பொய்யும் சொல்வாயாக்கும்!

பலரா: அம்மா! கண்ணன் உங்கள் உள்ளேயே குடியிருக்கிறான். உங்கள் எண்ணங்களில்....உங்கள் கண்களில்....கருத்தில் எல்லாமே கண்ணன் குடியிருக்கிறான் அம்மா!

இவற்றைக் கேட்ட யசோதா மகிழ்ச்சிப் பெருக்கால் பலராமனின் தாடைகளில் முத்தமிடுகிறாள்.

பலரா: ஆ...இந்தப் பக்கம் ஒன்று கொடுங்களேன்...அம்மா! இன்றுதான் உங்கள் அன்பினை என்னிடம் காண்பித்திருக்கிறீர்கள்.

யசோ: (பலராமனை அணைத்தபடி) ரோகினி அக்கா உண்மையில் அதிஷ்டசாலிதான்.

-காட்சிமாற்றம்-

சிறை–வாசுதேவனும் தேவகியும் இருக்கும் போது ரோகினி வருகிறார்.

தேவகி: ரோகினி அக்கா வாருங்கள்!

ரோகி: நலமாக இருக்கிறீர்களா தேவகி?

தேவகி: அதிருக்கட்டும்... யசோதாவின் கண்ணன் எவ்வாறிருக்கிறான் என்பதை முதலில் சொல்லுங்கள்.

வாசு: உண்மைதான்... எங்கள் கண்ணன் எப்படியிருக்கிறான்?

ரோகி: அவனுக்கென்ன..... பொல்லாத துடுக்குப் பயலாக வளருகிறான். ஆமாம்... கம்சன் உங்களை இன்னும் ஏன் சிறையில் வைத்திருக்க வேண்டும்...?

தேவகி: எங்கள் நிலைபற்றி என்ன...? கொடியவனின் செயல்கள் இவ்வாறு தானே இருக்கும்! கண்ணன் யசோதைக்கு அதிகம் தொல்லை கொடுக்கிறானா?

ரோகி: கண்ணனுடைய குறும்புகளோ நெடுங்கதை. நந்தகோன் கிராமம் முழுவதுமே கண்ணனின் லீலைகள் எனும் காந்த சக்தியில் கட்டுண்டு கிடக்கிறது. அவனுடைய குறும்புகளால் கோபியர்கள் சதா புகார்களை அடுக்குவார்கள். இருந்தும் அவனைக் காணா விட்டால் எதையோ பறிகொடுத்து விட்டவர்களைப் போல ஏங்கிப் பரிதவிப்பர். ஒரு நாள் இளம் பெண்கள் யமுனை நதியில் நீராடச் சென்ற போது...

-பின்நோக்கு-

யமுனா நதி. கோபியர்கள் தங்கள் ஆடைகளைக் களைந்து கரையில் வைத்துவிட்டு நீராடிக்கொண்டிருந்தனர். கரையில் வைத்த ஆடைகள் காணாமற் போய்விட்டதை ஒரு பெண் அவதானிக்கிறாள்.

கோபி1: அட கடவுளே..!

கோபி2: என்னடி அது...?

கோபி1: ஐயையோ சொல்லவே வெட்கமாயிருக்கிறதே!

கோபி3: என்னடி? சொல்லேன்!

கோபி1: அங்கு பாருங்களேன். கரையில் வைத்த நமது ஆடைகள் எல்லாம் எங்கோ மறைந்துவிட்டனவே..!

கோபியர்கள் அனைவரும் கரையைப் பார்க்கின்றனர்.

எல்லோரும்: எங்கள் ஆடைகள் எங்கே..?

கண்ணன் கோபியர்களின் ஆடைகள் அனைத்தையும் மரக்கிளைகளில் கட்டித் தொங்கவிட்டவண்ணம் சிரித்துக்கொண்டிருக்கிறான்.

கோபி1: எல்லாம் அந்தக் கண்ணனின் விளையாட்டாகத்தான் இருக்கும்.

கோபி2: உண்மையில் அவன் எங்களுக்கு நிரம்பத் தொல்லை தருகிறான்.

கோபி3: வாருங்கள் அவன் தாய் யசோதாவிடம் போய் முறையிடுவோம்.

கோபி4: எப்படிப் போக முடியும்? நமது ஆடைகளை எல்லாம் அவன் எடுத்துக் கொண்டு போய்விட்டானே.

கோபி3: அப்படியானால் எப்படிப் போகமுடியும்?

கோபி1: ஐய்யோ...யாராவது வந்துவிட்டால் என்னடி செய்வது?

கோபி2: கடவுளே! நான் அதை யோசிக்கவில்லையே!

கோபி3: அதைப்பற்றி நீயே யோசித்து பார். அவன் உன்னைத்தானே முழுமையாக ஆட்டிப்படைக்கிறவன்.

கோபி4: ஏதோ அவனைப்பற்றி ஒன்றுமே அறியாதது போல் பேசுகிறாயே! நேற்று என்ன நடந்தது? கண்ணன் வெண்ணெய் திருட வரவில்லை. நீ அவனை யாரும் அறியாமல் அழைத்துச் சென்று உன் வீட்டில் வெண்ணெய் கொடுக்கவில்லையா?

கோபி3: பொய் சொல்லவேண்டாம். நான் ஏன் அவனை வீட்டுக்கு அழைத்துச் செல்லவேண்டும்?

கோபி1: ஒரு நாளாவது தங்கள் வீட்டில் கண்ணன் வந்து வெண்ணெய் உண்ணாவிட்டால் அன்றைய தினம் அவர்கள் வீட்டுப் பசுக்கள் பாலே கொடுப்பதில்லை என்று பாருவின் அம்மா நம்புகிறாளே!

கோபி2: அந்தக் கதைகளை விடுங்கள். நமது ஆடைகளுக்கு என்ன வழி? அவன் எங்கோ அண்மையில் தான் ஒளிந்து கொண்டிருப்பான். நாம் இப்பொழுது ஏதாவது செய்தாக வேண்டும். இல்லாவிட்டால் பெரும் சங்கடத்துக் குள்ளாவோம்.

கோபி1: (கண்ணன் மரத்தின் மீது இருப்பதைக் கண்டுவிடுகிறாள்.) அதோ இருக்கிறான். அங்கே கண்ணன். கண்ணா! எங்கள் ஆடைகளைக் கொடுத்துவிடு.

எல்லோரும்: கண்ணா எங்கள் ஆடைகளைத் திரும்பக் கொடுத்துவிடு.

கோபி1: தந்துவிடு கண்ணா...

கண்ணன்: வாருங்கள் வந்து எடுத்துக்கொண்டு போங்கள்.

கோபி2: முட்டாள்தனமாகப் பேசாதே. நாங்கள் எப்படி அங்கே வரமுடியும்?

கண்ணன்: ஏன் உங்கள் கால்கள்...நடந்து வாருங்களேன்.

கோபி3: எங்களுடைய உடைகள் இல்லாமலா?

கண்ணன்: உடைகள் இன்றித்தானே ஆற்றில் இறங்கினீர்கள்!

கோபி1: அப்போ இங்கு வேறு யாரும் இருக்கவில்லையே கண்ணையா.

கண்ணன்: ஹா...ஹா....என்ன கூறுகிறீர்கள்? யாருமே இருக்கவில்லையா? எத்தனை மரங்கள்...! வீசும் தென்றல் காற்று...! இந்த யமுனா நதி! அதோ அந்த ஆகாயம்; ஆகாய வீதியில் பவனிவரும் கதிரவன். அத்தனையும் உங்கள் கோலத்தைப் பார்த்துக்கொண்டிருந்தனவே.

கோபி1: ஆனால் நீ இங்கிருக்கவில்லையே!

கண்ணன்: நானா....? எப்போது எங்கே நான் இருக்கவில்லையென்று கூறுகிறீர்கள்? அப்போதும் இப்போதும் நான் இங்கு தானே இருந்தேன். இனிமேலும் இங்கு தானே இருக்கப் போகிறேன்.

கண்ணன் புல்லாங்குழலில் இசைமாரி பொழிகிறான்.

-பின்நோக்கு முடிவு-

சிறை– தேவகியும் ரோகினியும் சிரிக்கின்றனர்.

தேவகி: உண்மையில் அவன் பெரிய குறும்புக்காரன் ஆகிவிட்டானே...! யசோதா அவனைத் தண்டிப்பதில்லையா?

ரோகினி: ஏன்– அவனுடைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த யசோதாவால் முடியும் என்று கருதுகிறாயா?

தேவகி: அடடே!

ரோகினி: தேவகி! நந்தகோன் கிராமத்தை அவன் தன்னுடைய முழுக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டிருக்கிறானே.

வாசு: உண்மையாகவா?

ரோகினி: ஆமாம். பசுக்கள் கூட மேய்ச்சலுக்குப் போவதும் வருவதும் கூட கண்ணனின் சொற்படியே நடக்கிறது. யசோதா அவனைத் திட்டுவதும் உண்டு. தண்டிக்கவும் செய்கிறாள். பின்னர் அழுது புலம்புவாள்.

தேவகி: ஆண்டவர்....அப்படியா?

ரோகினி: கோபியர்கள் கண்ணனின் குறும்புகளையிட்டு யசோதையிடம் முறையிட்டனர். கோபம் கொண்ட யசோதா கண்ணனை ஒரு தூணோடு கட்டி வைத்துவிட்டாள்....

-பின்நோக்கு-

நந்தகோபன் இல்லம். கண்ணன் தூணுடன் கட்டப்பட்டுள்ளான். யசோதா அழுத வண்ணம் வீட்டுப்பணிகளில் ஈடுபடுகிறாள்.

யசோதா: அப்படியே கிட... உனக்கு வெண்ணையும் தரமாட்டேன். உன்னைப்பற்றி வரும் முறைப்பாடுகளைக் கேட்டுக் கேட்டு போதும் போதுமென்றாகிவிட்டது. உன்னை வீட்டைவிட்டு இனிமேல் எங்கும் போகவிடமாட்டேன்.

பலராமன் வருகிறான்.

பலரா: அம்மா...அம்மா...!

யசோ: என்னிடம் உன் விளையாட்டுக்களைக் காட்டிவிடாதே! அவனுக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்று நீயும் தானே ஆசைப்பட்டாய்? ஒருநாள் முழுவதும் அவன் கட்டுப்பட்டபடி கிடக்கட்டும். அப்போதாவது இந்த நந்தகோன் கிராமத்து மக்கள் திருப்தி அடையட்டுமே!

பலரா: கண்ணனை நீங்கள்தான் அவிழ்த்துவிட வேண்டுமென்று நான் கூறவில்லையே அம்மா. அவனை அவிழ்த்துவிட என்னை அனுமதியுங்கள் என்று தானே கோருகிறேன்.

யசோ: இல்லை! உன்னை நான் அதற்கு அனுமதிக்கமாட்டேன்.

பலரா: சரி...வேண்டாம், கட்டளையிடுங்கள். நான் அவிழ்த்துவிடுகிறேனே!

ரோகி: அங்கு பாருங்களேன்! அவன் அழுகிறானே!

யசோ: நான் குருடியல்ல...! நான் நன்றாகக் காணக்கூடியதாகவே இருக்கிறது. இவன் இவ்வளவு குழப்படிக்காரனாக வளர்வது கூடவே கூடாது. அவன் என் சொல்லைக் கேட்க மாட்டேன் என்கிறான். மற்றவர்களின் வீடுகளில் புகுந்து பானைகளை உடைக்கிறான். வெண்ணை திருடுகிறான். ஊரவர்கள் என்ன சொல்லுகிறார்கள்? யசோதா இவனுக்கு உணவு கொடுப்பதில்லை, அதனால்தான் இவன் வெண்ணை திருடுகிறான் என்றும் சொல்கிறார்கள். நான் என்ன செய்ய முடியும்?

ரோகினி: யசோதா நீ அப்படிப் பேசுவது நன்றாகத் தோன்றவில்லை. ஏனைய தாய்மாரைவிட நீ கண்ணன் மீது அளவுகடந்த பாசத்தைக் கொட்டி வளர்த்துவிட்டாய்.

(பலராமனிடம்) போ மகனே-போய் அவன் கட்டுகளை அவிழ்த்துவிடு.

பலராமன் கண்ணனை நெருங்குகிறான்.

கண்ண: வேண்டாம் அண்ணா! அம்மா வந்துதான் கட்டுகளை அவிழ்க்க வேண்டும். வேறு எவரும் அவிழ்க்கக்கூடாது.

பலராமன் கெஞ்சுகிறான்.

யசோ: நான் உன்னை அவிழ்த்துவிடமாட்டேன்.

கண்ணன்: சரி நான் இப்படியே நிற்கிறேன். நான் எதுவும் சாப்பிடப்போவதில்லை. எனக்கு வெண்ணையும் வேண்டாம்.

யசோதா அழுதவண்ணம் கண்ணனின் கட்டுகளை அவிழ்த்து விடுகிறாள்.

யசோ: துடுக்குப் பயலே! நான் தோற்றுவிட்டேன். நீதான் வென்றுவிட்டாய்.

யசோதாவின் கண்ணீரை கண்ணன் துடைத்துவிடுகிறான். அவள் அவனை வாரி அணைக்கிறாள்.

-பின்நோக்கு முடிவு-

சிறை–வாசுதேவனும் தேவகியும் ரோகினியிடம் கதைகூறிக்கொண்டிருத்தல்.

ரோகினி: கண்ணனின் கட்டுகளை யசோதா அவிழ்த்துவிட வேண்டியதாயிற்று. கண்ணன் அவளுடைய கண்ணீரை வாஞ்சையோடு துடைத்துவிட அவளுடைய கண்ணீர் மேலும் பெருகிக் கொண்டேயிருந்தது.

தேவகி: இதுகளுக்கெல்லாம் யசோதாவுக்கு என்ன கைமாறு செய்யப் போகிறேனோ...!

வாசு: இது கைமாறு எதிர்நோக்கும் கடமையல்லவே யசோதா! இவை மறுக்க முடியாத பணிகள் அல்லவா? இவற்றையெல்லாம் கடன் என்று கணிப்பது நியாயமல்ல.

ரோகி: நீங்கள் கூறுவது முற்றிலும் சரியானதே! இப்பணிக்கு நீ கைமாறு செய்ய வேண்டுமென்றால் இன்னும் ஏராளமானவர்கள், வரிசையில் காத்துநிற்பார்களே! யசோதா மட்டும் கண்ணனிடம் அன்பு மழை பொழிந்தாளா? நந்தகோன் கிராமத்திலுள்ள அத்தனை பசுக்களும் அவன் மீது அன்பைச் சொரிகின்றனவே! அந்த 12 வயதுப் பாலகன் சாதாரண மனிதக் குழந்தையல்ல- நந்தகோன் கிராமத்தைக் காத்தருளும் தெய்வமாகவல்லோ கருதப்படுகிறான்!

-காட்சிமாற்றம்-

நந்தகோன் கிராமத்தில் ஒரு மரத்தடியில் கண்பார்வையற்ற ஷியாம் சகா நிற்கிறான். கிருஷ்ணன் அங்கு வருகிறான்.

கண்ண: நண்பனே! என்ன இங்கே தனியாக நிற்கிறாய்?

ஷியாம்: என்னை எல்லோரும் விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். நான் வேறு என்ன செய்ய முடியும்? எனக்குத்தான் கண் தெரியாதே!

கண்ண: உனக்கு பார்வையில்லை என்று யார் சொன்னார்கள்?

ஷியாம்: எல்லோரும்தான்...ஏன் நானே அறிவேனே!

கண்ண: மனிதர்கள் எல்லோருமே பாதிக் குருடர்கள்தான். எதனைக்காண வேண்டுமோ அதனைவிட்டு விட்டு வேண்டாதவற்றைத்தான் பார்ப்பார்கள்.

ஷியாம்: நான் என் கிருஷ்ணனைத்தான் பார்க்க விரும்புகிறேன்.

கண்ண: அவனை ஒருநாள் நீ கண்டிப்பாய்க் காண்பாய்!

ஷியாம்: எப்போது? எந்த நாளில்?

கண்ண: என்மீது உனக்கு நம்பிக்கை இல்லையா? என்றோ ஒருநாள் உன் கண்கள் பார்வையைப் பெறும் என்று சொன்னேன் அல்லவா?

ஷியாம்: இந்த உலகில் நம்பிக்கை தரத்தக்க ஒருவன் நீ மட்டும்தானே கண்ணா?

கண்ண: சரி....உன் கண்ணன் எப்படியிருப்பான்? சொல்லு பார்க்கலாம்!

ஷியாம்: கார்மேக வண்ணன்... இருளிலும் குளிர்நிலவினை ஒத்த கண்கள்.... தலையில் மயிலிறகு.... தங்க வர்ணப் பட்டாடை... இடையில் புல்லாங்குழல்... உன் வலது தாடையில் அழகூட்டும் மச்சம்...ஆமாம்... கண்ணா! உனது வலக்கரத்தில் சக்கரம் போல ஒன்று சுழல்கிறதே..! அது என்ன கண்ணா?

கண்ண: அது என்ன என்று பின்னர் நீ அறிவாய். இப்பொழுது வா என்னுடன்..!

ஷியாம்: எங்கே...?

கண்ணன்: நம் கிராமத்திலிருந்து மதுரா நகர் செல்லும் வெண்ணையைத் தடுக்க வேண்டும்.

ஷியாம்: எங்கே வேண்டுமோ....அங்கே என்னை அழைத்துச்செல்....

-காட்சி மாற்றம்-

மதுராபுரி செல்லும் பாதை. கோபியர்கள் வெண்ணைக் குடங்களுடன் செல்கின்றனர். மறைந்திருந்து பார்த்த கிருஷ்ணனும் ஷியாமாவும் அவர்கள் செல்லும் பாதையில் வழி மறிக்கின்றனர்.

கண்ணன்: இன்றுமுதல் மதுராவுக்கு வெண்ணை அனுப்பலாகாது.

கோபி1: நந்த குமாரனே! வழிவிடுங்கள். பொழுதேறிப்போய்விடும். சூட்டினால் வெண்ணை உருகிவிடும். அதன்பின் கம்ச மகாராஜாவின் கடும் கோபத்துக் குள்ளாக வேண்டும். இதனை எங்களால் கற்பனை செய்து பார்க்கவே முடியாது.

கோபி2: கம்சனின் கோபம் எத்தகையது என்று உனக்குத் தெரியாது கண்ணா..! நமது நந்தகோன் கிராமத்தையே எரித்துவிடுவான்.

ஷியாம்: யமுனா நதி இருக்கும்போது கிராமத்துக்கு எப்படித் தீமூட்ட முடியும்?

கோபி2: இதெல்லாம் உங்களுக்குப் புரியாது. போய் விளையாடுங்கள்.

கண்ண: இதுவும் ஒரு விளையாட்டல்லாமல் வேறல்ல.

கண்ணனின் நண்பர்கள் அனைவரும் மறைவிடங்களிலிருந்து வெளிவருகின்றனர்.

கண்ண: வாருங்கள் நண்பர்களே! மதுராவுக்கு இனிமேல் வெண்ணை அனுப்பலாகாது. நாங்கள் பசுக்களை வளர்க்கிறோம்...பால் கறக்கிறோம்...வெண்ணை கடைகிறோம். ஆனால் வெண்ணையினை மதுராபுரி மன்னனிடம் கொண்டு செல்கிறீர்கள்! இது என்ன நியாயம்?

சிறிதா: ஆமாம்....இது நியாயமேயில்லை.

கோபி1: கண்ணா! கம்சனின் நீதிபற்றி அவ்வளவு சுலபமாகக் கணக்கிட்டு விடாதே!

மற்றவர்கள்: ஆமாம்....

கண்ண: நான் வலியுறுத்துகிறேன். இனிமேல் நந்தகோன் கிராமத்து வெண்ணை மதுராபுரி செல்லலாகாது.

ஒருவர்: அவ்வளவு பிடிவாதம் கூடாது கிருஷ்ணா..!

கோபி4: கண்ணா! உன் அப்பாவிடம் போய்க் கேட்டுப்பார். நாங்கள் வெண்ணையை வெறுமனே கொண்டுபோய் மதுராவில் கொடுக்கவில்லை. இது எமது கிராமத்தவர்கள் செலுத்த வேண்டிய திறை. வரிகொடுப்பது போல்தான் வெண்ணையைக் கொடுக்கிறோம்.

கண்ண: நீங்கள் செலுத்தும் வரிக்குப் பிரதியாக அரசர் உங்களுக்கு என்ன கைமாறு செய்கிறார்? உங்களைக் காப்பாற்றுகிறாரா? வரட்சி காலத்தில் உதவி புரிகிறாரா? இல்லையே! அப்போது ஏன் வரி? மக்களுடைய துன்பதுயரங்களில் பங்கு கொள்ளாத- உதவிபுரியாத எந்த மன்னனுக்கும் வரி வசூலிக்கும் உரிமை கிடையாது. வெண்ணைக் குடங்களை திரும்ப எடுத்துச் செல்லுங்கள்!

-காட்சி மாற்றம்-

நந்தகோபன் இல்ல முற்றம்– வெண்ணைப் பாத்திரங்களுடன் கோபியர்களும் கிராமத்துப் பெரியவர்களும் நந்தகோபனைச் சூற்றி நிற்கின்றனர்.

ஒருவர்: நந்தராஜா! உங்கள் மகன் பெரும் பிரச்சனை ஒன்றைத் தோற்றுவித்துள்ளார். இதற்கான தீர்வினை தாங்கள் தான் வழங்க வேண்டும்!

நந்த: நான் என்ன சொல்ல முடியும்? என் கதைகளை அவன் கேட்பதில்லையே! யசோதாவிடம் போய் சொல்லிப் பாருங்கள்.

கோபி: வேண்டாம். யசோதாவிடம் சொன்னால் கண்ணனை அவள் திட்டுவாள். அடிப்பாள். நந்தாஜி நீங்களே கண்ணனிடம் நிலமையினை விளக்கிப் பாருங்கள்.

ஒருவர்: மதுராவுக்கு வெண்ணை எடுத்துச் செல்லலாகாது என்று அவர் சொன்னால், அது எடுத்துச் செல்லப்படலாகாது. அவ்வளவு தான்.

மற்றவர்: இதனால் என்ன விளைவு ஏற்படும் என்று தெரியுமா?

மூன்றாமவர்: அவருடைய பிடிவாதத்துக்கு விட்டுக்கொடுத்துவிட முடியுமா?

முதலாம்: நந்தராஜ்! இதனை கம்ச மன்னன் ஒரு புரட்சி என்றே கருதிவிடுவார் அல்லவா?

கோபி: முதலில் கண்ணன் கன்றுகளை அவிழ்த்து தாய்ப்பசுக்களிடம் பால் பருக விடுகிறான். பின்னர் வெண்ணை எங்கே இருக்கிறது என்பதனை மோப்பம் பிடித்துச் சென்று அவற்றை தனது நண்பர்களுக்குப் பங்கிடுகிறான்.

ஒருவர்: பானைகளையெல்லாம் போட்டு உடைக்கிறான். இதையெல்லாம் சிறு பிள்ளையின் குறும்பு என்று நாங்கள் கருதிவிடலாம். ஆனால் மதுராவுக்கு அனுப்பவேண்டிய வெண்ணை அங்கு போய்ச் சேரவில்லையானால் என்ன ஏற்படும் என்பதனை எண்ணிப்பாருங்கள் நந்தாஜி!

இரண்: கம்சனைப் பற்றி நீங்கள் நன்கு அறிவீர்கள்தானே!

மூன்றா: நந்தகோன் கிராமத்தை விட்டால் வேறு எங்குதான் நாங்கள் செல்ல முடியும்? கண்ணனை கொஞ்சம் எச்சரித்து வைக்கும்படி யசோதாவிடம் கூறிப்பாருங்கள் நந்தராஜா!

கண்ணன் வருகிறான்.

கண்ண: அப்பா..! சிறுவர்களுக்குத்தான் வெண்ணை மீதான பாத்தியதை உண்டு...மன்னனுக்கல்ல...!

நந்த: ஆனால்...கண்ணா...!

கண்ண: சிறுவர்கள்தான் பிரதானமானவர்கள் என்றில்லையானால்...என்தாய் என்னை 'ஏன் அன்புள்ள இளவரசனே' என்றழைக்க வேண்டும்?

நந்த: கண்ணா..! அன்புள்ள இளவரசனே என்று அழைப்பதற்கும் ஒரு மகாராஜாவுக்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கிறது மகனே! அம்மா வெண்ணை தரவில்லையானால் மகன் படையுடன் சென்று அம்மாவைத் தாக்கத் துணிவானா? நாம் அரசனுக்கு திறையாக பாலும் வெண்ணையும் அனுப்பியாக வேண்டும். புரிகிறதா மகனே...!

கண்ண: குடிமக்களை வறுமையில் உழலவிடும் எந்த மன்னனுக்கும் அம்மக்களிடம் வரி வசூலிக்கும் தகுதி கிடையாது அப்பா. குடிகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவே மக்கள் மன்னனுக்கு திறை கொடுப்பார்கள். நம் கிராம மக்களின் தேவைக்குப்பின் எஞ்சிய வெண்ணையினை வேண்டுமானால் மன்னனின் மாளிகைக்கு அனுப்புங்கள். இதனைச் செய்யவில்லையானால் நான் இனிமேல் ஒருபோதும் வெண்ணை உண்ணமாட்டேன்.

நந்த: அவ்வாறு பிடிவாதம் பிடிக்கலாகாது கண்ணா!

கண்ண: எனக்கு எந்தச் சாக்கும் தேவையில்லை.

கோபித்துக்கொண்டு கண்ணன் வெளியேறுகிறான். யசோதா "கண்ணா..... கண்ணா" என்றழைத்த வண்ணம் அவன் பின் ஓடுகிறாள்...

18ம் பக்கம் பார்க்க...

www.padippakam.com


பெண்களின் அழகோ இரகசியம்!

அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.



அருள் ஜுவலர்ஸ்

இல. 3, செட்டியார் தெரு, கொழும்பு–11

தொலைபேசி: 436331



## புவி மகிழும் புல்லாங்குழல் ஓசை

[illegible]



[illegible]

## நீ...ண்...ட... .கேக்!



[illegible]

## தங்க முட்டை தரணியில் சாதனை!



[illegible]


வாரமலர் தினமுரசு



## கப்பல் சிறிது வேகம் பெரிது

[illegible]

## உயரமான குடியிருப்பு



மக்கள் தொகை அதிகமாகி வருகிறது. அதனால் குடியிருப்புகள் பற்றாக்குறையும் ஏற்பட்டுவருகிறது. கொழும்பிலகூட இட நெருக்கடி. அதனால் வாடகை அதிகம் கொடுத்து நம்மவர்கள் நச்சு வீடுகளுக்குள் குடியிருக்கும் நிலை. ஆனால் வெளிநாடுகளில் இடப் பற்றாக்குறையைத் தீர்க்க புதிய வழிகள் கண்டுபிடிக்கிறார்கள். மாடிமேல் மாடி கட்டுகிறார்கள். படத்தில் உள்ளது அமெரிக்காவின் சிக்காக்கோ நகரத்தில் உள்ள 70 மாடிக்கட்டடம். இதன் உயரம் 194.8மீட்டர் (639 அடி). லேக் பொயின்ட் டவர் என்பது இந்தக் கட்டிடத்தின் பெயர். உலகில் குடியிருப்புக்களுக்கு கட்டப்பட்ட மிக உயர்ந்த கட்டிடம் இதுவரை இதுதான். அதுவே சாதனை.

## அட கமரா வலம்

குறும்புகளின் இருப்பிடம்தானே மாணவப் பருவம்!

ஐமாய்க்கிறார்கள்!

பொறாமையாக இருக்கிறது.

படம் தந்தது – [illegible]





[illegible]